
ஆடி 2004 களம் 11 ஏர் 1


# கலப்பை

KALAPPAI 41 2.50



10 வது ஆண்டு

சிறப்பு மலர்


PARK VIEW MEDICAL CENTRE
26/12-16 Toongabbi-e Road,
Toongabbie, NSW - 2146
Emergence
Women's Health
Antenatal Care
Minor Surgery
Pathology Blood Tests
Worker's Compensation
In House Physiotherapy
X-Ray Services
(Open 7 Days Next Door)
ECG
Child Health
Immunisation
Strees Management
Allergey Tests
Dr. Jey Chandran
Dr. Shanthini Seelan, Dr. Thava Seelan,
Dr. Lumina Titus
Opening Hours : Mon - Fri .......... 8.00 am - 8.00 pm & Sat ......... 9.00 am to 4.00 pm
Phone : 02 9636 7757
Bulk Billing Open 6 Days


We Deliver
Artistic
Perfection
Creative Innovations
&
Customer Satisfaction
Our
Valuable
Customers
Include...
Mithra Arts & Creations Pvt.Ltd.
32/9 Arcot Road Kodambakkam, Chennai 600 024 INDIA
Phone : 91 44 2372 3182 Direct : 91 44 2473 5314 Fax : 91 44 2472 1336
E-mail : mithra2001in@yahoo.co.in
Annamalai University
Madurai Kamarajar University (Projects)
Women & Children Foundation Ltd
(Hospitals)
Seafarers Club (Shipping Office, Harbour)
Pulse Communication
Zee Tech World
Padithurai Tamil Monthly Magazine
Aadhi Tamil Magazine
in Chennai
*
Kalappai Magazine
Akkini Kunchu Monthly
NSW Tamil Guide
IG Group Consulting
Pyramid Video & Spice
Toongabie Medical Practice
in Australia
Our Customers are from
Malaysia, Singapore, Canada, France
Germany, Denmark, Norway,
England etc.,

மனித மனத்தை உழுகின்ற

**கலப்பை**

உலகத் தமிழர்தம் உணர்வை

உயர்த்தி நிற்கும்

●

**கலப்பை**

அவுஸ்திரேலியப் பட்டதாரிகள்

தமிழர் சங்க ஆதரவில் வெளிவரும்

காலாண்டுச் சஞ்சிகை

●

தனிப்பிரதி : Aus. $2.50

ஆண்டுச் சந்தா

உள்நாடு : Aus. $10.00

வெளிநாடு : Aus. $20.00

●

பிரசுரிக்கப்படாத படைப்புகளைத்

திரும்பப் பெற இயலாது.

ஆசிரியர் குழுவுடன்

தொடர்புகொள்ள.....

**Tele : (02) 4737 9007**

●

**KALAPPAI**

P.O. Box 40,

Homebush South, NSW 2140

AUSTRALIA

E-mail : kalappai@yahoo.com

●

அட்டைப்படம் வடிவமைப்பு

நேசராஜா பாக்கியநாதன்

●


# உள்ளே...


| | |
|---|---|
| உழவன் உள்ளத்திலிருந்து | 2 |
| அமுதனைய செந்தமிழை வளர்த்து வாழி | 4 |
| நெஞ்சறுந்த வீடு (கவிதை) | 5 |
| சுகந்த விருட்சம் (சிறுகதை) | 6 |
| புலம்பெயர்ந்த எழுத்தாளர்... | 18 |
| குழந்தைகளே ஆன்மிகம்.... | 24 |
| How to Breathe.... | 29 |
| மனமாற்றம் | 35 |
| உங்கள் சிந்தனைக்கு | 37 |
| தாயிற் சிறந்த கோயில் இல்லை | 39 |
| இப்படியும் தவறுகள்.... | 42 |
| நூலாசிரியர் குறிப்புரை | 44 |
| தொடங்குதல் (கவிதை) | 45 |
| கவியரங்கம் | 46 |
| புலம்பெயர்ந்த தமிழ்ச்சிறார் | 56 |
| விடியும் வரை கனவுகள் | 58 |
| த. இராசலிங்கம் கவிதைகள் | 60 |
| பொல்லாத பசி | 68 |
| தமிழ்ப் பண்பாடு | 71 |
| தீபாவளி (கவிதை) | 78 |
| நட்பு (கவிதை) | 80 |


# உங்கள் உள்ளங்களில்

## எமது பார்வையில்...

புலம்பெயர்ந்த நாடுகளில் மெல்லத் தமிழ் இனி சாகும் என்று மேடைகளில் முழங்கிய காலம் அது. பலரது எதிர்பார்ப்பையும் தூண்டிய அக்கினிக் குஞ்சு, மரபு என்ற சஞ்சிகைகள் அவுஸ்திரேலியாவில் வெளிவந்ததும், அவை நின்றுபோனதும், ஆயிரத்துத் தொள்ளாயிரத்து தொண்ணூறுகளின் ஆரம்பத்திலேயே, இந்தச் சவால்களுக்கு மத்தியில், சிட்னிப் பல்கலைக்கழக தமிழ் மாணவர்கள் கலப்பை என்ற இந்தக் காலாண்டுச் சஞ்சிகையை வெளியிடத் தொடங்கினர். இங்குள்ள தமிழ்ச் சிறார்களுக்கென தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகளையும் ஆரம்பித்தனர். தாயக நினைவுகளுடன் வாழும், இந்த இளைஞர்கள், தாயகத்தில் வாழும் எமது தமிழ்ச் சகோதரங்களுக்கு உதவிவருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

கலப்பையின் முதலாவது வெளியீட்டுவிழா 1994ம் ஆண்டு ஆடி மாதம் ஹோம்புஷ் ஆரம்ப பாடசாலையில் கோலாகலமாக நடைபெற்றது. மனித மனங்களை உழுது, உலகத் தமிழர்தம் உணர்வை உயர்த்தி நிற்கவேண்டும் என்பதே அதன் கோட்பாடு. முக்கால நிகழ்வுகளையும் உள்ளடக்கி சமுதாய சீர்திருத்தத்திற்காக பாடுபடவேண்டும். இளைஞர்களுக்காக ஆரம்பித்த இச்சஞ்சிகை அவர்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்யக் கூடிய ஆக்கங்களையும் கொண்டிருக்கவேண்டும் என்பவை கலப்பையின் நோக்கமாக இருக்கின்றது.


இன்று பத்தாவது ஆண்டு நிறைவை கொண்டாடும் கலப்பை, தன் நாற்பத்தியொராவது இதழை விரித்திருக்கின்றது. ஐம்பதிற்கு மேற்பட்ட எழுத்தாளர்களின் நானூற்று ஐம்பதுக்கு மேற்பட்ட படைப்புக்களையும் தாங்கி வெளிவந்த கலப்பை சஞ்சிகை இன்று சர்வதேச சஞ்சிகையாகத் திகழ்கின்றது. பல தொடர்கதைகளும்,



தொடர் கட்டுரைகளும் வாசகர் பாராட்டுக்களைப் பெற்றவை. கலப்பை பல புதிய இளம் எழுத்தாளர்களை தமிழ் உலகிற்கு அறிமுகப்படுத்தியிருக்கின்றது.

கலப்பை சஞ்சிகையுடன் ஒப்பிடும் வகையில் பல்கலைக் கழக மாணவர்களின் வெளியீடுகள் வேறு எதுவுமில்லை என்றே கூறவேண்டும். புலம்பெயர்ந்த நாடொன்றில், பல்கலைக்கழக மாணவர்களின் முயற்சியில் பத்து வருடங்களுக்கு மேலாக வெளிவரும் தமிழ்-ஆங்கிலக் காலாண்டுச் சஞ்சிகை என்றால் அது கலப்பை ஒன்றே. அத்துடன், இதுவரை காலமும் வாசகர்கள் வாங்கிப் படிக்கும் ஒரே ஒரு தமிழ் வெளியீடு. கலப்பையே என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

பல்கலைக்கழக மாணவர்களின் அரிய முயற்சிக்குத் தடை நேர்ந்தபோது, இந்த சஞ்சிகையின் வெளியீட்டுப் பணியை அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம் பொறுப்பேற்றது. கடந்த பத்து வருடங்களாக வெளி வரும் கலப்பை சஞ்சிகையின் வளர்ச்சிக்கும், வாழ் வுக்கும் பலர் உறுதுணையாக உள்ளனர். இத்தருணத்தில், கலப்பையின் வாசகர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும், அபிமானிகளுக்கும் எமது உளங்கனிந்த வாழ்த்துக்களையும், நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம். கலப்பை ஆரோக்கியமானதாக, மேலும் பல வளர்ச்சிப்படிகளில் ஏறவேண்டும் என்பதும், இதன் மூலம் எமது தமிழ்ச் சமுதாயத்திற்கு தொடர்ந்தும் சேவை செய்யவேண்டும் என்பதும் எமது அவா.



# அமுதனைய செந்தமிழை வளர்த்து வாழி

மழைத்தூறல் ஈரமதில் முளைக்குங் காளான்
மறைவதுபோல் அல்லாது கலப்பை ஏடு
சளைக்காது மெய்சோரா(து) ஊக்கம் குன்றாத்
தகைமைசால் தமிழன்பர் தரும்பங் களிப்பால்
கிளைத்துமா விருட்சம்போற் செழித்துக் கீர்த்தி
கிளர்த்தியே கலப்பிலாத் தூய்மை காத்து
அழைத்தெங்கள் சோதரரை அன்பாற் பிணைத்து
அமுதனைய செந்தமிழை வளர்த்து வாழி!

உதயகிரி போல்ஒளிரும் சிட்னி நகரில்
உறுதியுடன் கலப்பைதான் ஓம்பு வோரே
மதமெதிலும் பிரிவெண்ணா உறுதி பூண்டு
மனதார தமிழ்வளர்க்கச் சபதம் ஏற்று
இதரமொழிச் செல்வங்கள் ஆய்ந்தே எங்கள்
இன்றமிழுக் கேமெருகு ஊட்டி நிற்பீர்
அதரமதில் உதிக்குஞ்சொல் தனித்தமிழாய்
அனுதினமும் மிளிர்வதிலே இன்பம் காண்பீர்!

●

பல்வைத்திய நிபுணர்
கலாநிதி. பா.சோ. பாரதி

# நெஞ்சறுந்த வீடு

திருவாசகன்

கருங்கல் மூன்று பதித்த வாசல்
முப்பதுபேர் அமரும் தடுக்கு கட்டிய
ஒரு பக்கத் திண்ணை

தாழ்வாரம் இறக்கிய சமையற்கட்டு
எரவானம் சொருகிய மத்து, கத்தி,
ஊதுகோல், இடுக்கி...

பூசிமெழுகிய மூன்றடுப்புமேடை
பாட்டியின் பழைய புடவையின்
முந்தானைக்கரைத் திரியுடன்
சிம்னி விளக்கு

கறுப்பேறி மூலையில்
சாத்தப்பட்டிருக்கும் தாளிப்புக் கரண்டி
மண்ணரிச்சுப்போன கல்உப்புச் சட்டி

பூசி மெழுகி சாணம் பதிஞ்ச வீடு
வீசிபெருக்கி வகிடெடுத்த வாசல்
கூட்டிப் பெருக்கி
குப்பை சேர்த்த குட்டை

ஓடிப்புடிச்சி விளையாட
ஒளிந்துகொள்ள வாட்டமான்
வண்ணாஞ்சால்!

எட்டுப் பானை வரிசையோட
ஏழடுக்குப் பானை வச்ச பழங்காலம்
முட்டிபோட ஏறிநின்னு
மூச்சு முட்டும் நெற்குதிரு!

தொகுப்பு வீடுகட்டித்
தொந்தரவு செஞ்சாங்க
நாங்க வளத்த வீடுகள
நெஞ்சறுத்துப் போனாங்க!

மஞ்சறுத்துக் கட்டிய வீடு
எங்க மனசோரம் நிக்குது
கல்லறுத்துக் கட்டிய கவர்மெண்ட்டுவீடு
இப்போ நிக்குது
ஒரு கதவுகூட இல்லாம!
❑




சிறுகதை பகுதி 2



# சுகந்த விருட்சம்

# சாயி சசி



## இதுவரை....

....மேற்படிப்புக்காக ஆஸ்திரேலியா வந்த இடத்தில் பாரதியின் அம்மாவுக்கு உடல் நலம் குன்றி ஆபரேஷன் செய்ய வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. பணத்திற்கு என்ன செய்வதெனத் தவித்த வேளையில் அவளது தோழி ப்ரீதியின் உதவி கிடைக்கிறது. ஆனால் அதை அம்மா கண்டிப்பாக மறுக்கிறார். அதற்கான காரணத்தை அறிந்த பாரதி இன்பமும் துன்பமும் ஒருங்கே அடையப் பெறுகின்றாள். ..........

இருவரையும் பார்த்த ப்ரீதிக்குத் தந்தை மேல் கோபம் வந்தது. பாரதியை விட்டுவிட்டு வீட்டுக்குப் போனாள் அங்கே அவள் தந்தை இலக்கற்று எங்கோ வெறிக்கப் பார்த்துக்கொண்டு விழிநீர் சோர இருப்பதைக் கண்டு வருந்தினாள். தவறை உணர்ந்தால் மன்னிப்பு கிடைக்குமாம். இவர் கண்ணீர் இவரை மன்னிக்குமா? எனத் தனக்குள் நினைத்துக்கொண்டு எதுவுமே பேசாமல் உள்ளே போனாள்.

அபர்ணாவைப் பார்த்துவிட்டு வந்த விஜய்க்கு இதயமே வெடித்து விடும்போல் இருந்தது. அவள் நாலு வார்த்தை திட்டியிருந்தாலோ அல்லது அவர் முகத்தில் காறி உமிழ்ந்திருந்தால் கூட அவர் அதை மிகவும் மகிழ்ச்சியாகத் துடைத்துப்போட்டு விட்டு வந்திருப்பார். ஆனால் அவள் பார்க்காமலும், பேசாமலும் அல்லவா அவரைத் தண்டித்தாள். அபி எப்பொழுதும் அப்படித்தான் என இப்பொழுது நினைத்துக் கொண்டார். சிறுவயதில்கூட அவர் தவறு செய்தால் அவள் பேசாமல்தான் தண்டிப்பாள். அவை எவ்வளவு மதுரமான நாட்கள். ஓடி, ஓடிச்சந்தித்ததும் ஒளிந்து, மறைந்து பேசிக்கொண்டதும் சங்கேத மொழிகள் பரிமாறிக் கொண்டதும், எதையுமே மறக்கவில்லை அவர். அந்த நாட்களில் ஒரு நாளைக்குச் சந்திக்காவிட்டாலும் எவ்வளவு மனக்கஷ்டம். சந்தித்தபோது பேச எவ்வளவு இருந்தது, நேரம்போவதே தெரியாமல் என்னவெல்லாம் பேசினார்கள். இருவரும் பாடசாலையிலிருந்து ஒரே பஸ்ஸில் ஒருவர் பஸ்க்குள் முதலே ஏறி இருப்பது மற்றவருக்குத் தெரியாமல் ஏறி வந்து இறங்கியதைக் கண்ட யாரும் அபியின் அம்மாவிடம் போட்டுக் கொடுத்தால் அன்று அவளுக்கு மண்டகப்படிதான். அவ்வளவுக்கு அவர்கள் காதலும் பெற்றோரின் எதிர்ப்பும் அந்தக் கிராமத்தில் மிகவும் பிரபல்யம் அடைந்திருந்தது. பாவம் அபி.

அதேபோல் எத்தனை தண்டனை களைத் தாங்கியிருப்பாள். அவள் அவர்மேல் கொண்ட காதலின் மகத்துவம் விஜய்க்கு நன்குத் தெரிந் திருந்தது. பெற்றவர்களை எதிர்த்து எதுவும் செய்ய ஆயத்தமாக இருந் தாள். பல்கலைக்கழகம் போகும் வரை அவருக்கும் அப்படித்தான் இருந்தது. அதன்பின் இதெல்லாம் ஒரு பருவ மயக்கம். இதற்குப் போய் யாரும் நேரத்தை வீணாக்குவார் களா? என நினைக்கத் தோன் றியது. அபியின் அன்பில் தோய்ந்த கடிதங்களையெல்லாம் அலட்சியம் செய்தார். அதைக்கூட அவள் நல்ல விதமாகத் தானே நினைத்தாள். உங்களுக்கு நேரமில்லாவிட்டால் என்ன செய்வது விஜய் என்பாள். அவர் விடுதலையில் வரும்போது அவரைப் பார்ப்பதில் அவளுக் கிருந்த ஆர்வமும் உள்ளக் கிளர்ச்சி யும் விஜய்க்கு இருக்கவில்லை. ஆனால் ஒப்புக்குச் சந்தித்துச் சிறிது நேரம் பேசியபின் உன் அம்மா தேடுவார் போ அபி என அனுப்பிவிடுவார். அதைக் கூட அவள் தவறாக எடுக்கவில்லை. என்ன வெகுளித்தனம்? இவை யெல்லாம் அவளது அபரிமிதமான அன்பின் பரிணாமம் என்பது இன்று புரிந்த அளவு அன்று பருவ மயக்கத்தில் புரியவில்லை.

படித்து முடித்து வேலை கிடைத்துக் கொழும்புக்கு வந்தபின் அதே அலுவலகத்தில் வேலை செய்த மோனிக்கா, திலக் போன் றவர்களின் நட்பு கிடைத்தது. எப் பொழுதும் நல்லவர்களின் சேர்க் கை வேண்டுமென்று எல்லாப் பெரியோர்களும் ஏன் புராண இதிகாசங்கள்கூட இயம்புகின்றன. ஆனால் விஜயின் அந்தச் சேர்க்கை நல்லதாக அமையவில்லை. அவை அவரை அழிவை நோக்கி இட்டுச் சென்றன. அவர்களுடன் சேர்ந்த தால் மது, சிகரெட் போன்ற பழக் கங்களும் விஜய் இடம் வந்து சேர்ந்தன. மோனிக்காவின் அரை யும் குறையுமான உடையில் கிரா மத்துப் பண்பில் வளர்ந்த அபியி டம் காணாத கவர்ச்சியைக் கண் டார். அபி இறைவன் பாதங் களில் சமர்ப்பிக்கப்படும் ஒரு மல் லிகை மலரென்றால் மோனிக்கா விஷமிக்க முட்கள் கொண்ட தாழம்பூ எனப் பகுத்துணரத் தவறி விட்டார். அதனால் இவளல் லவோ பெண். நவயுக நாகரீக நங்கை. அது என்ன பட்டிக்காடு. எண்ணெய் வழியத் தலையைக் கட்டிக் கொண்டு, ஒரு தாவணி அல்லது சீலையைச் சுத்திக் கொண்டு நிற்கும். ஏதாவது உருப் படியாகச் செய்யத் தெரியுமா? இது வரை காலமும் அதனிடம் போய் மயங்கிக் கிடந்தேனே! காதல் இன் றேல் சாதல் என நினைத் திருந் தேனே! என்ன முட்டாள்தனம். மோனிக்காவைத்தான் திருமணம் செய்ய வேணும், அப்பொழுது தான் வாழ்வு பசுமையாக இருக் கும். அபியை மெதுவாகக் கழற்றி விட வேண்டுமென விஜய் நினைத்த வேளையில் அபி "இராமன் இருக்குமிடமே சீதைக்கு அயோத்தி" என மிகவும் சிரமப்பட்டு அந்தத் தனியார் நிறுவனத்தில் வேலை எடுத்துக்கொண்டு பெற்றவர்களின் பிரிவைக்கூடச் சிறிதும் பொருட் படுத்தாது கொழும்பை வந்த டைந்தாள். அது விஜய்க்கு ஒரு பிரச்சனையாக இருந்தது. இரண் டொரு தடவை அபியும் மோனிக் காவும் சந்தித்த போதும், அது என்னுடன் வேலை செய்யும் பெண் என்று சொல்லித் தப்பிக் கொண்டார்.

அபியின் வெகுளித்தன மும், அவள் விஜயிடம் கொண்ட மட் டற்ற காதலும் அதனால் வந்த அசையாத நம்பிக்கையும் அனைத்

திற்கும் வெகுவாகக் கை கொடுத்தன. இவற்றையெல்லாம் கவனித்த அருண் பெற்றவர்களிடம் சொல்லித் திருமணத்தை நிறுத்த முயன்றான். ஆனால் அபி விட்டால்தானே. விஜய் மறுப்புச் சொல்ல நினைத்த போது மோனிக்கா இடையே புகுந்து "அவளைத் திருமணம் செய்தால் உனக்குச் சீதனம் கிடைக்கும். அந்தப் பணத்தைக் கொண்டு நாங்கள் நோர்வே போய் சந்தோஷமாக இருக்கலாம். உடனே போய்ச் சம்மதம் சொல்" என்றாள். விஜய்யும் அவள் சொன்ன படியே அபியை மணக்கச் சம்மதித்தார். அபிக்காக இல்லை அவள் பணத்துக்காக என நினைத்த போது இன்று தொண்டைக்குள் எதுவோ அடைத்தது. நெருஞ்சி முள்ளால் குத்தியது போல இதயம் ரணப்பட்டு ரத்தம் கசிந்தது. ஆனால் அன்று அது தேனாக இனித்தது. அதனால் அவள் சொன்னபடியே அபிக்குத் தெரியாமல் அவளது பணத்தைப் பயன்படுத்தி எல்லா ஆயத்தங்களும் செய்து கொண்டு நோர்வே சென்றனர்.

இப்பொழுது நினைத்தால் அவமானமாக இருக்கிறது. நானா அப்படிச் செய்தேன் என்று நினைக்கத் தோன்றுகின்றது. ஆனால் அன்று மோனிக்காவின் சொல் வேதவாக்காக இருந்தது. அவள் சொன்னபடியெல்லாம் ஆடினார். நோர்வேயில் மோனிக்கா ஒரு குழந்தை பிறக்கும்வரை தான் அவருடன் இருந்தாள். அதன் பின் ஒருநாள் இரவோடிவராகக் குழந்தையையும் விட்டுவிட்டுத் திலக் உடன் கனடா சென்று விட்டாள்.

வீட்டிலிருந்த கைக்கு அடக்கமான மின்சார உபகரணங்கள் பாவனைப் பொருட்களுடன் வங்கியிலிருந்த பணத்தையும் கொண்டு போயிருந்தாள். நல்ல வேளையாக விஜய்க்குக் கையில் ஒரு வேலை இருந்தது. அதனால் பணக்கஷ்டம் ஏற்படவில்லை. அன்று தான் அவர் அபிக்குச் செய்த மாபெரும் துரோகம், மண்டையில் யாரோ சம்மட்டியால் அடித்த மாதிரிச் சுரீர் என அவருக்கு உறைத்தது. அதன்பின் தான் அவர் இதயம் அபிக்காகத் துடித்தது. ஆனால் திரும்ப அவளிடம் போக அவர் உள்ளம் தடுத்தது. அவருக்குத் தெரியும் அபி அவரை மன்னித்து ஏற்பாள் என்று. மன்னிப்பாள் என்ன வழக்கம்போல நன்மை, தீமை எதுவுமே சொல்லாமல் மௌனம் சாதிப்பாள். ஆனால் அவரால் எப்படி இருக்க முடியும்? அவரது மனசாட்சி அவரைக் கொல்லாமல் கொல்லுமே? கையில் குழந்தை வேறு இருந்தது. மோனிக்காவின் குழந்தையை வளர்க்கும் பொறுப்பை அபியிடம் எப்படி விடுவது.

போதாக்குறைக்கு மோனிக்கா போன பின்னர் அந்தக் குழந்தை தன்னுடையது தானோ என்ற சந்தேகமும் அவருக்கு எழுந்தது. இருப்பினும் அந்தக் குழந்தையை அனாதையாக்கி இன்னொரு தப்பைச் செய்ய அவர் மனம் இசையவில்லை. அதனால் அங்கேயே பேசாமல் இருந்துவிட்டார். குழந்தையைப் பொறுத்தவரை அவள் அன்னை இறந்ததாகவே இருக்கட்டும் என முடிவு செய்தார். ப்ரீதி எப்படி வளர்வாளோ தெரியாது. ஆனால் ஓடிப்போன அம்மாவின் பெண் என்ற எண்ணம் அவளுக்கு வரவேண்டாம் எனத் தீர்மானித்தார். ஆனால் அவரது ஆன்மீகச் சூழலில் அவரால் வளர்க்கப் பட்டதாலோ என்னவோ ப்ரீதி அவள் அன்னைக்கு எதிர்மாறாகப் பண்பின் சிகரமாக வளர்ந்திருந்தாள்.

மோனிக்கா மயக்கம் மறைந்த பின் அவரை அபியின் நினைவுகள் நாளும் பொழுதும் துரத்தின. எத்தனையோ தூங்காத இரவுகள். மானசீகமான மன்னிப்புகள் எல்லாம் கேட்டும் மனஅமைதி என்பது கிடைக்கவே இல்லை. சிறு வயதிலிருந்தே என்னை நம்பி வந்த அபியை எப்படி ஏமாற்றி விட்டேன். அவளுக்கு எத்தனை அவமானமாக இருக்கும். எல்லோரும் இது தான் தருணம் என அவளைப் போட்டு வறுத்து எடுத்திருப்பார்களே! பாவம் என்ன செய்வாளோ என இப்பொழுது பரித வித்துப் போனார். கடவுளே அவள் அவமானத்தில் உயிரை மாய்க்காமல் இருக்க அவளுக்கு மனவலிமையைக் கொடு. என் அபி எங்கிருந்தாலும் நன்றாக இருக்க வேண்டுமெனப் பிரார்த்தித்தார். போதாக் குறைக்கு நண்பர் ஒருவரின் திருமணத்திற்கு வேண்டா வெறுப்பாக அழைப்பை மதித்துச் சென்றிருந்தார். அங்கே திருமணத்தில் கூறும் சப்தபதி சத்தியத்திற்குத் தமிழில் அழகாக விளக்கம் கூறினார் அந்தப் புரோகிதர்.

“ஏழு அடிகள் என்னுடன் நடந்து வந்த நீ இனி என் தோழியாகிறாய். நாம் இருவரும் உயிர் நண்பர்களாகிவிட்டோம். உன்னோடு இன்று நான் அடையும் தோழமையிலிருந்து இனி என்றும் பிரிக்கப் பட்டவனாக மாட்டேன். எனது நட்பிலிருந்து நீயும் பிரிக்கப்பட்டவளாக மாட்டாய். நாம் இருவரும் இனி இறக்கும்வரை ஒன்றுபட்டவர்களாவோம். நாம் என்றும் ஒத்த மனதுடையவர்களாக இணைபிரியாமல் எப்பொழுதும் ஒருவர்க்கு மற்றவர் உதவியாக இருந்து இன்ப துன்பங்களில் பங்கெடுப்போம்” என மணமக்களைச் சொல்ல வைத்தார். அதைக் கேட்டபின் மனத்துயர் மேலும் அதிகரித்தது. திருமணம் என்ற பந்தத்தை மதிக்கவுமில்லை. திருமணத்தில் செய்த சத்தியத்தையும் காப்பாற்றவில்லை. தன்னைத் தானே சாக்கடையில் நெளியும் ஓர் அற்பப் புழுவாக உணர்ந்து துவண்டார். இந்தத் தடவை கடவுள் அவருக்கு நல்லதொரு நண்பனைக் காட்டினார். இராமகிருஷ்ண மிஷனில் அங்கத்தவர். மன அமைதி இல்லை என்றதும் என்னுடன் வா என அழைத்துச் சென்றார். அங்கே பிரணாயாமம், தியானம், யோகாசனம் போன்றவற்றில் பயிற்சி பெறச் செய்தார்.

“ஸ்திரமில்லாத அலைபாயும் மனதைக் கட்டுப்படுத்தத் தியானம் மிக உதவியாக இருக்கிறது. ஒரே குறிக்கோளுடன் தியானப் பயிற்சி செய்தால் அலை பாயும் மனதைக் கண்டிப்பாகக் கட்டுப்பாட்டில் வைக்க முடியும். தியானம் ஒருவரைத் தெய்வீக ஆனந்தத்தில் ஆழ்த்துகிறது. ஞானத்துக்கு இட்டுச் செல்கிறது. ஆழ்ந்த உண்மைகளை உணர வைக்கிறது. தெளிவான அறிவைக் கொடுக்கிறது. கடவுளுடன் ஒன்றிவிடச் செய்கிறது. மனிதன் அலைபாயும் மனதின் பிடியில் அகப்படாமல் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். மனம் ஒன்றிலிருந்து மற்றொன்றுக்குத் தாவும்போது சரியான வழியிலும் சரியான பொருள் மேலும் அதன் கவனத்தைச் செலுத்த வேணடும். தியானம் செய்யும்போது இலக்கிலிருந்து விலகிச் செல்ல மனதிற்கு அனுமதி கொடுக்கக் கூடாது. அது எப்போது குறுக்கே பாய்ந்து சென்றாலும் அதை இழுத்துக் கொண்டு வந்து தியானம் செய்யப்படும் உருவத்தின் மேல் லயிக்கச் செய்ய வேண்டும். முடிவில் நீ விரும்பினால் அனைத்தும் அவ்வுருவத்துக்குள் இருப்பதாகக் கொள்ளலாம்.”

"ஆரம்பத்தில் ஒரு பூ, தீபம் அல்லது இஷ்ட தெய்வம் ஆகிய ஒரே ஒரு உருவத்தை மட்டும் தியானிக்க வேண்டும். தினமும் உருவத்தை மாற்றிக்கொண்டே இருக்கக்கூடாது. இந்தத் தியான சாதனையின்போது உனக்குப் பிடிக்காதவை; உன்னைப் புண்படுத்துபவை; உன் நம்பிக்கையைக் குலைப்பவை ஆகியவற்றின் எண்ணங்களை விலக்க வேண்டும். புலன்கள் தானாக ஒன்றும் செய்ய இயலாதவை. அவற்றிற்குத் தன்னிச்சை இல்லை. மனத்தைக் கட்டுப்படுத்தினால் புலன்களைக் கட்டுப்படுத்தலாம். மனம் புலன் வழிச் செல்லாது புத்தி வழிச் செல்ல அதைப் பயிற்ற வேண்டும்" என அங்கு நடக்கும் சத் சங்கம் என்ற ஆன்மீகக் கலந்துரையாடலைக் கேட்டு அதன்படி அலையும் மனத்தைக் கட்டுக்குள் வைக்க முயன்று வெற்றியும் கண்டார்.

அத்துடன் அவர்கள் செய்யும் சமூக சேவைகளில் பங்கேற்றார். ஓர் ஏழையின் கல்விக் கண்ணைத் திறப்பது கோவிலில் ஆயிரம் தீபம் ஏற்றுவதற்குச் சமம் என்றும்; தானங்களில் சிறந்தது அன்னதானம் என்றும் அறிந்து தன்னால் முடிந்த வரை தான, தருமம் செய்தார். கொடுக்கும் தெய்வம் கூரையைப் பிய்த்துக் கொண்டு கொடுக்கும் என்பார்கள். அதே போலப் பெயருக்கேற்ப வெற்றிமேல் வெற்றி பெற்றார். மஹாலஷ்மி அவர் வீடு தேடி வந்தாள். செல்வம் குவிந்தது. தான தர்மங்களில் வாரி இறைத்தார். நோர்வேயிலிருந்து ஆஸ்திரேலியாவுக்குக் குடிபெயர்ந்தபின்னும் அவர் சேவை தொடர்ந்தது. ஒவ்வொருமுறை உதவும்போதும் அபியிடம் அபகரித்த பணத்தைத் திருப்பிக் கொடுப்பது போலவோ அல்லது அபிக்குச் செய்த பாவத்திற்குப் பரிகாரம் தேடுவது போலவோ உணர்ந்து சிறிது ஆறுதல் அடைந்தார். பெயரும் புகழும் வந்து சேர்ந்தது. ஆனால் மாபெரும் துரோகம் என்ற நினைப்பு அவரை நாளுக்கு நாள் நண்டாகக் குடைந்தது. இதற்கெல்லாம் நான் அருகதையானவனா என அவ்வப்போது தன்னைத்தானே கேட்டுக் கொள்வார். "ஒரு மனிதன் தான் செய்த தவறை உணர்ந்தால் பாவ மன்னிப்புக் கிடைக்கும்" என இராமகிருஷ்ண பரமஹம்சரின் உரைகளில் படித்துச் சிறிது ஆறுதல் அடைந்தார்.

அபிக்கு ஒரு குழந்தை இருக்குமென அவர் கனவிலும் நினைக்கவில்லை. ப்ரீதியின் தோழியாகப் பாரதியைக் கண்டு அசந்து நின்றார். அபி தான் தன் முன்னால் நிற்கிறாளோ என ஒரு தரம் ஸ்தம்பித்துப் போனார். ப்ரீதியிடம் விபரம் கேட்டு அறிந்தபோது ஏதோ இனம்புரியாத ஒரு புளகாங்கிதம் நாபிக் கமலத்திலிருந்து எழுந்து அவரை ஆட்கொண்டது. அபியை ஒரு தடவை பார்க்க வேண்டுமென்ற ஆவலும் நாளுக்கு நாள் அதிகரித்தது. அவளிடம் மன்னிப்புக் கேட்போமா என நினைத்த வேளையில் தான் ப்ரீதி பணம் கேட்டாள். மனப்பூர்வமாகக் கொடுத்தார். ஆனால் அபி அதை வாங்க மறுத்துவிட்டாள். பாரதி அலுவலகத்தில் கடன் வாங்கி ஆபரேஷன் நடந்தது என அறிந்தபோது மிகவும் பெருமையாகவும் ஆனந்தமாகவும் இருந்தது. தங்கமான ஒரு மகளைப் பெற்றிருக்கிறாள் அவளுக்கு என்ன குறை என நினைத்தார். பாரதி மேல் காட்டாற்று வெள்ளம் போல அன்பு பெருகியது. அவள் வீட்டுக்கு வருவதை வரவேற்றார். வகைவகையாக உணவுப்பொருட்களை வாங்கி வைத்துப் பாரதிக்குக் கொடுக்கும்படி ப்ரீதியிடம் சொல்வார்.

தொடர்ந்து இரண்டு மூன்று நாட்கள் காணாவிட்டால் எங்கே எனக் கேட்பார். எல்லா வேலைகளையும் விட்டு விட்டு மகளுக்காகக் காத்திருப்பார். "இவள் என் அபி பெற்ற மகள்", "நம் மகள்" என ஏனோ உள்ளம் ஆர்ப்பரித்தது. அவர் அபி மேல் கொண்ட அபரிமிதமான காதலின் எதிரொலியாகவும் அது இருக்கலாம். பாரதி தன்னை ஒரு தடவை "அப்பா" என அழைக்கமாட்டாளா? என நாளும் பொழுதும் ஏங்கினார்.

அபியிடம் மன்னிப்புக் கேட்க இதைவிட்டால் வேறு சந்தர்ப்பம் கிடைக்காது, நடப்பது நடக்கட்டும் எனப் ப்ரீதி தடுத்தும் கேளாமல் போனார். ஆனால் எப்போதும் போலவே அபி பேசாமல் தண்டித்துவிட்டாள். அது அவள் அவரிடமிருந்து கேளாமலே எடுத்துக் கொண்ட உரிமை என்றும் நினைத்தார். அவள் அன்பு அப்படியே இருக்கிறது. அதனால்தானே உரிமையுடன் கோபித்துக் கொண்டாள் என நினைத்தபோது இதயமே வெடித்துவிடும் போல் இருந்தது. ஆனால் இதயமெங்கும் ஓர் இன்ப அலை பாய்வது போலவும் இருந்தது. "என் அபி இப்பொழுதும் என்னை நேசிக்கிறாள். அவள் அன்பு அப்படியேதான் இருக்கிறது" என நினைத்துப் பரவசம் அடைந்தார். அபியின் அன்பின் விஸ்வரூபம் தெரிந்தபோது அவரது துரோகமும் விஸ்வரூபம் எடுத்து அவர் முன் நின்று தாண்டவமாடியது. மூன்றடி நிலம் கேட்டு மஹாவிஷ்ணு மாபலியை நிலத்தோடு அமுக்கியது போல ஏதாவது வந்து தன்னை அமுக்கமாட்டாதா என ஏங்கினார். அப்படியே நிலத்தோடு நிலமாகப் போக மாட்டேனா என ஏங்கினார்.

அப்படியே எந்த இலக்குமின்றிச் சூனியத்தை வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தார். சிறிது நேரம் கவனித்த ப்ரீதி அவர் அருகே வந்து "என்னப்பா" எனக் கைகளைப் பற்றி அருகில் அமர்ந்தாள். அவரால் மகளுடன் பேச முடியவில்லை. மனம் பாறையாகக் கனத்தது. அப்படியே உயிர் போனால் என்ன என்றுகூட நினைத்தார். ஆனால் இறை நம்பிக்கை வலுத்ததால் எவ்வளவு பெரிய பாவம் நான் செய்திருக்கிறேன். அதற்கான கர்மாவை நான் அனுபவித்துத்தானே ஆக வேண்டுமென நினைத்துக் கொண்டார்.

விஜய் வந்த விபரமோ தான் கண்ணீரில் கரைந்ததற்கான காரணத்தையோ அபி பாரதியிடம் கூறவில்லை. அடுத்தநாள் வழக்கம்போல் எழுந்து டாக்டர்கள் நர்ஸ்கள் சொன்னதைச் செய்து மிகவும் சாதாரணமாக இருந்தாள். எப்பொழுது வீட்டுக்குப் போகலாம் எனக் கேட்டாள். பாரதியும் அதை அப்படியே விட்டுவிட்டாள். கேட்டு இன்னொரு தடவை மனதை நோகடிக்க வேண்டாம். அதனால் உடல்நிலை பாதிக்கப்படலாம்... அது கணவன் மனைவிக்கிடையே உள்ள பிரச்சனை. அதில் தலையிட அவள் யார்? மகளாக இருந்தாலும் அந்தப் புனிதமான பந்தத்தின் அந்தரங்கத்திற்குள் போக யாருக்கும் உரிமை இல்லையே. சொல்லப் போனால் சட்டப்படி இப்பொழுதும் அவர்கள் கணவன் மனைவிதான். அவர்களுக்கு விவகாரத்தானதாக யாரும் சொல்லிப் பாரதிக்கு நினைவில்லை. அதனால் தந்தையிடம் போய் ஏன் வந்தார் எனக் கேட்க முடியாது. அவர் மனைவியிடம் சட்டப்படி அவருக்குத் தான் அதிக உரிமை இருந்தது.

பாரதியிடம் எதுவுமே பேசா

விட்டாலும் அபி தனக்குள் அசை போடத் தவறவில்லை. பிரீதியை முதல் முதலில் பார்த்தபோதே அபிக்குச் சந்தேகம்தான். பிறகு பாரதியிடம் கேட்டபோது அவள் வேடிக்கையாக "அவள் அப்பா பெயரும் ஜயவிஜயன் தான். அது தான் எங்களை ஒன்று சேர்த்தது. எல்லோரும் நாங்கள் சகோதரி களா எனக் கேட்டார்கள். அதிலி ருந்து நண்பர்களாகிவிட்டோம்" என்றாள். அவர்கள் கேட்டதில் தவறொன்றும் இல்லையே என அபி தனக்குள் நினைத்தாள். ஆனால் அது புரியாத பாரதி" எனது தமிழ் ஆசிரியை எப்பொதும் 'இரண்டு வெற்றிகளின் புதல்வி' என என்னைக் கேலி செய்வார். அவரிடம் போய் இங்கும் இன்னொ ருவர் அப்படி இருக்கிறார் எனச் சொல்ல வேண்டும் என்றாள். அதன்பின் அபிக்கு ஒரு மனப் பயம் இருந்தது. விஜய்யை எங்கா வது காண்பேனோ! கண்டால் தன் உணர்வுகள் என்ன செய்யுமோ எனப் பயந்தாள். அதனால் வெளியே போவதை மிகவும் குறைத்துக் கொண்டாள். பொழுது போவதற் காகத் தமிழ்ப் பத்திரிகைகளைப் புரட்டினால் அதில் ஜய விஜயன் அந்த நன்கொடை கொடுத்தார். இந்த விழாவைத் தொடங்கிப் பேசினார் என இருக்கும். ஒரு பக்கம் பேதை மனது 'என் விஜய்' எனப் பெருமைப் பட்டாலும், மறுபக்கம் "சொந்த மனைவி, குழந் தையை அனாதர வாக விட்டு விட்டு அனாதை களுக்கு நன்கொ டையா?" என வேடிக்கையாக இருக்கும். ஆனால் அவள் கணவன் இன்று ஒரு 'புடம் போட்ட தங்க மாக' மாறி ஒரு 'சிவப்பழமாக' இருப்பதைப் படங்களில் பார்த்து ஆர்ப்பரிக்கும் அவள் இதயத்திற்கு அபியால் அணைபோட முடிய வில்லை. மாறாக அதனுடன் சேர்ந்து என் விஜய் என ஆனந் திக்கத்தான் முடிந்தது.

ஆஸ்பத்திரியில் அவரைக் கண் டதும் பல வருடங்களின் பின் பார்த்ததால் அவளுக்குள் ஓர் இன்ப ஊற்றுப் பெருகியது. அவர் மேல் கொஞ்ச நஞ்சமிருந்த செல் லக் கோபமும் அந்த ஊற்றில் கரைந்து இருந்த இடம் தெரி யாமல் மறைந்துவிட்டது. உட லெங்கும் ஏதோ ஓர் ஆகர்ஷண சக்தி பரவிய மாதிரி இருந்தது. அவர் ஆயிரம் சூரியர்கள் போல அவள் எதிரே நின்றாள் கண்களை எப்படித் திறப்பதாம்? எதிர்பாரா மல் அவரைக் கண்ட அதிர்வில் பேச வார்த்தைகள் வரவில்லை. காலமெல்லாம் கண்ணுக்குள் ளேயே தேங்கியிருந்தது போலக் கண்ணீர் தன் வழியே பிரவகித்து ஓடியது. அதை அவளால் என்ன முயன்றும் கட்டுப்படுத்த முடிய வில்லை. அங்கே அபி செயலற் றுப் படுக்கையில் கிடந்தாள். ஆப ரேஷன் செய்வதற்கு முதல் மயக்க மருந்து கொடுத்தது போல அபி யின் உடலும் உள்ளமும் ஓய்ந்தி ருந்தது.

"என்னைத தயவுசெய்து மன் னித்துவிடு அபி. அதற்கு எனக்கு எந்த அருகதையும் இல்லை. நான் உனக்கு மாபெரும் துரோகம் செய்துவிட்டேன். ஏன் அப்படிச் செய்தேன் என்று எனக்கு இது வரை புரியவே இல்லை. மோனிக்கா என்னவோ வசிய மருந்து தந்து என்னைத் தன் பக்கம் திருப்பி இருக்க வேணும். இல்லாவிட்டால் உன்னைப் பற்றிய ஒரு சிறுசிந்த னையும் இல்லாமல் எப்படி அவ ளுடன் போனேன். எனக்கு எது வுமே புரியவில்லை அபி. இப்போ நினைக்கும்போது வெட்கமாகவும், வேதனையாகவும் இருக்கிறது" என ஏதேதோ கூறினார். இப்பெர்

பொழுது நினைத்தால் அபிக்குச் சிரிப்பு வந்தது. அவரை அவள் என்று தண்டித்தாள் இன்று மன்னிப்பதற்கு? அவர் மேல் அவளுக்கு என்றுமே கோபம் வந்ததில்லையே. அவரைக் கோபித்தால் அது தன்னைத் தானே கோபிப்பது போலல்லவா இருக்கும்? அவரை வெறுத்தால் அது தன்னுயிரைத் தானே வெறுப்பதல்லவா? ஆபரேஷனுக்கு அவர் பணம் வேண்டாமென்று பாரதியிடம் கூறியதற்குக் காரணம் அவளது ரோஷம். தன்மானம் அல்லாமல் கோபத்தினாலோ, வெறுப்பினாலோ அல்ல. மானமுள்ள எந்தப் பெண் என்றாலும் தன்னை அனாதரவாக விட்டுவிட்டுத் தன் பணத்துடன் இன்னொரு பெண்ணுடன் ஓடிப்போன கணவனின் தயவை எதிர்பார்க்க மாட்டாள். அதுவன்றி அபிக்கு அவரில் வேறு கோபம் இல்லை. மாறாக அன்றுபோல் இன்றும் பரிதாபம்தான் ஏற்பட்டது. "மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கியிருக்கிறார். அது நட்டாற்றிலேயே கைவிட்டுக் கரைந்து போனது. நன்றாகத் தத்தளித்துப் போனார். பாவம்" என்றுதான் நினைத்தாள். வழமை போலத் தொடர்ந்தும் அவர் நல்வாழ்வுக்காக இறைவனிடம் பிரார்த்தித்தாள். பாரதியிடம் எதுவுமே சொல்லவில்லை. எங்கிருந்து ஆரம்பிப்பது, எதைச் சொல்வது, எதை விடுவது என்று புரியவில்லை. அவளுக்குத் தெரிந்த மட்டும் போதும் என நினைத்துப் பேசாமல் விட்டுவிட்டாள். இருந்தது போல இருந்திருக்கலாம். மனம் அமைதியாகத் தெளிந்த நீரோடை போல இறைச் சிந்தனைகளில் லயித்திருந்தது. வீணாக இங்கு வந்து பல வருடங்களுக்கு முன் இருந்தது போல மீண்டும் கல்லெறிந்த குட்டை ஆகிவிட்டது. அதிகம் கலங்கவிடாமல் விரைவில் போய் விடுவோம் எனப் பாரதியிடம் கேட்டாள். அவள் "இந்த உடல் நிலையில் உங்களை எப்படித் தனியே அனுப்புவேன். கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுங்கள் சோதனைகள் முடிந்ததும் நாங்கள் போவோம்" என்றாள். சரியெனப் பேசாமல் இருந்தாள்.

இடையில் ஒருநாள் ப்ரீதி வந்து "உன்னை அப்பா பார்க்க வேண்டுமாம் பாரதி வருகிறாயா?" என்றாள். அவளை வேதனையுடன் பார்த்தவள் 'வேண்டாம் ப்ரீதி' என்றாள். "எனக்குப் பிறந்ததிலிருந்து அப்பா இல்லை. அப்படியே இருந்துவிடுகிறேன். அம்மா அவரைப்பற்றி எதுவுமே சொல்லவில்லை. ஆஸ்பத்திரியில் தனது அழுகைக்கான காரணம் என்னவென்றும் கூறவில்லை. இதற்குப் பின் நான் எப்படி அப்பா என்று அவரிடம் வருவேன்? நீ தவறாக நினைக்காதே ப்ரீதி. நாங்கள் இங்கு வந்ததால் தானே அவருக்கு மகள். மனைவி பாசம், மனைவியிடம் மன்னிப்பு எல்லாம் தோன்றியது. இத்தனை வருடமாக இவை யெல்லாம் தோன்றவில்லையே. இத்தனைக்கும் அம்மா அவர் விட்டு வந்த அதே கொழும்பில் தான் இத்தனை காலமும் இருந்தார். அம்மாவின் குணம் இவருக்கு நன்கு தெரியும். திரும்பி வந்திருந்தால் நிச்சயம் அவமதித்திருக்க மாட்டார். அம்மா அவரைப்பற்றி என்றும் எதுவுமே தவறாகச் சொன்னதில்லை. பாட்டி சில சமயங்களில் 'உனக்கு உன் அப்பன் குணம்' என்று சொன்னாலும் அம்மா அதற்கு மேல் எதுவும் பேச விடுவதில்லை. 'என்னை அவருக்குப் பிடிக்கவில்லை போய்விட்டார்' என்று தான் சொன்னார். 'பாரதியைக் கண்டால் அப்பாக்குப் பிடிக்கும்' என்று சொல்வார். அந்தச் சிறு வயதில். என் அப்பா

வயதில் உள்ளவர்களையெல்லாம் பார்த்து இவர் என் அப்பாவாக இருக்க மாட்டாரா? இவருக்கு என்னைப் பிடிக்காதா? என ஏங்கியிருக்கின்றேன். கால வெள்ளத்தில் அலுத்துப்போய் அந்தத் தேடலை விட்டுவிட்டுத் தெய்வம் மாதிரியான என் அம்மாவையே எல்லாமாக நினைத்துப் பூஜித்துப் பழகி விட்டேன். அப்படியே இருந்து விட்டுப் போகிறேன். தயவுசெய்து என்னை மன்னிக்கும்படி அவரிடம் சொல்லு ப்ரீதி. அப்பா என்ற மதிப்பும் மரியாதையும் எனக்கு அவர் மேல் நிறைய இருக்கிறது. எல்லாவற்றிலும் மேலாக இது வரை இதயத்தில் வெறுமையாக இருந்த அப்பாவின் இடம் நிரப்பப்பட்டுவிட்டது. அப்பா என நினைக்கும்போது இதுவரை வெறும் இருட்டாகத் தோன்றிய என் மனக் கண்ணுக்குள் இப்பொழுது அவர் உருவம் நிறைந்திருக்கிறது. என்றாவது கடவுள் அருள் இருந்தால் தந்தை மகளாவோம். இப்போ வேண்டாம் ப்ரீதி தயவுசெய்து விட்டுவிடு" எனக் கண்ணீர் மல்கக் கூறினாள். ப்ரீதியின் விழிகளும் நிறைந்தன. "என் பெற்றோர் உங்களுக்குச் செய்த துரோகத்தை நினைக்கும்போது எனக்கு மிகவும் வேதனையாக இருக்கிறது பாரதி. என்னையும் மறந்துவிடு வாயா?" எனக் குரல் தழதழக்கக் கேட்டாள். "இல்லவே இல்லைம்மா நீ என்றும் என் சினேகிதிதான். என் வீட்டுக் கதவுகள் உனக்காக என்றும் திறந்திருக்கும்" என அவளை அன்புடன் அணைத்துக் கொண்டாள்.

பரீட்சை முடிந்து பயணமாகும் நாளும் வந்தது. சிட்னி விமான நிலையத்தில் குழுமியிருந்த நண்பர்களிடம் விடைபெற்றுக் கொண்டிருந்த பாரதி, தூரத்தில் நின்ற அந்த உருவைக் கண்டு அதிர்ந்தாள். 'தானாடாவிட்டாலும் தன் சதை ஆடும்' என்பார்கள். அதே போல் அவள் உதடுகளும் அப்பா எனச் சத்தமின்றி அசைந்தன. பின் "இவர் இங்கு எங்கு வந்தார்? இப்பொழுது அம்மா இவரைக் கண்டால் என்னவாகுமோ!" எனப் பயந்தாள். அவசர அவசரமாக அங்கு நின்ற அனைவரிடமும் விடை பெற்றுக்கொண்டு 'வாங்கம்மா' என அபர்ணாவின் கையைப் பிடித்துக் கொண்டு பயணிகள் புறப்படும் வாசலை நோக்கிச் சென்றாள். 'கொஞ்சம் நில் பாரதி' என அவள் கையை விடுவித்த அபி, "என்ன பழக்கம் பாரதி இது உன்னை மதித்து வந்தவர்களிடம் சொல்லாமல் போவது" எனச் சிறிது கண்டிப்பாகக் கேட்டாள். புரியாத பாரதி "எல்லோரிடமும் தான் சொல்லிவிட்டேனே இனி என்னம்மா?" என்றாள். அவளைப் பார்த்து ஒரு நமுட்டுச் சிரிப்புச் சிரித்த அபி "பெரியவர்களை மதிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். அதைக் கூடவா மறந்துவிட்டாய்?" எனக் கேட்டாள். இந்தக் குற்றச்சாட்டுகள் எல்லாம் இப்போ அவசியமா என நினைத்த பாரதி சிறிது அதிர்ந்தாள். அன்னையை வியப்புடன் பார்த்து "யாரம்மா பெரியவர்" எனக் கேட்டாள். மீண்டும் அதே புன்னகை மாறாமல் "எனக்குத் தெரியும் பாரதி நீ உன் அப்பாவைக் கண்டதால் தானே இப்படி அவசரப்படுகிறாய். அது தவறில்லையா? உன் அப்பாவாக இல்லாவிட்டாலும் ப்ரீதியின் அப்பாவாக அவரை உனக்குப் பழக்கம் தானே. இங்கே உனக்காக வந்தவரிடம் இப்படிச் சொல்லாமல் போகலாமா? அவர் மனம் வருந்துமில்லையா? போ பாரதி போய் "எல்லாம் கடவுள் மன்னிப்பார் வயதான காலத்தில் பழசையெல்லாம் நினைத்து மனதை உலவவிட்டு உடம்பைக் கெடுக்

காமல் சுகமாக சந்தோஷமாக இருக்கும்படி அவரிடம் சொல்லி விட்டு வா" என்றாள். வியந்த பாரதி "அம்மா!" எனத் தன் தலையை நிமிர்த்திப் பார்ப்ப தற்குள் பயணிகள் புறப்படும் நுழை வாசல் திறந்து அபியை உள்ளே வாங்கி மூடிக்கொண்டது. பாரதி தன் அதிர்விலிருந்து மீளச் சில நொடிகள் எடுத்தன. அங்கே அவ ளுக்குத் தன் அன்னையின் அதி மதுரமான இதயம் தெரிந்தது. "கடவுள் மன்னிப்பார்" எனக்கூறி "நான் மன்னித்துவிட்டேன்" எனச் சொல்லாமல் சொல்லிப் போனதை நினைத்து நெகிழ்ந்து நின்றாள்.

தந்தையிடம் விடை பெற்றுக் கொண்டு விமானத்துக்குள் போய் இருந்த பாரதிக்கு அன்னையைப் பார்க்கப் பார்க்க ஏதோ ஓர் இனம் புரியாத உவகை இதயமெங்கும் வியாபித்து அவள் விழிகள் நிறைந் தன. "தன்னை வெட்டும் கோடரி மேல் கூடக் கோபம் கொள்ளாது தன்னை வெட்டி வீழ்த்தும் வரை மாறாது நறுமணத்தை வீசிக் கொண டிருக்குமாம் சந்தன மரம் போன்ற சுகந்த விருட்ஷங்கள்." அதேபோலத் தான் அம்மாவும் தன்னைத் தவிக்க விட்ட அப்பாவுக்கும் என்றும் நல் லதே நடக்க வேண்டுமென விழை கின்றார். அம்மாவும் ஒரு "சுகந்த விருட்ஷம்" தான். கடவுளுக்கு அர்ச்சிக்கப்படும் "சந்தனமரம்" தான் என நினைத்தபோது அவள் அன்னையின் அன்பின் விஸ்வ ரூபம் தெரிந்து அவள் உள்ளம் ஆனந்தித்தது. என்ன ஓர் உயர்ந்த ஆத்மா. "இவரின் மகளாகப் பிறக்க நான் என்ன புண்ணியம் செய் தேன் என் நெஞ்சமே?" எனத் தன் னைத் தானே கேட்டுக் கொண டாள். தந்தை இல்லாமல் வளர்ந்த வள் என இதுவரை இருந்த மனக் குறை எல்லாம் இருந்த இடம் தெரியாமல் மறைந்து போனது.

தன்னையே வைத்தகண் வாங் காமல் பார்த்துக் கொண்டிருந்த மகளைப் பார்த்து "என்ன பாரதி அப்படிப் பார்க்கிறாய்?" என அபி வார்த்தைகளில் குறும்பு தவழக் கேட்டாள். "ம்கும்" எனத் தலையை ஆட்டியவள் திரும்பி அன்னையின் கழுத்தைச் செல்ல மாகக் கட்டி அவள் மார்பில் முகம் புதைத்தாள். கண்கள் மிளிர, இதழ்களில் புன்னகை தவழ அபி தன் மகளை அன்புடன் அணைத் துக் கொண்டாள். அந்த அணைப்பு அவள் தன் மகளிடம் இதுவரை சொல்லாத பல கதைகளைச் சொல்லாமல் சொல்லிக் கொண டிருந்தது.

- யாவும் கற்பனை -

---

இரவுத் துணியில்  
வெள்ளைக் கிழிசல்கள்  
மின்னல்கள்

இரவுபோர்த்திய கருத்த  
கம்பளிக்குள் மின்மினிக்  
கூட்டம் நட்சத்திரம்

இரவுக்குச் சோறூட்ட பூமித்  
தாய்க்கு ஒரு வெள்ளித்தட்டு  
பரிசு - நிலா

இயற்கை கொடுத்த சீப்பில்  
தலைவாரிக்கொள்ளும்  
கிராமத்து வயல்கள் - காற்று

நேற்று மழை  
அழுது கொண்டிருக்கின்றன  
இன்று - மரங்கள்

பூக்கள் அஞ்சலி செலுத்துகின்றன  
பறித்துப்போன  
பூக்களுக்காக.

ஸ்ரீகுமார்

# ஐந்தாவது எழுத்தாளர் விழா

அறிந்ததை பகிரவும் அறியாததை அறிந்து கொள்ள முயல்வதற்குமான நோக்கத்துடன் 2001ஆம் ஆண்டு மெல்பனில் தொடங்கப்பட்ட வருடாந்த எழுத்தாளர் விழாவின் 5ஆவது நிகழ்வை எதிர்வரும் 21.1.2005 சனிக்கிழமை சிட்னியில் நடத்த முடிவு செய்யப் பட்டுள்ளது.

2001இல் மெல்பனிலும் 2002இல் சிட்னியிலும் 2003இல் மீண்டும் மெல்பனிலும் 2004இல் கன்பராவிலும் இந்த விழா தொடர்ச்சியாக ஒவ்வொரு ஆண்டின் ஆரம்பத்தில் கோடைகாலத்தில் நடைபெற்று வந்தது.

சிட்னியில் – ஹோம்புஷ் ஆண்கள் உயர்தர கல்லூரியில் காலை 10 மணி முதல் இரவு 10 மணி வரையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் – சிட்னியில் இயங்கும் தமிழ்ப்பாடசாலை மாணவர்களுக்கிடையே ஓவியப் போட்டியும் நடத்தப்படவுள்ளது.

கருத்தரங்க, விமர்சன அரங்க, கவியரங்க, நடன, நாடக அரங்குகளுடன் புத்தகம், பத்திரிகை, இதழ் களின் கண்காட்சியும் நடைபெறும். இவ்விழாவில் பங்குபற்ற விரும்புபவர்கள் தமது பெயர்களை பதிவு செய்து கொள்ளலாம். மேலதிக விபரங்களுக்கு விழா அமைப்பாளர் திரு. லெ. முருகபூபதியுடன் தொடர்பு கொள்ளலாம்.

முகவரி :

**L. MURUGAPOOPATHY**

P.O. Box : 350

Craigieburn, VIL - 3064.

# கலாகீர்த்தி பேராசிரியர்

# டாக்டர் பொன். பூலோகசிங்கம்

எழுத்தாளன், இலக்கியவாதி எனும் சொற்களைக் குறுகிய கண்ணோட்டத்திலே தமிழ் வழக்கில் நோக்கிய கட்டம் ஒன்றினை நேரடியாகக் கண்டவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எழுத்தாளன் வேறு, இலக்கியவாதி வேறு என்று கருதும் அளவிற்கு வியாக்கியானங்கள் செய்யப்பட்டமையும் மறந்துபோகக் கூடிய தொலைவில் நடந்து முடிந்ததன்று. பல்வேறு கன்னைகளை உருவாக்கி, ஒன்றை ஒன்று சீண்ட வைத்து, குப்பை கூட்டி, நல்லதையும் சேர்த்துத் தொட்டியிலே கொட்டிச் சீரழித்துக் கொண்டோம். எம்முடைய இலக்கியப் பாரம் பரியம் எப்படியெல்லாம் தறிகெட்டு ஓடியது! போர்ச் சூழல்தான் தாய் மண்ணிலே மெல்ல அவல் இல்லாமற் செய்தது. ஆனால் இப்பொழுது புலம் பெயர்ந்த நாடுகளிலே இத்தன்மைத்தான கன்னைகளின் குரல் அப்பப் போது எழுப்பப்படும்போது வேதனையாக இருக்கிறது. கட்டி எழுப்பவேண்டியதை அத்திவாரத்திலேயே நொறுக்கி விடுவார்களோ என்று திகைக்க வேண்டியுள்ளது.

அந்தக் காலத்திலே — ஐம்பதுகளிலேகூட மேற்கத்திய கல்வி வாசனை பெற்ற இலங்கையர் ஆஸ்திரேலியாவினைப் பாதாளலோகம் (Down under) என்று கருதி, இங்குவர வெருண்டார்கள். பௌத்த சிங்கள மயப்படுத்தலின் உச்சக் கட்டம் ஜூலாய் 1983 அடாவடித்தனங்கள். அதனைத் தொடர்ந்து ‘கம்சன் வேலை.’ உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு இருந்தவர்கள், தம் பிள்ளைகள் கொலையுண்டு போகாமல் இருக்க, எங்கேயாவது பாதுகாப்பான இடம் சென்று, தலையை வைப்போம் என்று புறப்பட்டார்கள். இன்று அவ்வாறு புறப்பட்டவர்களைப் பார்த்துக் கேலி பேசுகிறவர்களைப் பார்க்கையிலே வேதனையாக இருக்கிறது. இக்கரைக்கு அக்கரை பச்சை என்று ஆபாசம் அன்று அவர்களை நாட்டை விட்டுத் துரத்தவில்லை. புலம்பெயர்ந்தவர்கள் யாவரும் வேலை வாய்ப்புகளையோ வாழ்க்கை வசதிகளையோ எதிர்பார்த்துப் புறப்பட்டவர் களல்லர். எண்பதுகளிலே புறப்பட்டவர்கள் மனிதாபிமானத்தின்மீது வைத்திருந்த எச்சம் சொச்சம் நம்பிக்கையையும் இழந்துவிட்டதாலேயே, தாம் அனுபவித்த வசதிகளையும் வகித்த உயர் பதவிகளையும் தூக்கி எறிந்து விட்டுப் புறப்பட்டார்கள். அப்பொழுது வேலியே பயிரை மேய்ந்துகொண்டிருந்தது. பாதுகாப்பு பற்றி அக்கறை செலுத்த வேண்டியவர்கள் வட்ட மேஜையிலே சொக்கட்டான் ஆடிக்கொண்டிருந்தார்கள். தம் தாய்மண்ணைத் துறந்து அநாதரவாகப் பரதேசியாகப் புறப்பட்டுத் தஞ்சம் அடைந்தவர்களை நோக்கி இப்பொழுது பகிடி விடுவது மிகவும் அசிங்கமாக இருக்கிறது. அவர்களிலே பலர்

அன்று குறிவைக்கப்பட்டவர்கள் என்பதை மறந்துவிடல் கூடாது.

அவுஸ்திரேலியாவிற் பல்வேறு இனங்களும் நிறங்களும் குடியிருக்கின்றன. கறுப்பர்களைச் சீரழித்து வெள்ளை மயமாக்கப்பட்ட பூமியிலே சென்ற நூற்றாண்டின் எழுபதுகளிலே வெள்ளையர் அல்லாதவர் பிரசைகளாக அநுமதிக்கப்பட்டனர். கனடா, ஐக்கிய அரசு, பிரான்ஸ், ஜேர்மனி, சுவிற்சர்லாந்து, அமெரிக்க ஐக்கிய நாடுகளை அடுத்துத் தமிழ் இன மக்கள் அதிக அளவிலுடைய அந்நிய நாடு அவுஸ்திரேலியா. இங்கு சுமார் 35,000 முதல் 40,000 வரை தமிழர் இருக்கிறார்கள். தமிழர் மூன்றாம் உலகத்தினர். அத்தோடு கறுப்பர் வட்டத்தினர். அவுஸ்திரேலியா வந்த பிறகு தான் தம் நிறம் கறுப்பு என்று பலர் கண்டு பிடித்திருக்கிறார்கள். ஐரோப்பிய நாகரிகத்தின் இரட்டை நியமங்களும் கபடங்களும் நிறவாதத்தின் ஊடாகப் பயங்கரமாக வெளிப்படுவதைக் காணமுடிகிறது. இவற்றால் தாமரை இலை மேல் தண்ணீர் போலப் பட்டும் படாமலும் ஒட்டுக்குள் ஒடுங்கி வாழும் நிலைமை தவிர்க்க முடியாதது.'மௌனி'க்கு இங்குள்ள தமிழர்களிடையே பல கதாபாத்திரங்கள் நிச்சயமாகக் கிடைக்கும்!

அவுஸ்திரேலியாவில் ஆங்கிலம் தான் கல்வி மொழி—உத்தியோக மொழி—முதல் மொழி. தாய்மொழி தான் முதல்மொழி எனும் மொழியியலாரின் அடிப்படைக் கோட்பாடு இங்கு அடிபட்டுப் போய் விட்டது. ஆங்கிலத்தினைவிட 14 மொழிகள் முன்னுரிமை மொழிகள். (Priority Languages). இவற்றிற்குச் சில விசேட சலுகைகளுள். இவற்றிலே சீனம், இந்தோனேசியன், ஜப்பான், கொரியன், தாய், வியட்நாம் எனும் ஆறு மொழிகள் மட்டுமே ஆசிய மொழிகளிலே முன்னுரிமை பெற்ற மொழிகள். தமிழுக்கு அந்த அந்தஸ்து இன்னமும் கிடைக்கவில்லை. கிடைக்கும் சாத்தியக்கூறுகளும் இல்லை. அவுஸ்திரேலியப் பொருளாதார—வர்த்தக விருத்திக்கு உதவும் நாடுகளும் பிரதேச செல்வாக்கு

# புலம்பெயர்ந்த மூத்த எழுத்தாளர் முகங்கொடுக்கும் யுகசந்தி

உடைய நாடுகளும் தான் முன்னுரிமை பெற்றிருப்பது தெளிவாகப் புலனாகின்றது.

தமிழருக்குத் தாய்மொழியை முதல் மொழியாகக் கற்கும் தேவை அந்நிய நாடுகளில் இல்லை. இரண்டாவது மொழிக் கல்வி முறைக்கும் முதலாவது மொழிக் கல்விமுறைக்கும் பல வேறுபாடுகளுள் இவ்வேறுபாடுகளைப் புறக் கணித்து, இரண்டாவது மொழியாகத் தமிழ்மொழியைக் கற்பிக்கப் புகின் இளஞ்சிறார்களைத் தமிழ்மொழியில் ஆர்வமோ பற்றோ இல்லாமற் செய்துவிடவும் கூடும். அவுஸ்திரேலியாவிலே தமிழ்ச் சமூகப் பள்ளிகள் பாடசாலைத் தவணைகளிற் சனிக்கிழமைதோறும் இரண்டு அல்லது மூன்று மணி நேரம் ஆரம்பத் தமிழ்க் கல்வி அளிப்பதோடு போட்டிகள், கலை நிகழ்ச்சிகள் மூலமும் மொழித் திறனுக்கும் பண்பாட்டுக் கலாசார அறிவிற்கும் துணைபுரிகின்றன. ஆயினும் இப்பள்ளி மாணாக்கர் தமிழினை வீட்டு மொழியாகப் பேணாத பட்சத்தில் அதிக மொழிப் பயிற்சி பெறும் வாய்ப்பு இல்லாமற் போய் விடும். இதற்குப் பெற்றோர்தம் ஒத்துழைப்பு அத்தியாவசியம். இதனைப் பல பெற்றோர் அறியாதவர்கள் போல நடந்துகொள்வது தம் அடையாளத்தினையே அழித்துக்கொள்வதாகும். அரசு ஆரம்பப் பாடசாலைகளிலே தமிழ் ஒரு பாடமாக உயர்ச்சி கண்டிருக்கிறது. பல்கலைக்கழகங்களிலே தமிழுக்கு எந்த அந்தஸ்தும் இல்லை.

தமிழ் மொழியைத் தமிழினம் போற்றிப் பேணவேண்டிய இன்றியமையாமையுண்டு. பல்லினச் சமூகங்கள் வாழும் நாட்டிலே ஒவ்வொரு சமூகமும் தனது அடையாளங்களைப் பேண வேண்டிய அவசியமுண்டு. இல்லாவிடின் அது தன் வேர்களைத் தொலைத்துவிட்டுத் தேட வேண்டிய சூழல் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது. அமெரிக்க ஆபிரிக்க இனத்தவர் தம் விழுதுகளைத் தேடி அண்மையில் ஆபிரிக்காவுக்குச் சென்று தேடிய வரலாறுகளை மறக்க முடியுமா? அவுஸ்திரேலியாவின் ஆதிவாசிகளில் எஞ்சியுள்ள இனக்குழுக்கள் தம் வேர்களைத் தேடிக்கொண்டிருப்பதை நாம் நிதர்சனமாகக் காண்கிறோம்.

சமூக அடையாளங்களிலே தமிழ் மக்களை இனங்காட்டுவது அவர்களுடைய மொழிதான் என்பதை விபரம் அறிந்தவர் மறுதலிக்க மாட்டார்கள். தமிழ் பேசாதவரும் கூடத் தமிழ்ப் பண்பாட்டிலே, தமிழர் பாரம்பரியத்திலே வந்தவர்களாகக் காணப்படுகின்றனர். எனவே நாம் தமிழ்மொழிப் பயிற்சிக்கும் தமிழர் பண்பாட்டு கலாசார அறிவிற்கும் துணை போக வேண்டிய கடப்பாடு உடையோம். இதற்குத் தமிழ் வாசகர் வட்டத்தினை விருத்தி செய்தல் ஒரு வழி. அத்தகைய வட்டம் எப்பொழுது உருவாகும்? அது உருவாவதற்குத் தடையான காரணிகள் யாவை?

புலம் பெயர்ந்த மூத்த எழுத்தாளர்களிற் சிலர் தொடர்ந்து எழுத்தாக்கங்களை வழங்கி வருதல் வரவேற்கத்தக்கது. அதற்கு அவர்களுக்குக் கிடைக்கும் பிரசுர வசதிகள் நம்பிக்கை ஊட்டுவன. ஆயினும் அவ்வசதி பரவலாக - பொதுவாக - இருக்கின்றது என்று கூறமுடியவில்லை. இதனாற் சில மூத்த எழுத்தாளர் குடத்துள் விளக்காகிவிட்டார்கள். உருக்கு எழுத்துகளைக் கோர்த்துத் தட்

டச்சாக அமைத்துப் பிரசுரித்த கட்டம் போய் கணினியின் ஊடாக அச்சிடும் வாய்ப்புகள் புலம் பெயர்ந்த நாடுகளிற் பெரும் வரப் பிரசாதம். ஆயினும் புலம் பெயர்ந்த நாடுகள் பிரசவித்த சஞ்சிகைகள், பத்திரிகைகள் எத்தனையோ எத்தனை! ஆனால் அவற்றிலே ஒவ்வொன்றும் குறைப் பிரசவமாகப் பிறந்து இறந்துவிட்டன. அவுஸ்திரேலியாவில் இன்று எத்தனை தமிழ்ச் சஞ்சிகை, தமிழ்ப் பத்திரிகை வெளிவருகின்றன? சிட்னியிலே கலப்பை எனும் சஞ்சிகை 1994லிருந்து தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றது. ஈழ முரசு, உதயம் என்ற பத்திரிகைகள் சில காலமாகத் தொடர்ந்து வெளிவருகின்றன. அவை இலவசமாக வருவதால் உயிர் வாழ்கின்றனவா? இலங்கையிலே பத்திரிகை — சஞ்சிகைப் பிரச்சினை தோன்றிய போது, சிறீமா பண்டார நாயக்கா அரசு தமிழகத்துப் பத்திரிகைகள் இறக்குமதியைக் குறைப்பதன் மூலம் நாட்டிலே தமிழ் ஊடகத்தினை வளர்க்கலாம் என்ற சோஷலிசவாதிகள் கருத்தினை ஏற்றுச் செயற்பட முற்பட்டது. அம்முயற்சி வெற்றி அளிக்கவில்லை. டொமினிக் ஜீவாவின் மல்லிகை போன்ற ஓரிரு சஞ்சிகையும் ஈழநாடு போன்ற ஓரிரு பத்திரிகையும் தான் கால வெள்ளத்தைத் தாண்டி வந்தன. தமிழ்நாட்டு அரசியலும் சினிமாவும் ஆக்க இலக்கியத்திற்கு விரோதமான மயக்கங்களையும் சுவை புணர்வுகளையும் சுவை நெறிகளையும் ரசனை வாய்ப்புகளையும் ஏற்படுத்தித் தமிழ் இலக்கியத்தின் வீச்சினையே கெடுத்துவிட்டன. அதன் தாக்கம் இலங்கை இலக்கிய உலகத்தினையும் அநியாயமாகப் பாதித்துள்ளது.

தமிழக ஊடகத்தின் சிறப்பின்மையை நோக்கும் அதே வேளையில், அதன் ஜனரஞ்சக வெற்றிக்குக் காரணமான அம்சங்களை மறந்துவிடல் கூடாது. அவுஸ்திரேலியத் தமிழ்ப்பத்திரிகை உலகிலே, இலங்கை அரசியற் பாதிப்புகளால் இலங்கைப் பத்திரிகைகளிலே நாட்டம் இலங்கைத் தமிழரிடையே அதிகம். ஆனால், சஞ்சிகையிலே தமிழகச் சஞ்சிகைகளின் வியாபாரம் இலங்கைத் தமிழரிடையே அமோகமாகத் தெரிகிறது. சஞ்சிகை வெளியீட்டாளர் இதற்கான காரணிகளை நின்று நிதானிக்க வேண்டும். இலங்கைச் செய்திகளை அறிய ஆவலாதி கொள்ளும் இலங்கையர், வெளியிடக் கஷ்டப்படும் சஞ்சிகைகளை விலை கொடுத்து ஆதரித்தால் புலம்பெயர்ந்த மண்ணிலும் வானம் தெரியும். மூலதனம் இல்லாது சஞ்சிகையைத் தொடர்ந்து வெளியிடல் யார்க்கும் எளிதன்று. ஆதரவு புலம்பெயர் நாட்டிலும் தமிழ் வாசகர் வட்டத்தினை விருத்தி செய்யக் கட்டாயம் உதவும்.

புலம்பெயர் தேயங்களிலே பத்திரிகா தர்மம் பேணப்பட வேண்டிய அவசியம் காணப்படுவதைச் சுட்டுவது மனவேதனையை அளிக்கிறது. அரசியற் சார்புகளால் ஏற்படும் கொள்கை வேறுபாடுகள் நேர்மையைவிட்டு விமரிசனமாக அமைதல் பத்திரிகை தர்மமன்று. மேலும், சிலரை மறைமுகமாகவும் நேர்முகமாகவும் தனிப்பட்ட முறையில் தாக்குவதும் பத்திரிகை தர்மம் ஆகாது. தாக்கப்படுபவருக்குப் பதில் கூறும் வாய்ப்பினை நேர்மையாக அளிக்க முடியாதவர்கள், அவ்வாறு செய்தல் அநாகரிகம் என்ற பாரம்பரியத்தினைக் கடைப்பிடிக்கும் இனங்களிலே தமிழினத்திற்கும் சிறப்பிடம் இருக்

கிறது என்பதை மறத்தல் சால்பன்று. மூத்த எழுத்தாளரிற் சிலர் தமக்குள்ள பிரசுர வசதிகளை, தம்மாக்கங்களை வெளியிட மட்டுமன்றித் தம்மா தர வினை நாடுபவர்களுக்கும் கொடுத்து வருவது மிகவும் வரவேற்கத்தக்கது. சிறுகதை, நெடுங்கதை, புதுக்கவிதை என்பனவற்றை ஓரளவுக்கேனும் சந்தைப் படுத்தலாம் என்ற நம்பிக்கை, புலம் பெயர் நாடுகளில் வெளியீட்டாளர்களிடமுண்டு. ஆனால், நவீனத் தமிழ் இலக்கியத்திற்கு முந்திய இலக்கியப் பாரம்பரியம் மறைந்து போகும் வருந்தத்தக்க நிலைமைக்குத் தமிழை தமிழினம் முகங் கொடுக்க வேண்டியிருப்பது தற்கொலைக்குச் சமமானது. சங்க இலக்கியமா? சிலப்பதிகாரமா? திருக்குறளா? கம்பராமாயணமா? இவையெல்லாம் நவீனத்துவத்திற்கு அப்பாற்பட்டவை! இவற்றை அறியும் ஆவலாதி மிகவும் குறைவாகவே காணப்படுகிறது. இதனால் இவற்றையோ இவை புலப்படுத்தும் கலாசார பண்பாட்டு நாகரிகங்களையோ வெளியீட்டாளர் கவனிப்பதிலே ஈடுபாடு குறைவு. இதனால் நவீனத்துவத்தினோடு தொடர்பு உடைய மூத்த எழுத்தாளருக்கு மட்டுமே புலம் பெயர்வு நாடுகளில் ஓரளவு இடம் கிடைக்கிறது. தமிழர் தம் கலாசாரத்தினை, பண்பாட்டினை, பாரம்பரியத்தினை இளஞ்சந்ததியினருக்கு உணர்த்த வல்லவர்களுக்கு வாய்ப்புகள் இல்லாமை எதிர்காலத்திலே பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும். தமிழன் என்றொரு இனம் இருந்தது; அந்த இனம் மாறிவிட்டது என்று எதிர்காலம் கூற வைக்கப் போகிறோமோ?

புலம்பெயர் மூத்த எழுத்தாளர் பலர் திரிசங்கு நிலையில் இருக்கிறார்கள். புதிய கலாசாரத்திற்குக் கலக்க முடியாமலும் பழைய காலாசாரத்தினைத் துறக்க முடியாமலும் தவித்தல் அவர்களுடைய முத்திரையாகக் காணப்படுகிறது. இந்த இரண்டுங்கெட்டான் நிலை இலக்கியத்திற்கு நல்ல கருவாக அமையலாம். சிலர் எழுத்துக்களிலே இதனைக் காண முடிகிறது.

புலம்பெயர் சூழல் புதிய புலங்களை முன்வைக்கின்றது. இங்கு மனிதவாழ்க்கையின் அகண்ட தன்மையைக் காணலாம். பல கட்டுப்பெட்டித்தனங்கள், போலி ஆவேசங்கள் மறையும் வாய்ப்பு தானாகவே வந்து விழுகின்றது. வாழ்க்கையின் அபத்த — அங்கத அமிசம் தூக்கலாகக் கண்ணில் விழுகின்றது. இவற்றாற் கற்பனையை விட்டு உண்மையைத் தரிசிக்கும் வாய்ப்புமுண்டு. பிறந்த ஊரை விட்டுச் சில கட்டை தூரமுள்ள இந்தியாவுக்குப் போகாமல் அங்குள்ள கற்பனைச் சித்திரங்களைக் கண்டு மோகித்து நின்ற கட்டம் போய்விட்டது.

தமிழ் இலக்கியத்திற்கு அந்நியமான கருப்பொருள் பல இங்கே காணப்படுகின்றன. பாரம்பரிய மாற்றத்திற்கு முகம் கொடுக்கும் புதிய - இளைய - தலைமுறையினர் அவற்றினைக் கையாள்வதிலே நிதானத்தினைப் போற்ற வேண்டி வரும். ஆண்-பெண் உறவு, ஒரு பால் உறவு, பெண்ணியம், ஆன்மீகம், குரவர் பேணல் முதலியன தமிழர் கலாசாரத்திலே சில விழுமியங்களை உடையவை. காதலைப் பவித்திரமாகக் கொண்டு மறை பொருளாகப் போற்றியது தமிழர் பாரம்பரியம். அதனைப் போற்றாது உண்மை நிலை காட்டப் புறப்பட்ட பழையனவும் புதியன

வும் தாமாகவே ஒதுங்கிக் கொண்டன. அந்நிய மண்ணிலே இயற்கை என்ற ஹோதாவிலே வரும் எழுத்துகள் அவர்களுடைய பண்பாட்டிலே வரவேற்கப்படுவதை மறுப்பதற்கில்லை. தமிழர் பண்பாட்டிலே பெண்ணியத்திற்கு அளிக்கப்பட்டு வந்த முக்கியத்துவத்தைத் திரிபுணர்ச்சியின் பாற்பட்டு வேற்றர்த்தத்திலே உயர்த்திப் பிராமணீய ஆசாரத்தினை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீடு செய்யப்படுவதை மனங்கொண்டு தொடர்வது நவீனர்கள் ஆக்கங்களுக்கு உதவுவதோடு மேற்கத்திய காய்ச்சலில் இருந்து சுகம் எய்தவும் துணை செய்யும். தாயகங்களிலே தமிழ் இலக்கியம் காயடிபட்டுக் கிடக்கிறது. பொழுதுபோக்குச் சூழலில் இருந்து தமிழகம் விழித்தெழ இன்னமும் எவ்வளவு காலம் தேவைப்படுமோ தெரியவில்லை. புதிய வீறுகொண்ட தமிழ் இலக்கியப் பாரம்பரியங்கள் புலம் பெயர் நாடுகளிலே தோன்றும் சூழல் தெளிவாகத் தெரிகின்றது. தோல்விகள் பல; சத்திய சோதனைகள் பல; போராட்டங்கள் பல; இவை இலக்கியத்திற்குப் புதிய உத்வேகத்தினைத் தரும். அந்நிய தேசத்திலே அடி அழித்து நிற்பது சாதனையா? ●

**மித்ர ஆர்ட்ஸ் & கிரியேஷன்ஸ்**

**375/8–10. ஆற்காடு சாலை, கோடம்பாக்கம்**
**சென்னை–600 024. தொலைபேசி : 2372 3182, 2473 5314**
**பேக்ஸ் : 2472 1336 ஈ–மெயில் : mithra2001in@yahoo.co.in**

## புலம்பெயர்ந்த எழுத்தாளர்களின் படைப்புகள்

| | | |
|---|---|---|
| 1. வரலாற்றில் வாழ்தல் (சுயசரிதை) I & II | எஸ்.பொ | 900.00 |
| 2. எஸ்.பொ ஒரு பன்முகப் பார்வை (கட்டுரைகள்) | எஸ்.பொ | 280.00 |
| 3. நனவிடை தோய்தல் (கதைகள்) | எஸ்.பொ | 100.00 |
| 4. பூ (கதைகள்) | எஸ்.பொ | 75.00 |
| 5. நினைவலைகள் (இலங்கை பயணக் கட்டுரை) | கே.ஜி. மகாதேவா | 70.00 |
| 6. காற்று வெளியினிலே | அப்துல் ஜப்பார் | 60.00 |
| 7. வண்ணாத்திக்குளம் (சிறுகதைகள்) | எஸ். நடேசன் | 50.00 |
| 8. ஜெயந்தீஸன் கதைகள் (சிறுகதைகள்) | கலாமோகன் | 65.00 |
| 9. யாதுமாகி நின்றாள் (சிறுகதைகள்) | சுமதி ரூபன் | 30.00 |
| 10. உயரப் பறக்கும் காகங்கள் (சிறுகதைகள்) | ஆசி. கந்தராஜா | 45.00 |
| 11. ஊசிஇலை மரம் (சிறுகதைகள்) | ரெ. கார்த்திகேசு | 50.00 |
| 12. நாடக அரங்கு (நாடகம்) | இரத்தினம் | 70.00 |
| 13. கவிதை நேரங்கள் (கவிதைகள்) | இரத்தினம் | 50.00 |
| 14. சிறீசுவின் சில கவிதைகள் | சிறீசுக்கந்தராசா | 120.00 |
| 15. அந்தச் சிரிப்பு (நாடகம்) | அம்பி | 30.00 |



குழந்தைகளே! **"ஆன்மீகம்"** என்றால் என்ன? ஆன்மீகம் என்றால் "ஆன்மா" என்பதைப் பற்றிய அறிவாகும். **ஆன்மா** என்றால் என்ன? ஆன்மா என்றால், இப் புவியில் பிறந்து இறப்பவைகளின் "உயிர்" அல்லது **"ஜீவன்"** ஆகும். இதையே நாம் எமது இந்து சமயத்தில் "பசு" என்று கூறுகின்றோம். அதாவது பதி, பசு, பாசம் எனும் முப்பொருள்களில் உள்ள பசு ஆகும். (இங்கு பசு என்பது எமக்குப் பால் தரும் பசு அல்ல.)

ஆன்மா ஆகிய உயிரைப்பற்றி ஏன் நாம் கற்றுணர வேண்டும்? ஒரு மனிதன் எக் காரணத்தினால் அவன் இறந்தாலும், அவனது உயிராகிய ஆத்மா அழிந்து இல்லாமல் போவதில்லை. ஒரு மனிதன் இறக்கும்போது அவனது ஆத்மா வேறு ஒரு இடத்திற்கு செல்கிறது என்று இந்து மதம் கூறுகின்றது. உயிர் அல்லது ஜீவன் ஆகிய ஆன்மாவை எமது ஊனக் கண்ணால் பார்க்க முடியாது. ஆனால் ஞானக் கண் ணால் பார்த்து உணரமுடியும். எமக்கு உள்ளது போல் ஆன்மாவிற்குப் பௌதிக உடல்தான் இல்லையே ஒழிய, எமது ஊனக் கண்ணுக்குப் புலப்படாததும் பௌதிக

# குழந்தைகளே ஆன்மீகம் கற்றுணர்வோம்

நிலைக்கு அப்பாற்பட்டதுமாகிய **சூக்கும உடல்** ஆன்மாவிற்கு உண்டு. இவ்வாறு மனித உடலை விட்டுச் சென்ற ஆன்மாவாகிய உயிர் அல்லது ஜீவன் ஆனது, தாம் தாம் ஏற்கனவே செய்து கொண்ட **கன்மங்களுக்கேற்ப** மறுபடியும் இப்புவியில் பிறந்து வாழ்க்கையை அனுபவித்து இறக்கிறது.

**"கன்மம்"** என்றால் என்ன? **கன்மம்** என்றால் **செயல்** அல்லது **வினை** என்று கூறலாம். கன்மத்தைப் பேச்சு வழக்கில் கருமம் என்றும் கூறுவர். கன்மம் அல்லது செயல் என்று கூறப்படுகின்ற **வினையானது** இரு வகைப்படும். இருவகை **வினைகள்** எவை? **நல்வினை, தீவினை** என்பதே இருவகை வினைகளாகும். நல்வினை, தீவினை என்றால் என்ன? **தர்மச் செயல்** அல்லது **புண்ணியச் செயல்** நல்வினை ஆகும்.

அதாவது, **நல்வினை** = தர்மச் செயல் = **புண்ணியச் செயல்** ஆகும்.

இவ்வாறே, **தீவினை** = அதர்மச் செயல் = **பாவச் செயல்** ஆகும்.

கன்மம் அல்லது செயல் ஆகிய **நல்வினை, தீவினைகளை** நாம் எப்படி செய்கிறோம்? நல்வினை, தீவினைகளை நாம் **மூன்று முறைகளில்** செய்கிறோம். அதாவது ஒரு செயலை **மனதால்** நினைப்பதன் மூலமும் அல்லது அச்செயலை செய்வேன் என்று **வாயால்** சொல்வதன் மூலமும் அல்லது அச்செயலை எமது **உடலால்** செய்வதன் மூலமும் நாம் அக் கன்மமாகிய நல்வினை தீவினைகளைப் புரிகின்றோம். இதையே **திரிகரணங்களாகிய மனம், வாக்கு, காயம்** என்பவற்றால் கன்மம் புரியப்படுகிறது என்று இந்து மதத்தில் கூறப்படுகிறது.

இவ்வுலகில் நாம் ஒருவருக்கு ஒரு **தீயசெயலைச்** செய்ய வேண்டும் என்று **மனதால் நினைப்பது** அல்லது அத்தீய செயலைச் செய்வேன் என்று **வாயால் சொல்வது** அல்லது அத்தீய செயலை நம் **உடலால் செய்வது** ஆகிய மூன்றும் தீவினை அல்லது அதர்மமாகிய பாவச் செயல் ஆகும். இதன்மூலம் நாம் பாவத்தைச் சேகரிக்கின்றோம். இப்பாவமானது சூக்கும வடிவம் பெற்று, எமது ஆன்மாவாகிய உயிருடன் சேர்ந்து நிலைத்திருக்கிறது. இதை நாம் எம் கண்ணால் பார்க்கமுடியாது, ஆனால் ஞானிகளால் உணரமுடியும்.

மேலே கூறியவாறே நாம் ஒரு **நற்செயலைச்** செய்ய வேண்டும் என்று **மனதால் நினைப்பது,** அல்லது அந்த நற்செயலைச் செய்வேன் என்று **வாயாற் சொல்வது,** அல்லது அந்த நற்செயலை எமது **உடலால் செய்வது** ஆகிய மூன்றும் நல்வினையாகிய புண்ணியச் செயல்களே ஆகும். இதன் மூலம் நாம் புண்ணியத்தைச் சேகரிக்கின்றோம். இப் புண்ணியமானது சூக்கும வடிவம் பெற்று, எமது ஆன்மாவாகிய உயிருடன் சேர்த்து நிலைத்திருக்கிறது. இதை நாம் எம் கண்ணால் பார்க்க முடியாது. ஆனால் ஞானிகளால் உணரமுடியும் என்று ஆன்மீக உயர்நிலை எய்தியோர் கூறுகிறார்கள்.

நல்வினை, தீவினை அல்லது தர்ம அதர்மச் செயல்களாகிய புண்ணிய பாவங்கள் ஒருவரால் செய்யப்பட்டவுடன், அவ்வினை அழிந்துவிடாமல் பௌதிக நிலைக்கு அப்பாற்பட்டு அது பெற்றுக் கொள்ளும் சூக்கும வடிவத்தை

**ஆகாமியம்** என்றும், அப்புண்ணிய பாவங்களாகிய ஆகாமியம் ஆனது அதைச் செய்தவரின் ஆன்மாவாகிய உயிருடன் சேர்ந்து நிலைத்திருக்கும்போது **சஞ்சிதம்** என்றும், அதற்குரிய பலனை அதைச் செய்தவருக்கு கொடுக்கக் கூடியதாக அது முதிரும்போது **பிராரத்தம்** என்றும் சைவ சித்தாந்தம் கூறுகிறது. இப் பிராரத்தையே பேச்சுவழக்கில் பிராப்தம் என்று கூறுகிறார்கள்.

**கன்மம் = செயல் = வினை**

***1. நல்வினை=நற்செயல்=தர்மச் செயல் = புண்ணியச்செயல் = புண்ணியம்***

***2. தீவினை =தீயசெயல் = அதர்மச் செயல்=பாவச்செயல்=பாவம்***

**புண்ணிய பாவச்செயல் = ஆகாமியம் = சஞ்சிதம் = பிராரத்தம்**

புண்ணிய பாவமாகிய ஆகாமியம் ஆனது, சஞ்சிதமாக ஓர் ஆன்மாவுடன் சேர்ந்திருக்கும் போது அவர் இறக்க நேரிட்டால், அச்சஞ்சிதமானது அவரின் ஆன்மாவாகிய உயிருடன் தொடர்ந்து சென்று, அவ்உயிரின் மறுபிறப்பில் அது பிராரத்தமாக முதிரும் போது, அதற்குரிய பலனை அப் பிறப்பிற்கு உரியவருக்குக் கொடுக்கிறது. அவர் ஏற்கனவே **புண்ணியத்தைச்** செய்திருந்தால் அதற்குரிய **நற்பலனையும்,** அவர் பாவத்தைச் செய்திருந்தால் அதற்குரிய **தீய பலனையும்** அவரவர் அனுபவிப்பர் என்று சைவ சித்தாந்தம் கூறுகிறது.

**கன்மம்** மூவகைப்படும்.

அவையாவன ***1. மானதம் 2. வாசிகம் 3. காயிகம்*** என்பனவாகும்.

மனதால் ஒரு செயலை நினைப்பதனால் புரியப்படும் கன்மம் = **மானதம்**

வாயால் ஒரு செயலைச் செய்வேன் என்று சொல்வதனால் புரியப்படும் கன்மம் = **வாசிகம்**

உடலால் (காயத்தால்) ஒரு செயலைச் செய்வதனால் புரியப்படும் கன்மம் = **காயிகம்** ஆகும்.

இப்பிறவியில் நாம் செய்த எல்லாப் புண்ணிய பாவங்களுக்குரிய பலன்களையும் இப்பிறவியில் நாம் அனுபவிப்பதில்லை. அதாவது இப்பிறப்பில் நாம் புரிந்த கன்மங்கள் எல்லாவற்றிற்குமுரிய பலன்களை இப்பிறப்பிலேயே அனுபவித்து விடுவதில்லை. நாம் புரிந்த கன்மங்களில் பிராரத்தமாக முதிர்ந்தவற்றின் பலன்களை இப் பிறவியிலும், முதிரா மல் சஞ்சிதமாக ஆன்மாவைத் தொடர்பவற்றின் பலன்களைத் தொடர்ந்து வரும் அடுத்த அடுத்த பிறவிகளிலும் அனுபவிக்கிறோம் என்று இந்துமதம் கூறுகின்றது. கன்மங்களை நாம் புரிந்த ஒழுங்கில் தான் அவற்றிற்குரிய பலன்களையும் அனுபவிப்போம் என்றுமில்லை. அதாவது நாம் புரிந்த கன்மங்கள், அவை புரியப்பட்ட ஒழுங்கில்தான் முதிரும் என்றுமில்லை என்பதையும், அவை ஒழுங்கு மாறியும் முதிரலாம் என்பதையும் நாம் உணர வேண்டும். புரியப்பட்ட கன்மங்கள் பிராரத்தமாக முதிர்வதற்குச் சில வினாடிகள் தொடக்கம் சில யுகங்கள்வரை செல்லலாம் என முற்றுமுணர்ந்த ஞானிகள் கூறுகிறார்கள்.

கீழ்நிலை வகுப்பு மாணவர்களுக்கு ஒளியானது நேர் கோட்டில் செல்கிறது என்று விஞ்ஞானம் கற்பிக்கப்படுகிறது. ஆனால் பின்னர் உயர்நிலை வகுப்புகளில் ஒளியானது அலை வடிவில் வளைந்து செல்கிறது என்று விஞ்ஞானம் கற்பிக்கப்படுகிறது.

இதனால் கீழ்நிலை வகுப்பு மாணவர்களுக்கு விஞ்ஞானம் தவறாகக் கற்பிக்கப்படுகிறது என்று கருதக் கூடாது. அந்த அந்த வயது, அறிவுக்கு ஏற்றபடி கற்பிக்கப் படுகிறது.

ஒரு செயலை (கன்மத்தை) எமது காயத்தால் (உடலால்) புரியும் போது, புரியப்பட்ட கன்மத்திற்கு உண்டான இச்சூக்கும வடிவத்தை நாம் அழிக்க முடியாது. அது பிராரத்தமாக முதிர்ந்து அதற்குரிய பலன் கொடுத்த பின்பே இல்லாமல் போகிறது. எனவே மாணவர்களாகிய நாம் தர்மச் செயல்களைச் செய்து புண்ணியங்களைச் சேர்ப்போம். அல்லது பாவங்களை யாவது செய்யாமல் இருப்போமாக.

எமது மனதின் நிலைகள் மூன்று ஆகும். அவையாவன புலனறிவு, ஆழ்மன அறிவு, பிரபஞ்ச அறிவு ஆகியவனவாகும். இவற்றை ஆங்கிலத்தில் முறையே Conscious mind, Subconscious mind, Universal mind என்றும் கூறுவர்.

அன்பு, தர்மம், நாணயம், கருணை, மனிதநேயம் போன்ற உயர் எண்ணங்களை எமது மனதினுள் விடும்போது, நாம் சொர்க்க வாசலைத் திறக்கிறோம். அதாவது உயர் எண்ணங்கள் சொர்க்க. வாசலைத் திறக்க வைக்கும். இது இப்பிரபஞ்ச நியதி. இதை எவராலும் மாற்ற முடியாது.

கோபம், பொறாமை, பேராசை, சுயநலம், வஞ்சகம், வெறுப்பு, காம, குரோத, மத, மாட்சரியம் ஆகிய இழிவான தாழ் எண்ணங்களை எமது மனதினுள் விடும் போது நாம் நரக வாசலைத் திறக்கிறோம். அதாவது இழிவான கீழ் எண்ணங்கள் நரக வாசலைத் திறக்க வைக்கும். இதுவும் இப் பிரபஞ்ச நியதி. இதையும் எவராலும் மாற்ற முடியாது.

எண்ணங்கள் எங்கே பிறக்கின்றனவோ அந்த இடத்தை நிசப்தப் படுத்தும்போது, நாளடைவில் பிரபஞ்ச அறிவுடன் தொடர்பு ஏற்பட்டு, பிரபஞ்ச அறிவாகிய ஞான அறிவு கிடைப்பதன்மூலம் நம்மை நாமே அறிந்துகொள்ள முடியும் என்று உபநிடதம் கூறுகிறது. பயிற்சி செய்யாமல் மேலோட்டமாகப் பார்த்தால், இதன் உட்கருத்து சிறிதும் புரிய மாட்டாது.

ஒரு பிறவியில் ஓர் ஆன்மா செய்த கன்மங்களின் பலனாக அது மீண்டும் மீண்டும் பிறந்து இவ் உலக வாழ்வில் உழலுகிறது. இதற்கு முற்றுப் புள்ளி வைப்பது போல் எமது ஆன்மாவை இறைவனாகிய பரமாத்மாவுடன் கலக்கச் செய்து பிறவி எடுக்காமல் இருப்பதுவே ஆன்மீக ஈடேற்றம் என்று இந்து மதம் கூறுகிறது. இவ் ஆன்மீக ஈடேற்றத்தையே முக்தி அடைதல் அல்லது சிவ பதம் அடைதல் அல்லது வீடு பேறு அடைதல் அல்லது ஜீவன் முக்தி அடைதல் என்றும் கூறுவர்.

ஆறு அறிவுடன் மானிடராக இவ் உலகில் பிறந்த நாம் ஆன்மீக ஈடேற்றம் பெற்று முக்தி அடைவதற்கு ஒன்றில் **சைவ சித்தாந்தத்தின்** வழியில் அல்லது **சைவ வேதாந்தத்தின்** வழியில் எமது வாழ்க்கையை அமைத்து ஒழுகவேண்டும்.

சைவ சித்தாந்தத்தைப் பற்றி முதலில் கவனிப்போம். ஆன்மீக ஈடேற்றத்தைப் பெறுவதற்கு, நாம் சைவ சித்தாந்தத்தின் வழியில்

ஒழுகிச் செல்ல வேண்டுமாயின், முதலில் முப்பொருட்களான பதி, பசு, பாசம் என்பவை பற்றிக் கற்றுணர்ந்து அதன்வழி ஒழுக வேண்டும்.

நிலையில்லா உலக பந்த **பாசத்திற்குக்** காரணமாயும், அதனுடன் பின்னிப் பிணைந்ததுமாகியதும், பௌதிகப் பொருளுமாகிய எமது உடம்பில், பௌதிக நிலைக்கு அப்பாற்பட்டு, ஒருவர் இறக்கும்வரை அவருக்குத் தென்படாமல் அவருடன் இருந்து, பின் இறக்கும்போது பிரிந்து சென்று விடுகின்ற உயிராகிய **பசுவையும்** ஆன்மீக ஈடேற்றும் பெறும்வரை அறிந்துணர முடியாத பரமாத்மாவாகிய **பதியையும்** பற்றிக் கற்கும்போது, தெரிந்ததில் இருந்து தெரியாததற்குச் செல்வது கற்றுணர்வதற்கு இலகு வானது என்பதால், நாம் பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருட்களையும் பாசம், பசு, பதி என்ற ஒழுங்கில் கற்றுணர முயற்சி செய்வோம்.

பாசம், பசு, பதி என்பவற்றின் சார அம்சங்களைச் சுருக்கமாகப் பார்த்த பின்னர் இம்முப்பொருட்களைப் பற்றி விரிவாக ஆராய்வோம்.

முதலாவதாக, பாசத்தின் சார அம்சங்களைக் கவனிப்போம். பாசம் என்பதைப் பற்றி அறிவதற்கு, தடை, அறிவு, உணர்வு, அறியாமையாகிற ஆணவம், நல்வினை தீவினையாகிய புண்ணிய பாவங்களும் அவற்றின் நிலைகளும் வகைகளும், உடம்பு மனம் முதலிய கருவிகள், எழுவகைச் சரீரங்கள், சொல்லுலகம், பொருளுலகம், அர்த்தப் பிரபஞ்சம், குணங்கள், படி வகைகள், என்பன போன்றவற்றைப் பற்றிக் கற்றுணர்தல் வேண்டும்.

இரண்டாவதாக, ஆன்மா அல்லது உயிர் என்று சொல்லப்படுகின்ற பசுவின் சார அம்சங்களைப் பார்ப்போம். பசுவாகிய உயிர் அல்லது ஆன்மாவைப் பற்றி அறிவதற்கு, அறிவுடை உலகமாகிய சேதனப்பிரபஞ்சம், அறிவில்லாத சட உலகமாகிய அசேதனப் பிரபஞ்சம், சத சத்து, உயிரின் இயல்புகளும் அவற்றின் நிலைகளும், தச காரியங்கள் என்பவை போன்றவற்றைப் பற்றிக் கற்றுணர்தல் வேண்டும்.

இறுதியாக, இறைவன் அல்லது பரமாத்மா அல்லது கடவுள் அல்லது பரம்பொருள் அல்லது சிவம் அல்லது பரப்பிரம்மம் என்று சொல்லப்படுகின்ற பதியைப் பற்றி அறிவதற்கு, இறைவனின் எண் குணங்கள், மூவகைத் திருமேனிகள், ஐந்து நிலைகள், ஐந்து தொழில்கள், பதி பசு பாசங்களின் தொடர்பு, சக்தி, தீட்சை வழிகள் என்பன போன்றவற்றைப் பற்றிக் கற்றுணர்தல் வேண்டும்.

இறைவனுக்கு ஒரு குறிப்பிட்ட உருவத்தையோ அன்றி ஒரு குறிப்பிட்ட வடிவத்தையோ குறிப்பிட்டுக் கூறமுடியாது. ஏனெனில், இறைவன் எங்கும் எப்பொழுதும் எப்படியும் வியாபித்திருக்கும் தன்மை உடையவர். எனவே இறைவனுக்கு எவ்உருவத்தையோ அன்றி எவ்வடிவத்தையோ எப்பொருளிலும் கொடுத்து வணங்குவதில் தவறில்லை. இறைவனை அவ்வப் பொருட்களில் காணுவது அவரவர் மனங்களைப் பொறுத்ததாகும்.

இனி பாசம், பசு, பதி என்பவை பற்றி விரிவாக நாம் பார்க்க வேண்டும். ●

# HOW TO BREATHE PROPERLY AND WHAT ARE ITS MAGICAL EFFECTS ON US

Realizing the importance of breath, Yogis of yore and Sages who lived ages ago evolved a technique called Pranayama. This is commonly known today as Control of Breath. An ancient Hatha yoga text called 'Hatha Yoga Pradipika' describes Pranayama as follows; Prana + ayama. It is a technique through which the quantity of Prana (vital life force) in the body is activated to a higher frequency. It means the process by which the internal pranic store is increased.. As this pranayama is a very powerful exercise, sages had laid down some disciplines to be followed by those who desire to practise it. People today are exposed to so many disturbing external factors that it is difficult to follow all the disciplines. This is why Bhagawan says that this must be done under the care of an experienced Guru (teacher). "There are many types of Pranayama and in the present world most types are impossible to practise. Only those that help Dhyana have to be adopted. These are called simplified system of Breath control. In these there are two types. One practised with manthra and the other without manthra. The former transforms the body and mind while the latter transforms only the body."(Sanathana sarathy, may 1968)

**2 SIMPLIFIED SYSTEM OF BREATH CONTROL WITH MANTHRA. 'SOHUM'**

2.1 Manthra is a Sanskrit word. "Manthra ' Man' syllable indicates the process of probing and the syllable 'Thra' the capacity to take across or to liberate. In short manthra is that which saves when the mind dwells upon it. When Manthras are uttered as rigmarole they yield no fruits. A person can reap full reward when he recites them with the knowledge of the meaning and significance" says 'Leela Kaivalya Vahini'

**2:2 What is Sohum ?**

Bhagavan says "As we breathe in it is 'So' and as we breathe out it is 'Hum'. It means I am God. So 21600 times per day (15 times per minute) during our breathing process we breathe in and breathe out Sohum-I am God.or I am He. We say (breathe) this yet we are not aware of it. We can control our breath through this Manthra." Dr.Funi Bunda further explains in his 'In the Vision of the Divine' "We are declaring with every breath our divine heritage. We have to hear this

'So ' and 'Hum' with our consciousness during our breathing. Initially it is necessary that we have to practise with pointed attention during quiet periods. It purifies our minds and confers the constant awareness of Divinity within ourselves "

**3 SIMPLIFIED SYSTEM OF BREA TH CONTROL WITH 'OM' MANTHRA**

**3:1 What is OM?**

The potential of OM manthra is so prodigious that one need not chant any other Manthras if he can chant the OM manthra alone in the proper way. This will bestow all the benefits one requires. Any one who desires to know something about its profundity may refer to "Baba-The Breath of Sai " compiled by Grace Mc Martin.

**3:2 The technique of chanting OM and Breath Control**

It is not possible to find a simpler way of explaining this technique than the one given by a Swami in a very succinct manner. He says, "OM must be recited slowly and with deliberation. The sound must be like an aircraft approaching from a distance to the spot where you are and flying away into the distance. Low at first and gradually becoming higher and louder and then slowly relapsing into silence. This silence after the experience, being as significant as the OM." To experience the spiritual sensation that runs through your nerves and body when reciting the OM manthra one must participate in a prayer meeting or Bhajan and join the chorus of the Omkar ceremony of reciting OM twenty one times.. This is happening every morning throughout the year.

In a certain Mandhir in India. I am sure that their vibrations are in the air forever and whoever becomes conscious of this and give an ear will be breathing it and feeling the joy.

**4 SOME IMPORTANT MODIFIED BREATHING SYSTEMS THAT CAN TRANSFORM OUR BODY /HEALTH.**

**What is wrong with our Breathing?**

"We are breathing incorrectly". This has been an accusation by the yoga teachers of the past as well as present. The yogis of yore were comparing our breathing with their proper Pranayama system of breathing, which is a difficult exercise for reasons stated earlier. The present yoga teachers have developed some simplified systems by combining the wisdom of the sages and ages with recent medical discoveries. A yoga teacher of the East who was running a famous yoga school in Switzerland says "Our greatest mistake is that we cannot breathe properly. Neglected and haphazard breathing shortens our years, reduces our vital force and makes us susceptible to the mildest of all illness, the common cold. Only by conscious regulation of our breathing we can achieve the resistance

**T. KEETHEESWARANATHAN**

which assures us long life free of any sickness. ('Yoga and Health' by Jesudian and Elizabeth Haich )

4.2 Some of us are not aware that we are having second lungs, the skin. Without our skin-breathing there cannot be quality life. Unaware of this some people dress themselves in such a way that they block the pores of the skin preventing sufficient air getting into the body.

4.3 Some breathe through the mouth. It is all right when you have a blocked nose. We should not indulge in it when we can avoid it.. It is said in yoga books that our mouth has no organ for absorbing Prana (vital life force) which is very essential for healthy living. Only the chemical substance in the air is absorbed through the mouth.. So when we breathe for long periods through the mouth we are bound to be seriously deficient in Pranaa and we become weak and glands will not function properly.

**4.4 PRESENTLY PEOPLE ARE BREATHING IN THREE DIFFERENT WAYS**

1 Upper or Shallow breathing - Air is taken in by raising the collar- bone and shoulders. This is mainly due to the way people dress themselves (more often the women) In this method the upper part of the lungs only receive any fresh air.

2 Middle or intercostal breathing In this type of breathing air fills mostly the middle section of the lungs with more effort. Those involved in athletics breathe this way.

3 Abdominal or diaphragm breathing: Here the abdominal part swells while one inhales and the diaphragm subsides when exhaling. This is the best among the three. Majority of men breathes this way.

A complete or what is called Yogic breathing combines all the above three ways integrated into one single full and rhythmic movement So says Andre van Lysebeth in his book 'Yoga Self Taught'

**4.5 THE TECÇHNIQUE OF PROPER BREATHING**

1. Exhale completely while drawing the abdomen in
2. Take a deep inhalation expanding the abdomen (like a balloon) and the ribs without any strain.
3 allow the lungs to fill completely by raising the collarbones

In theory this appears to involve three stages, in practice it is only one movement synthesizing all the three rhythms. You glide from one to another in a continuous flow without gasping or any strain. When the lungs are completely filled, breathe out in the same sequence as when inhaling. Practise this at any time whenever you think of it; breathe consciously and as completely as possible. The best time to do this is early morning when you wake up and in the night before going to sleep while on the bed. Once you start practicing this complete breathing you will find it to be a very easy act because it is said that we are only re-acquainting ourselves with this system. The yoga teachers, some Psychologist, and

Doctors teaching Holistic medicine say that we were all born breathing in this perfect and complete way. They suggest that if we observe a sleeping baby, we can see the little tummy moves outwards easily and fully as it inhales the air. If not for the constant stresses of life that overload our circuits most of us would be oreathing like a baby who does not have a care nor stress in the world. So it is very important that we must re-acquaint ourselves with this complete and perfect system of breathing which needs only a little conscious effort but has profound benefits. Our mind gains peace, self-confidence, and assurance and resistance power while eliminating impurities from the blood.

**5 SOME EFFECTS OF THE PERFECT BREATHING SYSTEM**

I am now going to share with you some interesting information on the effects of perfect breathing which I gathered from a book that shows the way to inhale energy and exhale stress by guiding and controlling our breathing system. The book 'Breathe In and Breathe Out' is authored by Dr.James Loehr a psychologist, and Dr.Jeffrey A Migdow M.D. who has been training doctors in holistic medicine for twenty years in America. They suggest that any one having heart ailments or blood pressure problems should consult their family physicians before embarking on any deep breathing exercises.

**5.1 STRESS AND HOW TO DEAL WITH IT.**

The Doctors say that the modern life is tense. We are frequently subjected to high level stresses like divorce, illness, thefts and robberies. We are also subjected to a barrage of low level stresses which are omnipresent, chronic and infiltrating our lives day and night. Since stresses interfere with our process of breathing we tend to breathe shabbily and the respiratory system gets locked in a state of tension. The medical community in the U.S.A. is beginning to recognise breath control as an effective agent in stress management. Complete breathing seems to be the most convenient way to fight the emotional reaction to stress and tension. Practising calm collected and deep breathing helps one to fight stress by creating a calm atmosphere mentally and physically. Some scientific evidence suggests that by manipulating the nasal breathing, it is possible to build energy, induce relaxation and heighten awareness. This is based on the traditional 'Alternate nostril breathing system. This technique helps one to adapt the state of mind to the task at hand.

Long ago yogis discovered that the right nostril is the fiery or heating nostril and the left nostril the cooling nostril. Breathing through the right nostril creates more heat in your system and breathing through the left nostril helps to cool you.

Another yoga teacher, Andre van Lysebeth says in his book ' Yoga self taught', "when ever you feel tired, depressed or discouraged do a few

complete breathing exercises; your fatigue will disappear magically, your mental balance will be re-established. And you will set to work again with renewed will. Remember the ideal respiration is deep, slow, silent, and easy without any straining. It is the finest tonic of all for the heart."

### 5.2 WHAT ARE THE MAGICAL EFFECTS OF THE AIR AT SEA BEACHES AND OTHER WATER FRONTS

Most of us like to go to the seabeach or riverside just for relaxation unaware of the magical effect of the air in such places. The two doctors mentioned earlier says that 'the waves, ocean swells, and offshore breezes make sea air highly beneficial to our health. The actions of the water create negative ions- beneficial electric charges. These charges when brought into the body with the breath tend to re-energize the whole system. Sea air also contains minerals, which are absorbed into the lungs, freshening and cleansing the tissues.' The negative ions are abundant during and after a rainfall. This is the reason why we usually feel robust at those times. Those unable to go to beaches can create an oceanic atmosphere in your own home with plants and negative -ion generators. So whenever possible try to spend some time with your family or friends at the seashore or even by a river and do not just have a picnic and come away but make it a point to do some deep breathing to take in revitalizing negative ions into your system.

### 5.3 LAUGHTER AND ITS EFFECTS

We have known that some aspects of laughter stimulate hundreds of nerves, veins and muscles in the face. Now we find that laughter is also another natural breathing technique. This has a cleansing and revitalizing effect too. Patch Adams, M.D a great physician has used humour to help people with illnesses overcome depression and disease. Laughter shifts the frame of mind from anxiety and negativity to self-confidence and joy. This enables one to change from short and shallow breaths to long exhaling and deep inhaling.

### 5.4 SINGING AND BREATHING

"Singing is a natural body activity through which the body deepens and normalizes breathing says the* Doctors. When you sing you focus your breath and concentrate on sound and align your entire breath apparatus. When you sing with gusto you have to employ tremendous inhalation and exhalation. After the singing you feel better because you have expressed yourself to your satisfaction.. You have relaxed through deep regular breathing. It is as simple and profound as that "(*Drs Loehr and Migdow)

### 5.5 WALKING

Research has proved that the potential of walking is astounding. A brisk walk 4 or 5 days a week, slows or stops Osteoporosis, strengthens muscles and the heart and relaxes the nerves of the whole body..

### 5.6 SPORT

Sporting activities are important as they can breathe new life into our life. Breathing techniques in these activities could be followed easily as you do the exercises. Only if things are not going well the two Doctors suggest that you can go straight to your breath for answers. These days due to the competitive atmosphere of games and matches even children suffer from stress. Teaching them Breath control can help them deal with anger, tension, and failure.

So we find that breath control (Perfect normal breathing instead of haphazard and shallow breathing) is the key to emotional control. It is the simplest, safest, cheapest weapon for mastering emotional control.

### CONCLUSION

Let us breathe healthy air inside and outside. Breathe through the nose, it is how ions reach our blood stream. That is where you want the negative ions. As far as possible avoid cigarette smoke, dust and soot for they put a positive charge in the ions. Negative ions have been found to be an effective painkiller. Our bathroom shower is a natural ionizer. Deep perfect breathing can relax both the body and mind, leaving one feels rejuvenated. Remember the warning given at the beginning not to attempt any retention of breath, which should be done in the presence of a proper guru (teacher). So let us breathe properly for proper breathing can empower our life.

**Source of Inspiration;**


1. 'Hatha Yoga Pradipika (The light of Hatha Yoga)
   Commentary by Swami Muktibodh ananda Saraswathi by Dr. Jeffrey A Migdow
2. Sanathana sarathy May, 1968 &
3. Leela Kaivalya Vahini by Bhagavan Baba. Dr. James Loehr
4. Vision of the divine by Dr.Funi Bunda
5. Baba the Breath of Sai compiled by Andre van Lysebeth
   Grace. J.Mc. Martin
6. Yoga and Health by Selvarajan Yesudian and Elisabeth Haich
7. Breathe in and Breathe out
8. Yoga Self taught by


வேகமாய் நடந்தவந்த
பாதையில் தடுக்கி
க(ா)ல் ஒடிந்தது கல்

●

விழிகளில்
பா(ர்)வை தவறியது
பாவை

வீடு கட்டிக்கொடுத்து
வெளியே நிற்கிறது
வேலிகள்

●

கலையிழந்து
கொண்டிருக்கிறது - கல்
சிலை

ஜெய்



# மணிமாற்றம்

விமானநிலையத்திலிருந்து வெளியே வரும்போது கவனமாக இரு டாக்சிக்காரார்கள் இலையான்கள் போல் உன்னை மொய்த்துக் கொள்வார்கள். அதுவும், நீ மேற்கு நாட்டிலிருப்பவன் என்பதை அறிந்தால் உன்னை விட்டு வைக்க மாட்டார்கள். எதற்கும் நல்ல வழி என்ன வென்றால், விமான நிலையத்திலிருந்து வெளியே வந்ததும், அரசாங்க பஸ் ஒன்று நிற்கும். அதில் ஐம்பது ரூபாய் கொடுத்தால் சென்னை சென்ட்ரல் வரைப்போய்ச் சேர லாம். இவ்வாறு நண்பன் ஒருவன் என் இந்தியப் பயணத் துக்கு முன்னர் என்னை எச்சரித்திருந்தான்.

உண்மைதான். சுங்கப்பரிசோதனை மற்றும் குடிவரவு அலுவல்களையெல்லாம் முடித்துவிட்டு விமான நிலையத் திலிருந்து வெளியேறியதும், ஒரு டசன் டாக்சிக்காரார்கள் என்னைச் சூழ்ந்து கொண்டார்கள்.

ஒருவாறு அவர்களிடம் தப்பி, பஸ்ஸை வந்தடைந்தேன்.

சென்னை மாநகரசபை, சென்னை விமான நிலையத்திலிருந்து சென்னை சென்ட்ரல்வரை பஸ் சேவை ஒன்றை நடத்தி வருகிறது.

கதவைத் திறந்தவுடன் பஸ் சாரதி, இருக்கையிலிருந்து எழும்பி வந்து என் சூட்கேஸை வாங்கிக் கொண்டான்.

சாரதியின் முகத்தில் புன்னகை நிலவியது.

பஸ் வண்டியில் சாரம் அணிந்த புறக்கோட்டை வர்த்தகர் ஒருவரும் அமர்ந்திருந்தார்.

'எவ்வளவு?' என்று நான் சாரதியிடம் வினவினேன்.

'எழுபத்தைந்து ரூபாய்' என்கிற பதிலுடன் டிக்கெட்டைக் கிழித்தான் சாரதி. டிக்கெட்டிலும் அப்படியே எழுதப்பட்டிருந்தது.

அங்கே அமர்ந்திருந்த வர்த்தகருக்கு அந்தச் சாரதியை முன்னரே தெரியும் போலும்.

'அந்த ஆளுங்களக் கூட்டிக் கொண்டு வாங்க சார்' என்றான் சாரதி அந்த வர்த்தகரைப் பார்த்து.

வர்த்தகரும் உடனே எழுந்து வண்டியை விட்டிறங்கி நடந்து போய்க் கொண்டிருந்த ஒரு தம்பதியினரை அணுகி ஏதோ கேட்டார்.

இப்படியே மாறி மாறி அங்கு சென்று கொண்டிருந்தவர்களிடம் அந்த வர்த்தகர் 75 ரூபாய்க்கு 'சென்ட்ரலைப்' போயடையலாம் என்று கூறிக் கொண்டிருந்தார். ஒருவரும் பஸ் வண்டியில் ஏறுவதாகக் காணோம். வர்த்தகர் மீண்டும் பஸ்ஸினுள் ஏறி உட்கார்ந்து கொண்டார். 'இன்னும் இரண்டு பேருங்க இருந்தா போயிடலாம்' என்றான் சாரதி.

நேரம் ஓடிக்கொண்டிருந்தது. விமான நிலையத்திலிருந்து ஒருவர், இருவராகப் பயணிகள் வெளியே வந்த வண்ணமிருந்தனர். ஒருவரும் பஸ் வண்டியை அணுகுவதாக இல்லை.

சாரதியும் 'தங்கம் என்ன விலை' டொலருக்கு எத்தனை ரூபா என்றெல்லாம் வினவிக் கொண்டிருந்தான். காலை ஆறுமணியிலிருந்து விமான நிலையத்தில் பயணிகள் வரும்வரை, காத்துக் கொண்டிருப்பதாகக் கடிந்து கொண்டான்.

நான் பஸ்ஸில் ஏறி 45 நிமிடங்கள் வரை சென்றிருக்கும்.

திடீரென சாரதி பஸ் வண்டியை ஆரம்பித்தான்.

பஸ் மற்றும் மோட்டார் வண்டிகள் நிறைந்த சென்னை வீதிகளில் அந்தப்பஸ் வண்டி நகர்ந்து நகர்ந்து இறுதியில் 'சென்ட்ரல்' ஐ அணுகியது.

'இதுதானுங்க சென்ட்ரல்' என்ற வண்ணம் வண்டியை நிறுத்தினான் சாரதி.

நான் சூட்கேசைத் தூக்கக் குனிந்தேன். 'ஏதாவது குடுத்திட்டுப் போசார்' என்றான் சாரதி என்னை நோக்கியவாறு.

பஸ்வண்டி சென்னை விமான நிலையத்தில் பயணிகளுக்காகக் காத்து நின்றவேளை யாராவது வரமாட்டார்கள் என்று ஏங்கிக் கிடந்து சாரதி இப்போது ஏதாவது எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

சென்னை மாநகர சபையின் விமான நிலைய பஸ் சேவை, சாரதிகளுக்கு எழுதிக்கொடுக்கப் பட்ட சொத்து. சாரதிகளுக்குச் சம்பளத்துடன் ஏதாவது கிடைக்கும். அரசாங்கம் நடத்தும் சேவைக்கும் தனியார் சேவைக்கும் ஏதாவது வேறுபாடு இருக்கத்தானே வேண்டும்? தனியார் மயப்படுத்துதலைப் பற்றி அரசியல்வாதிகள் பேசுவதற்குக் காரணம் இருக்கவேண்டாமா?


●

நவீனன் ராசதுரை

# உங்கள் சிந்தனைக்கு ஒரு சிறுவிருந்து

நைரோபி நகர வீதி ஒன்றில் தற்செயலாக ஓர் ஈழத் தமிழரைச் சந்தித்தேன். அங்குள்ள சர்வதேசிய அரசு நிறுவனமொன்றில் அவர் பொறுப்புள்ள பதவியில் இருந்தார். 'தமிழ்' எம் இருவரையும் பிணைத்து வைத்தது.

ஒருநாள் அவரைக்காண அவரது அலுவலகம் சென்றிருந்தேன். ஓர் ஈழத்தமிழர் இத்தனை



பெரிய பதவி வகிப்பது எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது. அவரின் கீழ் பல் இனமக்கள் பலர் பணி புரிந்தார்கள். அவரது மேசைமேல் இருந்த தொலைபேசிகள் மாறி மாறி அடித்துக் கொண்டிருந்தன. அவற்றுள் பல பன்னாட்டுத் தொலைபேசி அழைப்புகள். அத்துடன் அடிக்கடிப் பலர் வந்து அவரிடம் ஆலோசனை கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

இவர் இத்தனை பிஸியான வரா...? ஆச்சரியத்தை அடக்கியவாறு "நீங்கள் ரொம்ப பிஸியாக இருக்கிறீர்கள். நான் இன்னொரு நாள் வருகிறேன் எனக்கூறி எழுந்தேன்."

"இருங்கள், இருங்கள், கூடிய விரைவில் வேலையை முடித்து விட்டு வருகிறேன். நாம் இருவரும் ஒன்றாகவே வீட்டுக்குப் போவோம். இன்றைய இரவுச் சாப்பாடு எம்முடன்தான்" எனத் தடுத்து நிறுத்தினார்.

நல்ல சோறு கறியை நினைத்து நாக்கு சப்புக் கொட்டவே மீண்டும் இருக்கையில் அமர்ந்தேன்.

தொடர்ந்து அவருக்கு வேலைகள் வந்து கொண்டிருந்தன. அவரது கட்டளையை எதிர்பார்த்துப் பல வேலைகள் காத்திருந்தன. பார்த்துக் கொண்டிருந்த எனக்கே தலைவெடிப்பது போல் இருந்தது.

ஒருவழியாக அலுவலகம் முடிந்து வெளியே வந்தால் நைரோபி நகர வீதியில் பயங்கர வாகன நெரிசல். வீடு வந்து சேர்வதற்குள் போதும் போதுமென்றாகிவிட்டது.

மாளிகை போன்ற வீடு! அதை அவரது நிறுவனம் கொடுத்திருக்க வேண்டும். வீட்டின் விசாலமான வெளி விறாந்தையில் ஒரு பிள்ளையார் சிலை. வீட்டுக்குள் செல்வதற்கு முன்பு நண்பர் பிள்ளையாரின் தும்பிக்கையைப் பிடித்தபடி கண்மூடி சிறிது நேரம் மௌனமாக நின்றார். "நாடு கடந்து வந்தும் நல்ல கடவுள் பக்தி" என எண்ணிக் கொண்டேன்.

இவரைக் கண்டதும் பிள்ளைகள் ஓடோடி வந்தார்கள். மகன்

தான் செய்த கணக்கைக் காண்பித்தான். மகள் தனது ஆப்பிரிக்க ஆரம்ப பாடசாலையில் தான் வரைந்த படங்களையும் அன்று அங்கு நடந்தவற்றையும் விவரித்தாள். மனைவி மகிழ்ச்சியுடன் கோப்பி, பலகாரம் எடுத்து வந்தார். இவர்களுடன் கூடவே வசிக்கும் இவரது மாமியார் மகிழ்ச்சியுடன் சமையல் அறையில் இருந்து எட்டிப்பார்த்தார். நண்பரும் உற்சாகமாக எல்லோரிடத்திலும் கலகலத்துப் பழகினார். பிள்ளைகளுடன் விளையாடினார். அலுவலக டென்ஷன் எதுவும் அவரிடம் காணப்படவில்லை. தானும் மகிழ்ந்து குடும்பத்தினரையும் மகிழ வைத்தார்.

"இவ்வளவு அலுவலக வேலைப் பளுவுக்குப் பின்பும் வீட்டில் உற்சாகமாக இருக்கிறீர்கள், இது எப்படி சாத்தியமாகிறது" என்று நான் கேட்டேன்.

"வீட்டுக்குள் நுழையுமுன்பு நான் பிள்ளையாரின் தும்பிக்கையைப் பிடித்து நின்றது என்னை ஒரு பக்திமானாக உங்களுக்குக் காட்டியிருக்கும். ஆனால் அதுவல்ல விஷயம். நான் எனது எல்லா டென்ஷனையும் தும்பிக்கையில் கழட்டிவிட்டு வந்துவிடுவேன்" எனச் சிரித்துக் கொண்டே சொன்னார்.

"பிரச்சனைகளைத் தும்பிக்கையில் கழட்டிவிடுவதா?" என நான் வியப்புடன் கேட்டேன்.

"அலுவலக டென்ஷனை வீட்டுக்குக் கொண்டுவந்தால் வீண் பிரச்சனைதான். வீட்டில் யாரிடமும் இயல்பாய்ப் பேச முடியாது. கோபம், எரிச்சல் வரும். இதனால் வீட்டில் யாரும் இயல்பாய்ப் பழகமாட்டார்கள். வெறுக்க ஆரம்பித்து விடுவார்கள். இது தேவையா? அதனால்தான் நான் வீட்டுக்குள் நுழையுமுன்பு கண்களை மூடி மூன்று நிமிடங்கள் மனதை ஒரு நிலைப்படுத்துவேன். அதற்குப் பிள்ளையாரின் தும்பிக்கை உதவுகிறது. நீங்களும் முயற்சித்துப் பாருங்களேன்" என்றார்.

உண்மைதான். நம்மில் எத்தனைபேர் அலுவலகத்திலிருந்து வீடு திரும்பும்போது நல்ல "மூட்டில்" வருகின்றோம்? பிள்ளைகளோ, வீட்டிலுள்ள முதியவர்களான பெற்றோரோ மாமன் மாமியாரோ, ஏதாவது சாதாரணமாகக் கேட்டால் கூட, கோபத்தை வரவழைக்கின்ற எரிந்து விழ வைக்கிற சுமைகளுடன் வருகிறோம். வீட்டில் எத்தனை குழந்தைகள் அப்பா அம்மா அலுவலகத்திலிருந்து வீடு திரும்புவதை ஆவலோடு எதிர்பார்க்கிறார்கள்? அப்பா வீட்டுக்கு வருகிறார், என்றால் பயம் பதட்டம். காரணம் அவர்கள் அலுவலகத்திருந்து வீட்டுக்கு வரும்போது சும்மா வருவதில்லை. ஏகப்பட்ட வேலைப்பளுக்களை, மன அழுத்தங்களை வீட்டுக்குச் சுமந்து கொண்டு வருகிறார்கள். இதனால் சாதாரணமான எல்லாவற்றிற்கும் எரிந்து விழுகிறார்கள்.

வீடு என்பது சந்தோஷமாய் இருக்க வேண்டிய இடமில்லையா? அதில் எதற்கு அனாவசிய அலுவலக டென்ஷன்? வீடுதிரும்பும்போது வீட்டிலுள்ள வயதானவர்களும் குழந்தைகளும் உங்களிடம் எதிர்பார்ப்பது உற்சாகத்தையும் சந்தோஷத்தையும் மட்டும் தான்.

நாளைமுதல் அலுவலகத்திலிருந்து வீடு திரும்பும்போது கவலைகளைக் கழற்றிப் போட்டுவிட்டு உற்சாகமாக வாருங்கள். வாழ்க்கையில் சந்தோஷமாற்றங்கள் தென்படும்.

இந்த அறிவுரை உங்களுக்கு மட்டுமல்ல, எனக்கும் தான்! ●

# தாயிற் சிறந்த கோயில் இல்லை

அவுஸ்திரேலியாவில் உள்ள அடர்ந்த காடு ஒன்றில் கங்காரு குடும்பம் ஒன்று வசித்து வந்தது. தந்தைக் கங்காரு, தாய்க் கங்காரு இரண்டு குட்டிக்கங்காருகள் என நால்வர் அடங்கிய குடும்பம் அது.

ஒருநாள் தந்தைக் கங்காரு வீதியைக் கடக்கும்போது மிகவும் பெரிய டிரக் வண்டி ஒன்று அந்தக் கங்காருவை மோதியதில் தந்தைக் கங்காரு அந்த இடத்திலேயே உயிரை இழந்தது. தாய்க் கங்காரு தன் இரண்டு குட்டிகளையும் கண்ணும் கருத்துமாக வளர்த்து வந்தது.

குட்டிகளில் மூத்தது ஆண். மற்றது பெண். மூத்த குட்டியின் பெயர் கண்ணன். அதற்கு மூன்று வயதாகிறது. இளைய குட்டியின் பெயர் யமுனா. அதற்கு ஒரு வயதாகிறது.

அந்தக் கண்ணன் கங்காரு சரியான குறும்புக்காரக் குட்டி. இயுக்கலிப்டஸ் மரத்தின் இலைகளை எல்லாம் பிடுங்கி எறியும். புல்லின் மேல் குத்துக்கரணம் போடும். குளத்தில் தண்ணீர் அருந்தச் சென்றால் மற்ற கங்காருவின் மேல் தண்ணீரைத் தெளித்துவிட்டு ஓடிவிடும். தன் தாயின் பையில் படுத்திருக்கும் தங்கையைச் சீண்டி விளையாடும். தங்கையை நித்திரை கொள்ளவிடாது.



உஷா ஜவாகர்

பொழுதுபோகாவிட்டால் தன் நண்பனான தேவன் என்ற கங்காருவின் வாலைத் தன் வாலால் தட்டிக் கொண்டிருக்கும்.

எப்போதும் கண்ணனின் அம்மா கண்ணனிடம் "நீ விளையாடப் போவதென்றால் வெகுதூரம் போகக்கூடாது. இங்கு எங்களுக் கருகில் தானிருந்து விளையாட வேண்டும். கவனமாகவிரு! உன்னைத் தேடி வர உன் அப்பாவும் எங்க ளுடன் இல்லை!" என எச்சரிப் பாள்.

அன்று தேவனுடன் விளை யாடக் கிளம்பிய கண்ணன் தாயின் எச்சரிக்கையை மறந்து வெகு தூரம் சென்றுவிட்டது. பாதி வழியி லேயே தேவன் தான் விளையாட வரவில்லை எனக் கூறிவிட்டுத் தன் இருப்பிடத்திற்குத் திரும்பிவிட்டது.

அசட்டுத் துணிச்சலுடன் சென்ற கண்ணன் கங்காரு இருட்டத் தொடங்கியதும் பீதியடைந்தது. மிகவும் பயந்து போனது.

வானில் சில நட்சத்திரங்கள் முளைக்கத் தொடங்கின. சூரியன் மறைந்து சந்திரன் மின்னத் தொடங் கினான்.

கண்ணன் கங்காரு இப்போது வேறொரு சிறிய காட்டை அண் மித்திருந்தது. வழியில் கண்ட எகிட்னாவிடம், எகிட்னா அண்ணா, எகிட்னா அண்ணா! நான் வீடு செல்லும் வழியை மறந்துவிட் டேன், என் வீட்டு வழி உங்க ளுக்குத் தெரிந்தால் சொல்வீர் களா?" எனப் பணிவுடன் கேட்டது.

உண்ணுவதற்காக எறும்பைத் துரத்திக்கொண்டிருந்த எகிட்னா "கங்காருக் குட்டியே! எனக்கு உன் வீட்டு வழி தெரியாது. இந்தப் பக்கம் சென்றால் ஒரு சின்னக் குளம் வரும். குக்கபாறா அக்கா குளத்தில் தண்ணீர் அருந்திக் கொண்டிருப்பார், நீ அவரிடம் கேளு! என்று கூறிச் சென்றது.

இப்போது கண்ணன் கங்காரு வுக்குக் கண்களில் இருந்து கண்ணீர் வழியத் தொடங்கியது. அந்தக் கண்ணீரைத் துடைத்தபடிப் பாய்ந்து பாய்ந்து சென்று குளத்தை அடைந்தது.

தண்ணீர் அருந்திக் கொண் டிருந்த குக்கபாறா தண்ணீர் அருந்துவதை நிறுத்திவிட்டுத் தன் சிறகை அடித்தபடியே யார் வரு வது எனத் திரும்பிப் பார்த்தது.

குக்கபாறாவின் அருகே சென்ற கண்ணன் கங்காரு, "குக்கபாறா அக்கா, குக்கபாறா அக்கா! நான் வீடு செல்லும் வழியை மறந்து விட்டேன். என் வீட்டு வழி உங்களுக்குத் தெரிந்தால் சொல்வீர்களா?" என விம்மியபடியே கேட்டது.

குக்கபாறா அக்காவுக்குக் கண் ணன் கங்காருவைப் பார்க்க மிக வும் பரிதாபமாக இருந்தது. 'கங் காருக் குட்டியே! எனக்கு உன் வீட்டு வழி தெரியாது. இந்தப் பக்கம் சென்றால் ஒரு பெரிய மரம் வரும். அதில் குவாலா மாமி இருக் கிறார். அவர் இப்போது தன் குட்டியுடன் விளையாடிக் கொண் டிருப்பார். நீ அவரிடம் கேள்' என்று கூறிச் சென்றது.

கண்ணன் கங்காரு பாய்ந்து பாய்ந்து ஓடியது. குவாலா மாமி இருந்த மரத்தை வந்தடைந்தது.

"குவாலா மாமி குவாலா மாமி! நான் வீடு செல்லும் வழியை மறந்து விட்டேன். என் வீட்டு வழி உங்க ளுக்குத் தெரிந்தால் சொல்வீர் களா?" என அழுதபடியே கேட் டது.

குட்டியுடன் விளையாடிக் கொண்டிருந்த குவாலா மாமி மரத்தை விட்டுக் கீழே இறங்கி வந்தது. கண்ணன் கங்காருவின் அருகே வந்து அதனைத் தடவிக் கொடுத்தது. பின் 'கங்காருக் குட் டியே! எனக்கு உன் வீட்டு வழி தெரியாது. இப்படியே நேரே சென்றால் பொசம் மாமா மரத் தின் மேலிருந்து ஓய்வெடுத்துக்

கொண்டிருப்பார். நீ அவரிடம் கேளு' என்று கூறியது.

கண்ணன் கங்காருவுக்கு இப்போது பசி வயிற்றைக் கிள்ளத் தொடங்கியது. அம்மாவின் அருகே இருந்தால் எனக்கு எப்போதும் பசிக்காதே! அம்மா என்னை எவ்வளவு அக்கறையுடன் கவனித்துக் கொள்ளுவா. நல்லபடி யூக்கலிப்டஸ் இலையைச் சாப்பிடச் சொல்லுவாளே. தங்கையும் என்னைத் தேடப் போகிறாளே! என்ற எண்ணத்துடன் தன்னாலியன்ற வேகத்துடன் தாவித் தாவிப் பாய்ந்து ஓடியது.

அங்கு பொசம் மாமா தன் பருத்த வாலை ஆட்டி ஆட்டி கண்களை அரைவாசி மூடியபடி நித்திரை கொண்டு கொண்டிருந்தார்.

பொசம் மாமா வாலை ஆட்டிய வண்ணம் அரைத் தூக்கத்தில் இருந்த காட்சியைக் கண்டதும் அந்தக் கவலையான நிலையிலும் கண்ணன் கங்காருவுக்குச் சிரிப்பு வந்தது.

சிரிப்பை அடக்கிக் கொண்டு 'பொசம் மாமா பொசம் மாமா! நான் வீடு செல்லும் வழியை மறந்து விட்டேன். என் வீட்டு வழி உங்களுக்குத் தெரிந்தால் சொல்வீர்களா?' என அடக்கத்துடன் கேட்டது.

"கங்காருக் குட்டியே எனக்கு உன் வீட்டு வழி தெரியாது. ஆனால் அதோ தெரிகிறது ஒரு பாலம் அதைப் பார்த்தாயா? நீ அந்தப் பாலத்தைக் கடந்து சிறிதுதூரம் சென்றாய் என்றால் கங்காரு தாத்தா ஒருவர் தன் குடும்பத்துடன் வசித்து வருகிறார். நீ அவரிடம் கேள்!" என்று கூறியது.

பொசம் மாமாவுக்கு நன்றி கூறிவிட்டு, கண்ணன் கங்காரு விரைவாகப் பாலத்தைக் கடந்து சென்றது. பாலத்துக்கு அப்பால் சென்றதும் கண்ணைக் கசக்கிய படியே கங்காரு தாத்தாவைத் தேடியது.

அப்போது உர் என்ற சத்தத்துடன் டிங்கோ (காட்டு நாய்) கண்ணன் கங்காருவைத் துரத்தத் தொடங்கியது.

அம்மா! உன் சொல்லைக் கேளாமல் வெகுதூரம் விளையாட வந்ததற்கு நல்ல தண்டனை அனுபவித்து விட்டேன். ஐயோ! இந்த டிங்கோ என்னை இப்பிடித் துரத்துகிறதே யாருமே என்னைக் காப்பாற்ற மாட்டார்களா? எனக் கதறிக் கொண்டே கண்ணன் கங்காரு பாய்ந்து பாய்ந்து ஓடியது.

அந்தக் கதறல் கடவுளின் காதில் விழுந்துவிட்டது போலும்! யாரோ தோண்டி வைத்திருந்த குழியில் அந்தப்பொல்லாத டிங்கோ விழுந்து ஒரு காலை உடைத்துக் கொண்டது. கால் உடைந்ததால் அதனால் குழியைவிட்டு வெளியே வர முடியவில்லை. மேல் மூச்சு, கீழ் மூச்சு வாங்க ஓடிக்கொண்டிருந்த கண்ணன் கங்காரு பின்னால் டிங்கோ துரத்தி வரும் சத்தம் நின்று போனதால் நிம்மதி அடைந்தது.

அப்போது அவ்வழியே வந்த கங்காருத் தாத்தா கண்ணன் கங்காருவின் அவல நிலையைப் புரிந்து கொண்டு கண்ணன் கங்காருவை அதன் தாயிடம் அழைத்துச் சென்றார்.

தாயைக் கண்டதும் கண்ணன் கங்காரு ஓடிச்சென்று தாயையும் தங்கையையும் விம்மிய படியே அணைத்துக் கொண்டது. "அம்மா! இனிமேல் உன் சொல்லைத்தட்ட மாட்டேன். இது தாய்மேல் ஆணை" என்று உறுதியுடன் கூறிய கண்ணன் கங்காருவை அதன் தாய் பெருமிதத்துடன் பார்த்துப் புளகாங்கிதமடைந்தது. ●

# இப்படியும் தவறுகள் ஏற்படலாம்

**குறிப்பு :**
இந்த விடயம் தை 2004 கலப்பை இதழில் 68 ஆம் பக்கத்தில் தவறவிடப்பட்ட பகுதி, இதை இங்கு தருகிறோம்.

☞ திருமண வைபவ இடத்துக்கு மணமகன் வீட்டினர் பொன்னுப் பெட்டியை (தங்கத் தாலியுடனான கொடி கூறைச்சேலை யாகின) எடுத்துவர மறந்துவிடுவதால் காலதாமதம் ஏற்படல்.

☞ மணவறைப்படலின் உயரம் 12 அடி. அதை வைத்து அலங் கரிக்கப்பட வேண்டிய மாடி வீடு அல்லது சீலிங் உயரம் 10 அடியானதால் மணவறையை அரைகுறையாக்கப்படாமல் கவனித்திருக்கலாம்.

☞ மணமகன் மண்டப வாசலில் வந்து சேர்ந்து பின்புதான் கால்கழுவத்தேவையான செம்புக்கும் தண்ணீருக்கும் ஆலாய்ப் பறந்த சம்பவங்கள் நிறைய உண்டு. அவதான மாயிருந்தால 5 நிமிடச் சுணக்கம் தவிர்த்திருக்கலாம்.

☞ ஆராத்தி எடுப்பதற்கான சமயங்களில் அக்கடமைக்கென நியமிக்கப்பட்ட சுமங்கலிப் பெண்கள் அவ்விடத்தில் இல்லாத தால் தாமதம் ஏற்பட இடமுண்டு.

☞ ஆராத்தி வலப்பக்கமாகவா அல்லது இடப்பக்கமாகவா சுற்றி எடுப்பது என்று இருபெண்களும் சில சமயங்களில் தடுமாறுவ

துண்டு. எப்பொழுதும் மணமக்களை நோக்கி வலப்பக்க மாகவே ஆராத்தி எடுத்தல் வேண்டும்.

☞ விவாகப் பதிவுகாரர் வந்த பின்னரே ஆவணங்களுக்கும் பொறுப்புள்ள சாட்சிகளுக்கும் ஓடித்திரிந்த சம்பவங்களு முண்டு.

☞ பூதாக்கலம் என்றழைக்கப்படும் புதுமணத் தம்பதிகளுக்கான மணமகள் வீட்டினரால் முன்கூட்டியே தயாரிக்கப்பட்டுக் கொண்டு வராத காரணங்களினால் சாதாரண உணவைக் கொடுத்த சம்பவங்களும் உண்டு.

☞ தாலிக்கொடியிலுள்ள சுரை சரியாக இயங்குகின்றதா என்று முதல்நாளே மணமகன் வீட்டினரால் சரிபார்க்கப்பட வேண்டும்.

☞ மணமகளின் முக்காடு எனப்படும் முகத்திரைச்சீலை (Veil) பளபளக்கும் (glittering) வேலைப்பாடுகள் உள்ளதைத் தேர்ந் தெடுப்பதால் வீடியோ படப்பிடிப்பின்போது நன்றாகக் காட்சிதராதென் பதால் சாதாரண முக்காடு அணிதல் நன்று.

## இரு வீட்டினராலும் நாடவேண்டியவர்கள் பட்டியல்

1. வீடியோ படப்பிடிப்பாளர், நிழல் படப்பிடிப்பாளர் 2. திருமண அழைப்பிதழ் அச்சக உரிமையாளர் 3. சலவைத் தொழிலக உரிமையாளர் 4. மணவறை கல்யாண மண்டப அலங்கார சோடனை வாடகைக்காரர் 5. கல்யாண மண்டப உரிமையாளர் 6. நகை மாளிகை உரிமையாளர் 7. பட்டாடைகள் விற்பனையாளர் 8. மலர் மாலைகள் சரமாலைகள் நாகசடம் கட்டுபவர் 9. மணமகள் உடையலங்கார, தலையலங்கார விற்பன்னர் 10. மேளதாள நாதஸ்வர விற்பன்னர் 11. மணமகளின் தலையலங்காரப் பொருட்கள் வாடகைக்கு விடுபவர் 12. கல்யாண ஊர்வல ஊர்தி உரிமையாளர் 13. குளிர்பான சிற்றுண்டி சாப்பாடு ஒழுங்கமைப் பாளர்கள் 14. தளபாடங்கள் (கதிரைகள் போன்றன) வாடகைக்கு விடுபவர் 15. கம்பளங்கள் புற்பாய்கள் வாடகைக்கு விடுபவர் 16. எவர்சில்வர், பித்தளைப் பாத்திரங்கள் வாடகைக்கு விடுபவர் 17. பழக்குலைகளுடனான கதலிவாழையைத் தயார் செய்பவர் 18. சித்த வைத்திய மருந்துக்கடை உரிமையாளர் 19. திருமண வைபவம் நடத்தும் குருக்கள்.

## நூலாசிரியரின் குறிப்புரை

திருமண நாளுக்கு முன்னதாகவும் பின்னதாகவும் நடைபெறும் சம்பிரதாயக் கொண்டாட்டங்கள்-சடங்குகள் பற்றி இக்கட்டுரையில் எழுதப்படவில்லை.

இன்றைய காலகட்டத்தில் அவரவர் வசதிப்பிரகாரம் இரு வீட்டினரும் புரிந்துணர்வுடன் பொன்னுருக்குதல்; கன்னிக்கால் நாட்டுதல், மாப்பிள்ளைக்குக் கடுக்கன் அணிவித்தல், பதிவுத் திருமணம், மணமக்களின் முதலிரவுக்கான இடம், நாள்கடை, நாலாம் சடங்கு போன்ற சமயாசார-சம்பிரதாய நிகழ்வுகள் நடைபெற வேண்டியது காலத்தின் கட்டாயத் தேவையாகும்.


திருமணம் எனப்படும்பொழுது முக்கியமாக இரண்டு விடயங்கள் கவனிக்கப்பட வேண்டும். முதலாவதாக அவர்கள் வாழ்கின்ற சமுதாயத்தில் உடல் இயக்கத்துக்கு இரத்த ஓட்டம் அவசியம்போல் உலக இயக்கத்துக்கு பரிசுத்தக் காதலுணர்வின் ஊடாக அந்த இரு ஜீவன்களினது தனித்துவம் பேணப்பட்டு இனவிருத்திக்கான நியாயமான ஒத்துழைப்பைச் சமுதாயம் எத்தகைய சூழ்நிலையிலும் பாரபட்சமின்றி வழங்குவதாகும். இரண்டாவதாக மனித குலத்தின் ஆழமான தத்துவம் பிறரின் பாராட்டைப் பெறுவதற்கு என்றென்றும் ஏங்குவதென்பதால் தங்கள் குடும்ப உயர்வுக்காகப் பாடுபடும் அதேவேளை சமுதாயத்தினால் வகுக்கப்பட்டு வரையறைக்குட்படுத்தப்பட்டுக் கட்டிக் காக்கப்பட்டு வரும் நடைமுறைக்குச் சாத்தியமற்ற-நம்பகத்தன்மையற்ற பழம்பெரும் பாரம்பரியங்கள் தொடர்ந்தும் கைக் கொள்ளப்படவேண்டுமா என்பது அவரவர்கள் சுயமாகவே தீர்மானிக்க வேண்டியதொன்றாகும்.

புதுமணத் தம்பதிகள் மற்றவர்களின் இடையூறுகள் இன்றித் திருமணநாள் முதலாகத் தம்மிருவரது விருப்பப்படியே இனிமையான இல்லறப் பயணத்தை ஆரம்பிக்க வேண்டும். அன்று முதல் கூடியவரை இருவரும் தனிக்குடித்தனம் நடத்தி வாழ்வாங்கு வாழ வேண்டுமென்பதற்காகவே ஸ்ரீதனம் எனப்படும் மூலதனம், (dowry) அன்பளிப்புகள் (Presents) கொடுக்கப்பட வேண்டும் என்ற எழுதாச் சட்டம் தமிழ் மக்களிடையே பண்டைய காலம் தொட்டு வழங்கப் பட்டு வருகின்றது. ஸ்ரீதனக் கொடுப்பனவின் உண்மையான நோக்கம் இன்று துஷ்பிரயோகப்பட்டாலும் அதன் ஆரம்பகால நோக்கம் மிகநல்லதே.

வழிபாட்டுத்தலமொன்று பக்தர்களின் ஈர்ப்புச் சக்தியாக மாறுவதற்கு தெய்வச் சிலைகளின் கலையம்சம், கோயிலின் அழகு, புனிதத்தன்மை, பூசர்களின் அன்பான பண்பான பக்தி பூர்வமான.....

# தொடங்குதல்...


தமிழச்சி




மௌனத்தை வேவு பார்க்க
வைத்துவிட்டு
வார்த்தை வேடிக்கை பார்க்கிறது
இருவருக்கும் இடையில்
வசதியாய் ஊஞ்சலாடிக் கொண்டு

கண்ணுக்குத் தெரியாத
நுண் திரையிட்டு
கவனமாய் நூலிழைகளை
ஆராய்கின்றதொரு
நெசவுக்காரனின் பாவனையோடு
கைரேகை பார்த்து இருவரும்
கனத்து இருக்கின்றோம் களைத்தும்
ஒரு கோபச் சொல்லோ
ஆதங்கப் பெருமூச்சோ
குற்றஞ்சாட்டுதலின்
முகபாவமோ இன்றி
கடிகார முள் மட்டுமே
ஆதிக்கம் செலுத்துகின்ற
இந்த அறையின்
உறை பனியைச்
சிறு செருமலின் வெப்பத்தில்
நம்மில் யாராவது உடைக்கும்
அந்தக் கணத்திற்காகக்
காத்திருக்கின்றேன் நான்
காத்திருந்து பழக்கப்படாத
கடிகாரத்தின் முள் சுமந்து

❐





# கவியரங்கம்

கவிதையிற் பட்டிமன்றம்

தமிழ் மூத்த பிரசைகள் சங்கத்தின் அங்கத்தவர் தினமான யூலாய் 22ம் திகதி வியாழக்கிழமையன்று நடைபெற்ற கூட்டத்தில் முக்கிய நிகழ்ச்சியாக நடந்தேறிய கவி அரங்கத்திற்கு **கலாநிதி வேந்தனார் இளங்கோ** அவர்கள் தலைமை வகித்தார். அன்று பல்வைத்திய கலாநிதி பா.சோ. பாரதி அவர்களும் திருமதி. மனோ ஜெகேந்திரன் அவர்களும் **"புலம்பெயர்ந்த தமிழர்கள் புகுந்த நாட்டில் தமிழ்மொழி, கலாச்சாரம், பண்பு முதலியவற்றிற்கு மறுமலர்ச்சி தந்து மகிழ்வாய் தமிழ் மாதே"** என்னும் தலைப்பிலும், எதிர்த்தரப்பில் திருமலை மூர்த்தி அவர்களும் திருமதி. சௌந்தரி சிவானந்தன் அவர்களும் **"புலம்பெயர்ந்த தமிழர்கள் புகுந்த நாட்டில் தமிழ் மொழி, கலாச்சாரம், பண்பு முதலியவற்றின் வளர்ச்சி கண்டு மகிழ்வாய் தமிழ்மாதே"** என்னும் தலைப்பிலும் கவிதைகள் புனைந்தார்கள்.


பல்வைத்திய கலாநிதி பா.சோ. பாரதி அவர்கள் பாடிய கவிதைகள் கீழே தரப்பட்டுள்ளன:

### இறை வணக்கம்

நாவினிக்கத் தேமதுரத் தமிழ் அமுதை
நாவமர்ந்து அளித்தருளும் வெண் கமலப்
பூவினிக்க உறைசெல்வி பூங் கழல்கள்
போற்றிநின்று ஏத்திடுவேன் புதுமை மிகு
தேனினிக்கும் கவிதையிலே கவி அரங்கம்
செவி இனிக்க வழங்கவரும் இந்த நல்ல
நாளினிக்கத் தமிழ்முருக வேளின் பாதம்
நானிருகை கூப்பிநின்று வணங்கு வேனே!

### அவை வணக்கம்

இவையைத்தான் செய்வீரென்று எவர் கூறினாலும்
என்றும் தன் நிலைப்பாட்டிற் பிறழா வீரர்
சபைத்தலைவர் இராமநாதன் அவர்க ளுக்குத்
தந்திடுவேன் நல்வணக்கம் ஏற்பீர் அன்ப!
சுவைபூத்த கவிதைகளைச் செவியாற் கேட்டுச்
சோபையொடு கைதட்டி ஊக்கம் ஊட்ட
அவைபூக்க அணிஅணியாய்த் திரண்டு வந்த
அன்புநிறை மூத்தோரே வணங்குகின்றேன்.



## தலைவர் வணக்கம்

வேந்தன்தான் அரசன் அல்லன்
வீறுடன் தமிழாய்ப் பாய்ந்த
வேங்கைதான் விடங்கம் மிக்க
வெள்ளைத் தமிழ் வளர்த்த
வித்துவான் யார்? என்று அன்று
வினாவினைக் கேட்டு நின்றால்
வித்தாண்மை விஞ்சி நின்ற
விழுமிய சொல்லின் செல்வன்
வேந்தனார் இவர்தான் என்பர்
விருதுகள் பெற்றுயர்ந்த எங்கள்
வேந்தனார் பெற்ற செம்மல்
விழைநில இளங்கோ அல்லன்
வேந்தனாய்த் தமிழ் வளர்க்கும்
வித்துவ இளங்கோ அன்றோ?
வேட்பொடு தலைமை தாங்கும்
விசாரதா பாரதி வணக்கம்.

புலம்பெயர்ந்த தமிழர்தம் புகுந்த நாடெங்கும்
போற்றியே மொழியோடு கலாச்சாரம் பண்பு
நலம்துலங்க வளர்தலைக் கண்டுதமிழ் மாது
நனிபூத்து மகிழ்கின்றாள் என்று வாதாட
பலம்குறைந்த பாரதியை அரங்கில் ஏற்றிப்
பாவம்வால் திணறடிக்கப் பவனி வந்த
கலங்கடிக்கக் களங்கள்பல கண்ட கவிஞர்
கட்டழகன் மூர்த்திக்கென் அன்பு வணக்கம்!



மூர்த்திக்கோர் வலது கரமாய்
மூத்தோர் நிறைந்த அவையில்
வார்த்தையால் அல்ல நல்ல
வண்டமிழ்க் கவியும் பெய்து
நேர்த்திக்கால் தப்பி ஓடும்
நில்லீர் என்று எதிர்க்க வந்த
சீர்த்திக்கோர் சௌந்தரிக் கென்
சீரிய வணக்கம் அம்மா!


ஒருமுறை பட்டி மன்றம்
ஒன்றினைக் கவிதை வடிவில்
அருமையாய் அமைக்க வெண்ணி
ஆவலாய்க் கேட்ட ஞான்று
வருகிறேன் வாகை சூட
வடிதமிழ் தொடுப்போம் என்ற
திருமதி மனோவிற்கு என்தன்
செந்தமிழ் வணக்கம் அம்மா!

செப்பிடுவேன் கேட்டிடுவீர் திருமலை மூர்த்தியரே
சிரமப்பட்டே நீவிர் திருவாய் மலர்ந்தவற்றைத்
தப்பென்று கூறிடாது சரியென்று கொள்வதற்குத்
தரப்போகும் என்கவிதைக் கேதுபதில் செப்பிடுவீர்
அப்படியே உமதுதலை அதன்பின் சுற்றாவிட்டால்
அடுக்குமொழிச் சொல்லடுக்கிச் சமாளித்துச்சபைமுன்னே
ஒப்பிடுவீர் உண்மைக்குப் புறம்பென்று கண்ணுற்றால்
உறைப்பாகப் பதில்தருவேன் உரமிருந்தால் விடைபகர்வீர்.

சந்ததியாய் நாம்மானத் தமிழ ரடா
தரணியில் உயர்ந்ததெம் கலாச்சாரம்
சுந்தரநற் றமிழ் மொழி தொன்மை மொழி
தொடர்ந்து வரும் குலமகிமை காப்போம் என்று
கந்தனுக்கு உகந்ததேன் தமிழை ஆராக்
காதலுடன் மதலைகளுக்கு ஊட்டிநிற்கும்
விந்தைமிகு சிறுகூட்டம் உண்டு ஏற்பேன்
வேதனையிற் சாதனைதான் மலர்ச்சி வருமோ?

## செந்தமிழ்த் தாயே!

தைவதத் தமிழ்மணித் தாயே தமிழர்
தமிழ்ப்புது வருடப் பிறப்பினைக் கண்டாய்
வையக மெலாங் குடிபுகுந்தே தமிழர்
வந்திடச் சிலரின் வண்மை தன்னை
கையுடன் அவர் மனம் புகுந்துநீ கண்டிடக்
கலங்குவாய் வளர்ச்சியைக் கண்டும் மகிழாய்
பையவே நீ அவர் சிறுமையைப் போக்கப்
பாங்குடன் கொணர்ந்திடாய் மறுமலர்ச்சி.




குலம்விளங்கத் தலைமுறையாய்ப் போற்றி வந்த
குணம்மாறி நிறம்மாறி வாழ்வோர் காண்பாய்
பலம்மிகுந்த பணவரவாற் கர்வங் கொண்டு
பகட்டினிலே வாழ்வோரைப் பார்ப்பாய் தெய்வ
தலம்என்றும் பாராது சண்டை இட்டு
தம்பதவி தான்பெரிதென்று உழல்வோர் பார்ப்பாய்
மலம்நீக்கி மனித நேயத்தைத் தேக்கி
மகிழநீ வழங்கிடாய் மறு மலர்ச்சி.

## இப்படியும் நடக்கிறதே அம்மா!

கலப்புமணம் செய்யும் இளங்காதலர் ஓர் புறமே
கசந்து விவாக ரத்துச்செய் துழல்வோர் ஓர் புறமே
புலம்பெயர்ந்தோர் இறக்குவித்த பெற்றோரிற் சிலரும்
புதுவிதமாய்க் கன்மவினை தீர்ப்போர் ஓர் புறமே
விலங்குகள்போல் வீதியிற்பண் பிளப்போரும் உளரே
வேண்டாமிப் படியெல்லாம் எங்கள் தமிழ் மக்கள்
குலப்பெருமை இழந்தழியும் நிலைப்பாட்டை மாற்ற
கொணர்வாயே மறுமலர்ச்சி நீமகிழ வேண்டில்.

## அறிவாயோ தமிழ்த் தாயே!

ஐயையோ வேண்டாம் என்று இகழ்ந்து கூறி
அருந் தமிழ்ப்பால் தம்மழலைக்கு ஊட்டார் பலரை
மெய்யாகக் கண்டிடுவாய் நெஞ்சங் குமுறி
விம்முமம்மா தமிழ்படித்தால் நேரம் வீணாம்
ஒய்யார மாய் ஆங்கிலத்தைக் கற்றால்
ஓங்கி உயர்ந்திடு வாராம் வகுப்பிற் பிள்ளை
நெய்யாக அவர் மனதை மாற்றி நீயும்
நிசமற்ற தவறிதென்று உணரச் செய்வாய்.



ஆராத காதலுடன் பேரனிடம் கேள்வி
ஆசையுடன் கேட்டவனை அணைத்து நின்று
தாராயோ தமிழிலே பதிலை என்றால்
சரளமாய் ஆங்கிலச்சொல் வீச்சுக் கிடையில்
வாராது தத்தளித்து மழலைக் கொச்சை
வடிவமாய்ச் சிலதமிழ்ச்சொல் வருதல் கேட்பாய்
தீராத பெருங்குறைதான் அம்மா இந்தத்
திரிசங்கு நிலைக்கு மறுமலர்ச்சி தாராய்.

## இன்னும் கேட்பாய்

பெற்றதம் மழலைக்குத் தமிழ்ப்பாலை ஊட்டாத
பெற்றோரும் உண்மையிற் றமிழர் தானோ?
கற்பிக்க வேண்டிய தேவையில்லை யென்று
காரணம் பலகூறி முகஞ்சு ளிப்பர்.
ஆசையோடு பள்ளிப் பிள்ளை யிடங் கேள்வி
அன்புடன் தமிழினிற் கேட்டு நின்றால்
மீசைமு ளைக்காத பாலகன் நாவினில்
விளையாடும் ஆங்கிலம் புரிய லையே.

பல்கலைக் கழகத்துப் பாவையிடம் மெத்தப்
பரிவுடன் தமிழலே வினவப் பதில்
செல்லமாய் ஆங்கில மொழியாட்சி செய்திடச்
செந்தமிழ் இடையிடை ஒலித்தி டுமே.

## மேலும் கேட்பாய் அம்மா!

இப்படியும் இருக்கிறார்கள்:
வாராசா தமிழ் படிக்க ஓடிவா என்றால்
what is your problem? என்றோடு கின்றார்
நேராகச் செல்ராசா தமிழ்ப் பள்ளிக் கென்றால்
Leave me alone என்று நெட்டு கின்றார்
தீராத தொல்லை நீ திருந்தாயோ என்றால்
Get lost with your Tamil என்றேசு கின்றார்
பாராயோ தமிழ்மாதே பகட்டிற் பழுத்த
பண்பாடோ? மறுமலர்ச்சி தந்து நீ மகிழாய்.

புழுகில்லை நாகரிகம் போற்றும்மேல் நாடெல்லாம்
பூப்படையாய்ப் பூவையரும் பூத்துவரும்
காளையரும் அழுகின்றேன்! அருவருக்குஞ்
சொற்களைத்தம் மழலையென
அடுக்கடுக்காய் மந்திரம்போற் சுவைத்து நின்று
எழுவாயாய்ப் பயனிலையாய்
இடைச்சொல்லாய்த் தினமுமவர்
இதமாகப் பேசிமகிழ் மரபை எம் இளைஞர் குழாம்
தழுவாத நிலைவிட்டுத் தழுவத்தொடங்குகிறார்
தவறான நிலைவிட்டுத் தாராயோ மறுமலர்ச்சி.




புவிதனிலே புலம்பெயர்ந்தோர் பலரின் போக்கில்
புதியமறு மலர்ச்சிதனை ஏற்ப டுத்த
கவிதையிலே தருகின்றேன் கண்ட ணங்கள்
கண்டம் பல கண்டுவந்து கண்ட உண்மை
தவிக்கிறதே தமிழொடு தமிழன் பண்பு
தகைமைசேர் பாரம்ப ரியம் மெல்ல
அவிந்திடுதே அஞ்சுகிறேன் அருகி டுமோ?
ஆரணங்கே! தமிழ் மாதே மலர்ச்சி தாராய்.

## கவிஞர் மூர்த்தியரே!

இப்போதைக் கிதுபோதும் மூர்த்தி ஐயா!
இன்றுபோய் நாளை வா சொல்ல வில்லை
ஒப்புவிக்கும் சௌந்தரியின் கவிதை கேட்டு
ஊக்கமாய் வாதிட மனோ திடந்தான்
தப்பாது இறுதிச்சுற்று அதனில் வந்து
சந்திப்பேன்! தயக்கத்திற் கிடமே இல்லை
எப்போதும் பாரதி முழக்கம் இட்டும்
இன்றமிழ் வளர்த்திடுதல் நன்றே அன்றோ?

சௌந்தரி சொன்ன தற்குத்
தக்கதோர் பதிலை மனோவும்
ஆர்த்தெழந் திங்கு கூறி
அவைதனை மகிழ வைத்தாள்
பார்த்தீரோ தெரிய வில்லை
பரந்த சௌந் தரியின் நெற்றி
வேர்த்ததோ தெரிய வில்லை
வேண்டுமோ மேலும் கவிதை?



## மூர்த்திக்குப் பதிலளிக்க முனைகிறேன் கேட்பீர் அம்மா!

ஆர்க்கெடுத்து உரைப்பேன் ஐய!
ஆறொடு நோகேன் அம்ம!
மூர்த்தியும் மிடுக்கோடு இன்று
முக அசை வெல்லாம் காட்டி
வார்த்தையால் இனிக்கக் கவிதை
வடித்தே தமிழன் நிலையைப்
போர்த்தவர் மறைக்கக் கண்டேன்
பொங்குதே உண்மை இங்கு.


புலம்பெயர்ந்த ஈழத்த மிழர் கூட்டம்
புகுந்த பல் நாடெங்கும் சுற்றி வந்தேன்
கலங்குகிறேன் அந்நாட்டில் தமிழர் தமிழை
கச்சிதமாய்த் தம்பண்பைக் கலாச்சா ரத்தை
குலங்காத்த பாரம்ப ரியந் தன்னை
கூட்டாக அடகுவைத்து ஏப்பம் விட்டு
பலம் இதென்றே மேலைக் கலாச்சாரம் நாடிப்
பண்டமாற் றஞ்செய்யும் பலரைக் கண்டேன்.

## கலை உலகில் இப்படியும் நடக்கின்றதே அம்மா!

கைக்காசுக்காகக் கலைபயிற்றுஞ் சிலர் எங்கும்
காதலொடு தமிழை ஆங் கிலத்தில் எழுதி
தைதித்தோம் கூத்தாடிச் சாநீ பாடித்
தமிழ்க் கொலையைச் செய்கின்றார் கேட்பாரில்லை
பைநிறைந்தாற் போதுமென்ற பண்பை மாற்றி
பைந்தமிழிற் கலைபயிற்றும் முறை கொணர்வாய்
மெய்யாகக் கூறிடுவாய் தமிழ்கற்கா வீணர்க்கு
வேண்டுமா தமிழ்ப்பரதக் கலைகள் அம்மா!

## நெஞ்சங்கள் கனன்று வாடுதே அம்மா!

அமிழ்தான தூயசெந் தமிழ்கொண்டு பாடல்கள்
ஆக்கியோர் நெஞ்சங்கள் கனன்று வாட
இகழ்வாகக் கேலிக்கூத் தாடியே பயனற்ற
இலக்கிய ஆய்வுகள் செயம் பாணியில்
புகழ்தேடச் சிலர்நாடும் போக்கினைக் கண்டுநீ
பொங்குவாய்! சிரிப்பிதில் என்ன வென்றால்
தமிழான பத்தி எனுஞ்சொல் தனைக் கூடத்
தவறாகப் பக்தியென் றோம்பி என்றும்
மகிழ்வோடு பக்திக்கு வரைவிலக் கணங்கூறி
மற்றவர் பாடலில் பொய்க்குறை காட்டியே
நெகிழ்வோடு தாம்தரும் நியமத்துடன் தான்
நெறி பக்தி சுரந்திடப் பாடிட வேண்டும் என்றே
உகள்வோடு துள்ளு வோருக் குறைத்திட
ஊட்டிடு உள்ளத்தில் மறும லர்ச்சி!



## உண்மையை அறிந்திடுவாய்!


முப்பது வீசந்தான் முழுமுச்சாய் முத்தமிழை
மோகத்தோடு ஆவலாய் முடிந்தவரை கற்கின்றார்
ஆபத்து வந்ததையா ஆற்றுவெள்ளம் பெருக்கெடுத்து
அறைவாசல் அடைந்தபின்பு அணையிடுதல் மதியழகோ?
நீ பத்தைப் பத்தாக்க வரும்வீத உண்மை செப்ப
நிறைபித்தன் பேயனென நீ என்னை வைதாலும்
சாபத்தைப் போல்வந்த தாழ்வுநிலை மாறிடவே
தமிழ்மாதே மறுமலர்ச்சி தந்து நீ மகிழ்வாயே!

## இது மட்டுமா? மேலும் கேட்பாய் தமிழ்மாதே!

கோவிலிலே நாம் நிம்மதியாய்க் கும்பிடலாம் என்றுசென்றால்
குசலம் விசாரித்துக் குடும்பநலம் பேசி, அன்பர்
ஆவி பிரிந்தகதை அத்தனையும் அலசிவிட்டு
அடுத்தினி யாரோடு அளவளாவ அலைந்துநிற்கும்
பாவி மனிதரையும் பார்த்தழுவாய் தமிழ்மாதே!
பத்தியொடு தொழுவோர்க்குப் பங்கம் விழைப்போரை
தேவி நீ சென்றணுகிச் சீர்திருத்தம் செய்வாயோ?
தேன்தமிழே மறுமலர்ச்சி தந்து நீ மகிழ்வாயே!

## செந்தமிழத் தேவீ! மதகுருமாரின் செயல் அத்தனையிலும் தெய்வீகம் கமழவேண்டுமே!

முப்போதும் திருமேனி தீண்டும் அந்தணரும்
மொத்த வருமானமதை மட்டும்பா ராது
தப்பாது நெறியோம்பித் தருமங் காத்துத்
தலையாய குருமாராய் இயங்கத் தெய்வீகம்
எப்போதும் செயுங்கருமந் தனிலே துலங்க
ஏற்றமறு மலர்ச்சிதனைத் தந்து நீ மகிழாய்
அப்பாலுக் கப்பாலும் அடிச்சாந்தார் மதிக்கும்
அருள்மல்கும் குருமாராய் ஆக்கிமகிழ் வாயே!



## காலத்தின் தேவையிது தாயே!

மலைக்காதீர் கருவுற்ற நாள்முதல் இருந்து
மனையதனிற் தமிழோசை ஒலிக்கச் செய்வீர்
முலைப்பாலைக் காட்டாது தாய்மார் சிலரும்
முந்தானையால் மறைத்து ஏமாற்றி நின்று
விலைப்பாலைப் புட்டியிலே பருக்கினாலும்
விருப்போடு தமிழப்பாலைக் கலந்து ஊட்ட
கலைத்தாயின் அருள்பெற்றுக் குழந்தை தமிழைக்
கற்பதொடு கலாச்சாரம் மலரும் அன்றோ?

புலம்பெயர்ந்து புகுநாட்டில் தமிழை முறைகற்று
போற்றி எம் கலாச்சாரம் நிலைநிறுத்த வேண்டும்
தலங்கள்தொறும் ஒற்றுமை பேணி அறம் வளர்த்து
தலைசிறந்த பிரசைகளாய் வாழும்நிலை வேண்டும்
குலந்துலங்கத் தமிழரென்ற முத்திரை பதித்துக்
கோடிபெறும் தனித்துவம் காத்துயர வேண்டும்
மலங்கல் நிலை கண்டின்று மகிழாத தாயே
மறுமலர்ச்சி தந்தினிது மகிழ்வாய் தமிழ்மாதே!


## மூர்த்தி அவர்களே!
## உண்மை நிலை ஏற்பீரோ?

தமிழ்மொழியைக் கற்பதனால் ஏதுபயன் என்று
சரிபாதி கைவிட்டார் தெரிந்துகொள் வீரே!
இகழ்வில்லை மீதியிலே இருபது வீதம்
இங்கிலிஸ் தமிழ் என்ற மொழிவளர்க் கின்றார்
நெகிழ்கின்றேன் பேசிடவே முடிந்த இவர்கள்
நிச்சயமாய்த் தமிழெழுதி வாசிக்க மாட்டார்
மகிழ்கின்றேன் மீத முப்பது வீதத் தோரே
மனதாரத் தமிழ்கற்று வழிநடத்து கின்றார்

## எதிர்க்கட்சி அணியினரே
## கேட்டுத் தெளிவீர்!

தெள்ளத் தெளிவாகச் சௌந்தரிக் கும்
திருமலை மூர்த்திக்கும் புரிந்திருக் கும்
புள்ளி விபர மொடு சொல்லக் கேட்டீர்
போதுமோ? இன்றைக்குப் போதா தென்றால்
அள்ளி அள்ளித் தருவேனே நாழியில்லை
அடுத்தமுறை சந்திப்போம்; வளர்ச்சி கண்டு
மெள்ளத்தான் தமிழ்மாது மகிழுவாளோ?
வேண்டும் மறுமலர்ச்சி தந்து மகிழ்வாள்.

இந்தநூற் றாண்டிலே இந்தநிலை என்றால்
இன்றமிழுக் கினிமேலே எந்த நிலை கூறும்
சொந்தபந்த மெலாங்கூடிச் சபதம் ஏற்பீர்
தூயமொழி கலாச்சாரம் பண்பை எல்லாம்
சந்ததமும் பேணிடவே புலம் பெயர்ந்தோர்
சரித்திரம் படைத்திடவே சூழ் உரைக்க
வந்திடுவாள் தமிழ் மாது மறுமலர்ச்சி தந்து
வாகைசூடி மகிழ்வாளே வணக்கம் வாழி.



# புலம்பெயர்ந்த தமிழ்ச்சிறார் பொறுக்காதே கேட்கின்றார்

நாங்கள் படும்பாடு நாநிலத்தில் யார்படுவார்
ஏங்கித் தவிக்குமெங்கள் இன்னலை யாரறிவார்
பாங்காய்ப் புலம்பெயர்ந்து பலநாட்டில் வாழ்கின்ற
ஓங்குதமிழ்ச் சிறுவர் உங்களைநாம் கேட்கின்றோம்.

எங்கள் கதியுமக்கு எக்காலும் வந்ததுண்டோ
சங்கத் தமிழினமே சற்றொருகாற் சொல்வீரோ
எங்குநாம் வாழ்ந்தாலும் எம்தமிழை மறவாதே
பங்களிப்புச் செய்யென்று பாலர்நமை வேண்டுகிறீர்.

பெற்றவளை மறந்தோரும் பிதாவின்சொல் கேளோரும்
நற்றமிழர் அல்லவென்று நாமறிவோம் உண்மையது
பற்றுடனே தமிழ்கற்போம் பாரினிலே தமிழ்வாழ
உற்றவரே உமதாசை ஒய்ந்திடுமோ அத்துடனே?


வாழுகின்ற நாட்டின் வளமெமக்கு வேண்டுமென்று
வாழுகின்ற இடத்து வகைமொழிகள் கல்லுமென்று
சூழுரைத்து நிற்கின்றீர் சூடுங்கள் முடியென்பீர்
வாழும்வழி அதுவென்றால் வந்தேறு மொழிகற்போம்

இத்தோடு விடுவீரோ இளமையை அனுபவிக்க
புத்தகப் பூச்சியாய்ப் போகாதே உடலுறுதி
நித்தமும் வேண்டும் நீந்துகுதி பாயென்பீர்
அத்தனையும் செய்தாலும் ஆளை விடுவீரோ?

பக்கத்து வீட்டில் பலநடனம் கற்கின்றார்
அக்கத்து வீட்டில் அடிதடுக்கப் பழகுகிறார்
இக்கால இசைகளும் இதுகளும் வேண்டுந்தான்
அக்காளைப் போலே அடிபியானோ என்கின்றீர்.

மந்திரி எவாட்டுக்கு மறுவருடம் மனுப்பண்ண
இந்தநாட் தொட்டு இருக்கவேணும் பொதுசேவை
அந்தவழி போகவொரு அனாதைச் சேவைசெய்ய
முந்திநில் என்றுசொல்லி முடுக்குவீர் இரக்கமின்றி.

நா. மகேசன்



கற்றதனாலாய பயன்காணக் கடவுளை நம்புதற்கு
உற்றநம் சமயத்தை உவந்துநீர் கல்லென்பீர்
பெற்றவரே பெரியோரே பேருக்குத்தான் சமயம்
பற்றைவிடக் காணவில்லை பரமனைநாம் காண்பதெப்போ?

இயந்திரமோ நாங்கள் இளிச்சவாய்ப் பிண்டங்களோ?
பயந்து பயந்துங்கள் பழுச்சுமப்ப தெம்விதியோ?
வியந்து பலரும்மை வீம்புகள் பேசுதற்கோ
நயந்து நீரெம்மை நாயாய் ஓட்டுவது?

மனிதன் மனிதனாய் மாண்புடனே வாழ்வதற்கு
இனியவராம் எங்களைநீர் எள்ளாய் நெரிக்காமல்
இனியாகிலும் ஒருவழியை இன்றே வகுத்திடுவீர்
முனியாதே நாமென்றும் முகமலர்ந்து வளர்வதற்கு

வந்தஇடத்துக் கல்வியொடு வாழும்தமிழ் மொழியும்
சொந்தஉடல் பேணுதற்குச் சொல்லும் ஒருபயிற்சி
நொந்தபோ தோய்வாக நுகருதற்கு ஓரிசையும்
சிந்தைதனைத் தெளிவாக்க சீர்சமயம் ஒன்றுசொல்லும்.

இத்தனையும் போதுமையோ எம்மையினி விட்டிடுங்கள்
உத்தமராய் வளர்வோம் உமக்கிடஞ்சல் தரஎண்ணோம்
பித்தராய் அலைந்தெமக்குப் பெருவாழ்வு தருவதற்கு
நித்தமும் வீதியிலே நீர் காரில் வாழ்வதேனோ?

புலம்பெயர்ந்த தமிழ்ச்சிறார் பொறுக்காதே கேட்கின்றோம்
நிலந்தன்னில் வாழ்வதொரு நீர்மேற் குமிழியென்பார்
குலத்தைநீர் உயர்த்திடவே கோடிநன்மை செய்வதென்று
பலத்திற் குறைந்தஎமைப் பஞ்சாய் அடிக்காதீர்.



# விடியும் வரை கனவுகள்

புன்னை மரச் சோலையிலே
புத்தம் புதுப் பாட்டெழுதி
அத்தை மகள் பூச்சுமந்து
ஆசை மேவக் காத்திருந்தேன்.

காத்திருந்த காலம் எல்லாம்
கானல் ஆகக் கண்டுமென்ன
கோத்தபூ வாடிக் கொட்ட
கொவ்வை இதழ் கூம்பியதடி!

பாக்குக் கொட்டும் சாலையிலே
பாலும் பழமும் சேர்த்துவைத்து
நாற்று நடும் வேளைதொட்டு
நாளும் வர ஏங்கிநின்றேன்.

ஏக்கம் தந்த வேளையிலே
எங்கும் தேடிச் சலித்துவிட
ஒட்டா உளம் உடைந்துமென்ன
ஒடிந்து இடை மெலிந்தேனடி!

சாமந்திச் செடித் தோட்டத்திலே
சங்கில் கோர்த்த மாலையோடு
பார்த்துப் பகல் போனதுமே
பரிதவித்துப் பாவி பேதலித்தேன்.

பேதலித்து மனதும் வெதும்பி
பேந்த நான் விழித்துமென்ன
கொண்டவன் சொன்ன சேதியதையே
கொண்டு யாரும் வரவில்லையடி!

மல்லிகைக் கொடிப் பந்தலிலே
மஞ்சள் பூச்சுக் காய்ந்திருக்க
வாஞ்சை உள்ள மாமனுக்காய்
வண்ணத் தேராய் நின்றிருந்தேன்.

நின்றிருந்த நிலமும் நோக
நித்திலமும் வானில் போக
சாய்ந்த பொழுதில் சலித்துமென்ன
சாக்கும் சொல்ல வரவில்லையடி!

தேக்கு ஆடும் தோப்பினிலே
தெம்மாங்குப் பண் அமைத்து
பார்த்து வரும் பாதையிலே
பாதபூஜை பலமுறை செய்தேன்.

செய்து வந்த பூஜைமொத்தம்
சேர்த்தும் பலன் கெட்டுமென்ன
சோகம் தந்த சுகத்தினிலும்
சொக்கி உடல் நொய்ந்ததடி!

தென்னங் கீற்று நிழலினிலே
தென்னவரின் தாளம் போட்டு
சேதி சொல்லும் நாளதற்காய்
செவ்வந்தி நானும் பூத்திருந்தேன்.

பூத்து இருந்து பார்த்துமென்ன
புண்ணாகி நோகக் கண்டு
கொடுத்து வைக்கா விதியதனால்
கொட்டு மேளம் மறந்தேனடி!

முத்துச் சம்பா வரப்பினிலே
மோகம் கொண்டு முத்திடவே
போர்த்து வந்த சேலையுமே
போட்டியாக நான் நலிந்தேன்.

நலிந்து வந்த போதுமென்ன
நாடாது விலகிச் சென்றதுவோ
சொக்குப் பொடிச் சுந்தரிக்காயோ
சொல்லாமல் ஓடி ஒளிந்தானடி!

பனம் பழப் பாத்தியிலே
பார்த்த பயன் தோற்றதனால்
சொத்து சுகம் தேடியோ
சொந்தம் விட்டுப் போனாயென்றேன்.

போனதோ பொன்னுக்கு அல்ல
பொன் விளைபூமி விடிவிற்கென
காற்றில் வந்த கதையாயினுமென்ன
கணநேரம் கேட்டதும் திகைத்தேனடி!

காதலுக்குக் கடிவாளம் போட்டு
கங்கணத்தோடு போன மாமனை
தூற்ற நினைத்த பாவத்திற்காய்த்
துவண்டு நானும் தேம்பிவிட்டேன்.

தேம்பல் தந்த சுகத்திலே
தேர்ந்த முடிவின் தீர்க்கமுமென்ன
மாலைசூடு கையின்நோக்கம் மறந்து
மண்விடிவிற்காய்க் கை கொடுப்பேனடி!

மாமன் ஒருவனுக்காய் மட்டுமல்ல
மண்மீட்கும் தமிழர் அனைவருக்காய்
நாடிச் சென்றுநற் தோளாகமாறி
நானும் அங்கோர் விடிவெள்ளியாவேன்.

வெள்ளி வந்து போனாலுமென்ன
வெற்றிவாகை சூடும் நாளதற்காய்
விடியும் வரை கனவுகளோடு
விடியலுக்காய் விழிசோராது
காத்திருப்பேனடி!

த. இராசலிங்கம்



# கவிதைகள்

# துரோணரும் ஏகலைவனும்

துரோணரையே வேண்டிநின்றார் குருவாக
வேடனென்று அவமதித்தார் இழிவாக
துரோணரையே ஏற்றுக்கொண்டார் மனதார
குருவாகக் கண்டுகொண்டார் சிலையாக.

மரத்தடியில் இருத்திக்கொண்டார் குருவாக
தன்கலையைப் பயின்றுவந்தான் தயவாக
நாயொன்றைக் கண்டுகொண்டான் நிலையாக
தன்குருவை அவமதிப்பதைத் தெளிவாக

அம்பெடுத்தான் வில்லிலிட்டான் துணிவாக
எய்துவைத்தான் நாயின்மீது எளிதாக
சென்றஅம்பு பிரிந்துகொண்டது பிளவாக
நாயின்மீது மொய்த்துக்கொண்டது சரியாக.

சென்றநாயைத் தடவிக்கொண்டார் அன்பாக
மொய்த்தஅம்பைக் கண்டுகொண்டார் திகைப்பாக
அர்ச்சுனனும் கேட்டு வைத்தான் வியப்பாக
தன்கலையைக் கற்றவனின் பயமாக.


குருத்துரோணர் கூறிவைத்தார் மறுப்பாக
ஏகினார்கள் ஏகலைவன் முன்னாக
ஏகலைவன் வணங்கிநின்றான் பணிவாக
குருத்துரோணர் உறுதிசெய்தார் திடமாக

குருதட்சணை வேண்டிநின்றார் நயமாக
ஏகலைவன் கேட்டுக்கொண்டர் எதுவாக
பெருவிரலைக் கொடுஎன்றார் சதியாக
அறுத்தெடுத்தான் பெருவிரலைத் துடிப்பாக

குருத்துரோணர் நினைத்தாரோ பரிசாக
ஏகலைவன் கலைமுடிந்தது சரியாக
பாரதப்போர் நடந்துவந்தது நெருப்பாக
கண்மூடித் தலைகொடுத்தார் சிரிப்பாக

ஏகலைவன் விரலெடுத்தார் சதியாக
தன்தலையைப் பறிகொடுத்தார் பயனாக
தர்மவாழ்க்கை வாழ்ந்திடுவோம் நியமாக
வாழ்க்கையிலே உயர்ந்திடுவோம் நலமாக

●



என்னெயோ எரிவது
தன்னையே உருக்கி
துணைசெய்வதுவோ
திரியே கருகி
இவற்றின் அழிவில்
பிறந்த ஒளியை
விளக்கின் ஒளியென
விளம்புவ தேனோ?
(பொறுமையாகத் தாங்குவதால்
பெருமையும் சேர்கிறது.)

●


என் ஆலோசகர்
தனிமரமாய் இருந்தபோது
தவித்ததுண்டு நானும்
வழிதெரியா இடர்படரில்
சென்றதுண்டு நானும்
முடிவெடுக்க முடியாமல்
துவண்டதுண்டு நானும்
அரசசபை நிலவரத்தை
அறியும்வரை நானும்
கொடியிடையாள் கழுத்தினிலே
கட்டும்வரை நானும்
தவித்திருந்தேன் முடிவெடுக்க
அறிவுரைகள் தேடி
கழுத்தினிலே கட்டியபின்
இடங்கொடுத்தேன் நானும்
மனைவியவள் வழங்குகின்றாள்
அறிவுரைகள் தானும்
எப்போதும் எனக்குஇனி
மந்திரிதான் அவளே.

●

## என் உடலைத் தீண்டாதீர்

நான்காகப் பறவையல்ல
கறுப்பாய் இருப்பதற்கு
நனைந்த பனையுமல்ல
கறுப்பென்று நினைப்பதற்கு

பன்றிபோல் உண்டதில்லை
நான் குண்டாயிருப்பதற்கு
பட்டினியும் கிடந்ததில்லை
பயற்றங்காய் ஆவதற்கு



ஏழைகூட விரும்புவரே
என்நிறமாய் வருவதற்கு
என்னையே நுகர்வதற்குக்
காளையரும் விரும்பிடுவர்

நாளடைவில் தேய்கின்றேன்
உற்றதுணை யாருமின்றி
கோயிலிலே காளையர்கள்
கூடுவது உரஞ்சிடவே

நான்காய்ந்து இருந்துவிட்டால்
நீர்விட்டுச் சாதிப்பர்
நான்படும் வேதனைகள்
அறியமாட்டா மாந்தரவர்

தேய்ப்பதுதான் முடிந்தபோது
வைத்திடுவர் நெற்றியிலும்
என்கதையைக் கூறிவிட்டால்
நீங்கள்கூட வந்திடுவீர்

நானுமொரு வாசமுள்ள
சந்தனமரக் கட்டைதானே.

●

# காணவில்லை

முகிலில்லா மதி கண்டேன்
நீரில்லா நதி கண்டேன்
பாலில்லா முலை கண்டேன்
உணவில்லா இலை கண்டேன்
அறவறண்ட மடி கண்டேன்
மரம்புரண்ட இடி கண்டேன்

கடல்வற்றிய தரை கண்டேன்
வனம்பற்றிய புரை கண்டேன்
முடிவில்லா சிலை கண்டேன்
உடலில்லா தலை கண்டேன்
ஆனால்
மனம்சோர அலைகின்றேன்
என்இதயம்
குடிகொண்ட இடம்தேடி.

●

# தமிழர் கலாச்சாரம் தலைமுழுகிறது

இனியமகளின் மழலைகளை இனிமையாக ரசித்ததுண்டு
மூத்தமகளாய்ப் பிறந்ததனால் முத்தம்பல கொடுத்ததுண்டு
சீமைவாழ்க்கை வாழ்ந்ததனால் சீராக வைத்ததுண்டு
வேலைசெய்து சென்றுவர காரும்வாங்கி அளித்ததுண்டு
கால்கட்டு போடக்கேட்டு மறுப்புரைகள் ஏற்றதுண்டு
அடிமையல்ல கணவனுக்கு மகளும்கூற வியந்ததுண்டு
சிறியபெண் இவளேஎன்று பொறுமையாக இருந்ததுண்டு

ஒழுக்கமாக நடக்கிறாளே என்றுநான் நினைத்ததுண்டு
வெள்ளையுடன் சுற்றுகிறாள் எனக்குஊரார் உரைத்ததுண்டு
பதைபதைத்து நானுமிதை மனைவியிடம் போட்டதுண்டு
அவசரப்பட வேண்டாமென மனைவிபுத்தி சொன்னதுண்டு
பதிவுமணம் முடித்துவிட்டு மகளும்வந்து பார்த்ததுண்டு
இரண்டுதிங்கள் பொறுமகளே என்றுநானும் இரந்ததுண்டு
சிறப்புமணம் செய்துவைக்க நல்லநாளும் குறித்ததுண்டு

என்மகளும் பொறுத்திருந்தாள் இரண்டுதிங்கள் கழிந்ததுண்டு
திருமணமே வேண்டாமென என்மகளும் அழுததுண்டு
மனமாற்றக் காரணங்கள் ஏனென்று கேட்டதுண்டு
பிடிக்கவில்லை வெள்ளையனை என்மகளும் பகர்ந்ததுண்டு
விவாகரத்து வேண்டுமென ஒருகாலில் நின்றதுண்டு
கோட்டுவழி செல்வதற்கு நானும்வழி கண்டதுண்டு
முழுகவில்லை என்மகளும் இரண்டுமாதம் என்கிறாளே?
●

(குறிப்புஇது கற்பனைக் கதையல்ல,
நண்பன் ஒருவனின் விசனமான விசும்பல்.)

# கண்ணை மறைத்ததோ?

தர்மத்தைக் காக்கவந்தார் பாண்டவரில் தர்மராஜா
தர்மரையே நம்பினார்கள் தர்மனவன் தம்பிமார்கள்
சூடுபட்ட ஔவையார்தான் முருகனிடம் உண்டவரே
சூதும்வாதும் வேதனையெனக் கூறியவர் ஔவையார்தான்.

அரசசபை ஆசனத்தில் அமரவைத்துத் தனக்கடுத்து
புகழ்ச்சிமரம் ஏற்றிவைத்தார் கண்தெரியா ராட்டினத்தான்
தானாகத் தாவிக்கொண்டால் யார்பிடிப்பார் காலிழுத்து
தானாகத் தாவிக்கொண்டார் பெரியப்பா தர்மராஜா.

பப்பாமரம் ஏறியதால் பகடைக்காயும் தெரியவில்லை
பணயம்வைத்த பொருட்களையும் பறிகொடுத்தார் அடுத்தடுத்து
துரியோதனன் அருகினிலே வீற்றிருந்த வீரவள்ளல்
துணையிருந்தான் நண்பனுக்குச் சுயவிருப்பம் அற்றிருந்தும்

தன்னையுமே இழந்தபின்பே பணயம்வைத்தார் மனைவியையும்
சகுனியவன் சதிவலையில் பகடையானாள் துரௌபதியும்
ராட்டினத்தான் ஆட்டிவைத்த சதுரங்க விளையாட்டில்
கட்டுண்டுக் கிடந்தனரே பீஷ்மகுரு சகோதரர்கள்

துச்சாதனன் இழுத்துவரப் புரண்டுவந்தாள் பாஞ்சாலி
பணயம்வைத்த கணவனவன் பிணையும்நிற்க முடியவில்லை
தர்மத்தைக் காப்பதற்குப் பிறவிகொண்ட தர்மராஜா
சூதுவிளை யாட்டினிலே பறிகொடுத்தார் கண்களையே.

●

# கட்டளையிட வேண்டாம்

பொதுத் தொண்டு சேவைக்கென்னைக் கேட்டதுண்டு
உடல் முறித்து கறிசமைத்துக் கொடுத்ததுண்டு
உன்வீட்டில் விருந்து வைக்க விரும்புகிறாய்
பிறர் தயவில் பந்திபோட ஏங்குகிறாய்
உடல் முறித்துச் சமைத்தகதை கூறுகிறாய்
கறி சமைத்துத் தருவதற்கு வேண்டுகிறாய்
தனிமனிதன் விரும்பி வைக்கும் கொண்டாட்டம்
பிறர் மனதை நோகவைக்கும் திண்டாட்டம்

பொதுச்சேவை புரிந்துணரா மனிதர்களே
எதற்கும் ஒரு முறையுண்டு தோழர்களே
கட்டளையும் கேட்பதுவும் ஒருபோதும் ஒன்றல்ல
நயமாகக் கேட்பதுவும் சிறிதேனும் தப்பல்ல
பொறுப்பெல்லாம் கழிக்காதே ஒருபோதும் மனம்களிக்க
உன்முடிவைத் திணிக்காதே பிறர்மீது முகம்சுளிக்க
ஒருசொல்லும் சொல்வதற்கு இருக்கிறது பயமாக
கட்டளையிட வேண்டாமென வேண்டுகிறேன் தயவாக.

●

# இறைவனும் மனிதனும்

மனிதனைப் படைத்தான் அணைக்கவும் காக்கவும்
திக்தியைப் புதைத்தான் உதிக்கவும் மறையவும்
வசதியை அளித்தான் உழைக்கவும் கொடுக்கவும்
திறமையைக் கொடுத்தான் படைக்கவும் உயரவும்.

குடும்பத்தை நினைத்தான் வாழவும் சேர்க்கவும்
வசதியை எடுத்தான் சேர்க்கவும் பதுக்கவும்
செல்வத்தைச் சேர்த்தான் உயரவும் பாயவும்
இறைவனை மறந்தான் பணியவும் வணங்கவும்.

வசதியைக் குறைத்தான் உணர்த்தவும் உயர்த்தவும்
முடிவை அறிந்தான் அணைக்கவும் காக்கவும்
இறைவனை நினைத்தான் பணியவும் வணங்கவும்
வசதியை அளித்தான் உழைக்கவும் கொடுக்கவும்.

●

# என்னையே ஏமாற்றுகிறேன்

இனிமை வாழ்க்கை நாயகனே
வள்ளுவன் வழிபோல் வாழவந்தாய்
ஊரார் குறைகளைக் காணாதே
உன்முதுகு ஊத்தையை எடுத்துவிடு
எம்மை நாமே திருத்திக்கொண்டால்
இதைவிட உயர்பணி வேறில்லை.

உழைத்திட வேண்டும் எப்பொழுதும்
பணம்பதுக்கிட வேண்டாம் ஒருபோதும்
ஊத்திக்கொடு என்று கூறவில்லை
ஊதாரி ஆவென்றும் கேட்கவில்லை
உனக்குள்ள அறிவைப் பயன்படுத்தி
வசதியைப் பொறுத்துப் பகிர்ந்துகொடு.

உனக்கேற்ற தேவையை வைத்துக்கொண்டு
மீதியைக் கொடுக்கவும் தயங்குகிறாய்
இறைவனை அடையவும் எண்ணுகிறாய்
பணத்தையும் அணைக்கவும் விரும்புகிறாய்
மரணப் படுக்கையில் படுத்துவிட்டால்
பணப்பெட்டி வந்து காத்திடுமோ.

எமக்கென்று அளித்த வசதியெல்லாம்
இறைவனே கேட்டு விடுவதில்லை
அவனே எங்களை அனுப்பியுள்ளான்
கீழ்மட்ட மக்களைக் காப்பதற்கே
இறைவனே நேரில் வந்தாலும்
இரந்து எதனையும் கேட்காதே.

பிள்ளைகள் மட்டும் இருந்துவிட்டால்
பிறரைப் பார்க்கக் கூடாதோ
உன்தந்தை செய்த தவத்தாலே
வாழ்க்கையில் மேலே உள்ளீரே
பிள்ளையின் வாழ்க்கையை உயர்த்திடவும்
பிறரைக் காக்க வாரீரோ.



உன்னிடம் உள்ள ராட்சியத்தில்
உத்தமன் ஒருவன் தானுண்டு
உதவி செய்யா விட்டிடினும்
உபத்திரம் ஆவது கொடுக்காதே
உபத்திரம் நீயே கொடுத்துவந்தால்
தரித்திரம் தானே தரித்துநிற்கும்.

உன்னிலும் தாழ்ந்த மக்களெல்லாம்
ஊரில் உள்ளனர் அறியாயோ
இழப்பின்றிப் பெறுவதில் ஞாயமில்லை
உலகத்தின் நியதியும் அதுதானே
ஊரிற்குச் சேவை செய்துவந்தால்
இறைவனின் இடத்தை அடைவாயே.

கறையான் அரிக்கா காசுஇது
மறைவாய் வரிந்து கட்டாதே
காகிதத்தில் இது செய்திருந்தால்
கறையான் கூடப் பசிதீர்க்கும்
ஞானக் கண்களைத் திறந்துவிட்டால்
இறைவனே உன்னிடம் வருவானே.

●

# பொல்லாத பசி

மயூரநாட்டு மன்னனுக்கு ஒருநாள் விபரீத ஆசை ஏற்பட்டு விட்டது.

இந்த உலகம் முழுவதையுமே நானே ஆட்சி செய்தாலென்ன?

அந்த அரசன் தனது பிரதமமந்திரியை அழைத்து, அயல்நாட்டு அரசனுக்குத் தூது அனுப்பினான். மமதை ஏறிய மந்திரி தூது சென்றான்.

"உமது நாட்டின் ஆட்சியைத் தம்மிடம் தந்துவிட்டு உம்மை ஒதுங்கிக் கொள்ளும்படி ஆக்ஞாபிக்கவே என்னை இங்கு அனுப்பி உள்ளார் எமது அரசர்" என்று மந்திரி சொல்ல —

அங்கு சீற்றத்துடனொரு சிரிப்பொலி பிறந்தது.

மீண்ட மந்திரி செய்தி விளம்பவே இங்கும் சிரிப்பொலி வானைப் பிளந்தது.

அடுத்து நிகழ்ந்தது — போர்! நாடுகளுக்கிடையிலான போர்!


போரிலே வெற்றிகண்ட மயூரத்து அரசன், உலகின் ஏகபோக ஆட்சியைத் தன்வசப்படுத்தினான். "ஏ, உலகத்து மனிதர் களே! இப்பொழுது நான் ஒருவனே உங்கள் எல்லோருக்கும் அரசன் மாமன்னன்" என்று கர்ஜித்தான்.

சசிபாரதி சு. சபாரத்தினம்

உலகத்துப் பொன் பொருள் முழுவதையும் கொண்டுவந்து தன்முன் குவிக்கும்படி பணித்தான். மக்கள் அவன் கட்டளையை நிறைவேற்றினர்.

மலர்கள் அவன் காலடியில் கசங்கின. "இதெல்லாம் தெய்வத்திற்கு அடுக்குமா?" என்றது ஒரு குயில்.

"தெய்வமே என் ஏவல் ஏற்கும்" என்றான் அரசன் இறுமாப் புடன். இப்படி அவன் இன்பத்தில் எக்களித்து, மமதை



யில் மயங்கியிருந்த ஒருநாள் —

திடீரென்று இந்த உலகம் இப்படி ஏன் ஆகிவிட்டது? வெறும் அம்மணக் கோலமாக அத்தனை கோடி மனிதப் புழுக்களும் எங்கே? மலைகளும் அருவிகளும் எங்கே? சமுத்திரங்களும் அவற்றின் பேரலைகளும் எங்கே?

கண்களைக் கசக்கவிட்டபடி அவன் உலகை விழித்து விழித்துப் பார்க்கின்றான். அவன் கண்களையே அவனால் நம்ப முடியவில்லை.

பூமியெங்கும் ஒரே மணற்காடு!

அவன் அடிமனத்திலிருந்து ஒரு கேள்வி மெல்ல எழுந்து, மூச்சுடன் கலந்து அனற்காற்றிலே மறைந்தது.

'இப்பொழுது நான் யாருக்கு அரசன்?'

பைத்தியம் பிடித்தவனாக உலகைச் சுற்றிச்சுற்றி ஓடிக்கொண்டிருந்த அவன், தன் இருகரங்களாலும் வயிற்றைப் பொத்திப் பிடித்த வாறே கொதிக்கும் மணலிலே உட்கார்ந்து கொண்டு, ஒரு பயங் கரமான ஓல மெழுப்பினான்.

"ஐயோ, பசி! பசி! பசி!"

வெந்து துடிக்கும் புழுப்போல நிலத்திலே புரண்ட அவன், உடலின் சக்தி ஓய்ந்துவர, கைகளில் மட்டும் ஜீவமரணப் போராட்டத்தின் போது உண்டாகும் பூதாகரமான சக்தி உண்டாகின்றது. கைகளால் நிலத்தைப் 'பிறாண்டு'கிறான். கைக்குள் அகப்படுவதெல்லாம் வற்றி உலர்ந்து போன மணலும் கல்லுக்குறுணிகளும்தான்.


கைகளின் அசுரப்பிடியில் சிக்கியி ருக்கும் அந்த ஒரு பிடி மண்ணை விழி பிதுங்க நிராசையோடு பார்க் கிறான். உள்ளே — தொண்டைக்குக் கீழே — ஜீவனை ஒடுங்கச் செய்யும் ஏதோ ஒரு சக்தி, தனது பிரம் மாண் டமான வாயைப் பிளக்கிறது. அவனால் தாங்க முடியவில்லை. கைக்குள் அகப்பட்டுப் பிதுங்கும் அந்த ஒரு பிடிமண்ணை வாய்க் குள் திணிக்கிறான். ஆனால் அடி நாக்கு அதனை வெளியே தள்ளு கிறது. வேறுவழி அறியாது வானத்தை அண்ணாந்து பார்க்கின்றான்.

தீனமான குரலில் சொற்கள் உதிர் கின்றன:"ஆண்டவனே, ஒருகவளம் சோறு..."

●

# பாழாய்ப்போன...

தமிழச்சி



உன்னிடமிருந்து வருகின்ற
எனக்கான
அழைப்பில்லை தான் அது

இருந்தாலும் எப்போதும்
சொல்கிறது தொலைபேசி
சிலமுறை சத்தமிட்டும்
பல முறை மௌனமாயும்
உன் இருப்பை

இரு முனையிலும்
இருவரும் இல்லை
என்பதை அறிவுணரும்

மணிச்சத்தம் மயிர்க்காலிலும்
மௌனத்தை உயிர்ப்பூவிலும்
முகர்ந்திருக்கும் மனது
□

# தமிழ்ப் பண்பாடு என பண்பாடு

தமிழ்ப் பண்பாடு என்றால் என்ன? அது எதைக் குறிக்கின்றது என்பதில் எமக்கு நிறையவே குழப்பங்கள் உள்ளன. பண்பாடு என்பது நாம் உடுக்கும் முறையைக் குறிக்கிறதா? அல்லது உணவையும் அதை உண்ணும் முறையையும் குறிக்கிறதா? அல்லது எமது கலைகளைக் குறிக்கிறதா? அல்லது எமது நடத்தையைக் குறிக்கிறதா? அதுவும் யாழ்ப்பாணத்தில் பெரும்பகுதியை வாழ்ந்து பின்னர் புலம் பெயர்ந்தவர்களுக்கும், புலம்பெயர்ந்த நாட்டில் பிறந்து வாழும் பிள்ளைகளுக்கும் இடையில் பல முரண்பாடுகள் எழுவது இந்தப் பண்பாடு என்ற விஷயத்திலேயே. ஆயினும் பண்பாடு என்றால் என்ன என்று கேட்டால் எமக்குச் சொல்லத் தெரிவதில்லை. எனவே, இக்கட்டுரையில் பண்பாடு என்றால் என்ன என்று பொதுவாகப் பார்ப்போம். அது பின்னர் நாம் எமது பண்பாடு பற்றிப் பூரணமாக விளங்கிக் கொள்வதற்கு எமக்கு உதவிசெய்யும்.

பல மனிதகுணங்கள் genesக்கு ஊடாகக் கடத்தப்படுகின்றன. குழந்தை பால் அருந்துகின்றது என்றால் அது மனித genetic code என்பதினுள் உள்ள உடலியல் இயல்புகளால் தீர்மானிக்கப்படுகிறது. ஆனால் வயது வந்த ஒருவருக்கு, காலையில் cereal உம் பாலும் சாப்பிட விருப்பம் அல்லது இடியப்பமும் சொதியும் சாப்பிட விருப்பம் ஏற்படின் அதனை genes உடன் தொடர்பு படுத்த முடியாது. அது பண்பாட்டு ரீதியாகக் காலைப் பசியைத் தீர்க்க அறியப்பட்ட ஒன்று. பண்பாடு என்பது ஒரு சமூகத்தின் அல்லது இனத்தின் பொதுவாக அறியப்பட்ட நடத்தை அல்லது பழக்க வழக்கங்கள் என்று கூறலாம். மனிதர்கள் பண்பாடு என்பதை நாம் சார்ந்துள்ள தொகுதியினரிடமிருந்து அறிந்துகொள்கிறார்கள். இதுவே பண்பாட்டின் அடிப்படை அம்சம் என்று கூறப்படுகிறது. ஒவ்வொரு மனித சமூகமும் தனக்கெனச் சொந்த வடிவத்தில், நோக்கத்தில், கருத்தில் பண்பாட்டைக் கொண்டுள்ளது. அது ஒரு template போல உருவிலும் உள்ளடக்கத்திலும் குறிப்பிடக் கூடிய ஒன்று. நடத்தையும் உணர்வுபூர்வமான விஷயங்களும் பரம்பரை பரம்பரையாக ஒரு சமூகத்தில் வடிவமைக்கப்படுகிறது. எனவே பண்பாடு என்

சந்திரலேகா வாமதேவா

பது அறிந்து கொள்ளப் படுகிற பழக்கவழக்கங்களிலும் பிறந்த காலம் முதல் வடிவமைக்கப் படுகிற உணர்வுபூர்வமான விஷயங்களிலும் தங்கியுள்ளது. ஒருவரை உருவாக்கும் பண்பாட்டு விஷயங்களில் பின்வரும் விஷயங்கள் முக்கியமானவை. கருத்து உருவாக்கும் முறைகள். இதில் மொழி முக்கியம் பெறுகிறது. அடுத்தது உறவுக் குழுக்களில் இருந்து சமூகத்தை உருவாக்கும் முறைகள், அவர்கள் பயன்படுத்தும் தொழில் நுட்ப முறைகள்.

ஒரு பண்பாட்டில் கற்றுக் கொள்ளுதல் என்பது முக்கியத்துவம் பெறுவதால் இவற்றைக் கற்பித்தலும் முக்கியமான அம்சமாகிறது. பண்பாடு என்பது அதைச் சார்ந்தோரால் புதிய அங்கத்தவர்கள் உருவாக உருவாக அவர்களுக்குக் கற்பிக்கப் படுகிறது. அதுபின் அவர்களால் பின்பற்றப்படுகிறது. எவை கற்பிக்கப்பட்டவை, எவை அறியப்பட்டவை என்பது நிரந்தரமானதல்ல. ஏனெனில் புதிய புதிய அம்சங்கள் கண்டுபிடிக்கப்படுகின்றன. எனவே பண்பாடு என்பது மேற்றளத் தில் அடிக்கடி மாற்றமடையும் ஒன்றாகும்.

ஒரு பண்பாட்டை உருவாக்குவதென்பது அதைச் சார்ந்தவர்களுக்கான பொதுவான அர்த்தங்களையும் நெறிகளையும் கண்டு கொள்வதாகும். புதியதைக் கண்டுபிடித்தல், தொடர்பு, அனுபவ அழுத்தங்களால் ஏற்படும் வாதப் பிரதிவாதங்கள், மாற்றங்கள் ஆகியவற்றிலேயே அதன் வளர்ச்சி அமைந்துள்ளது. ஒரு பண்பாடு இரண்டு அம்சங்களைக் கொண்டிருக்கும். ஒன்று அதில் பயிற்றப்பட்டிருக்கும் அங்கத்தவர்கள் அறிந்து கொண்டுள்ள கருத்துக்களும் நெறிகளும். மற்றது தரப்பட்டு பரீட்சிக்கப்பட்ட புதிய கவனிப்புகள் அவற்றின் கருத்துக்கள். எனவே பண்பாடு என்பது மரபுரீதியாக வருவதுடன் புதியதை ஆக்குவதுமாகும். நாம் பண்பாடு என்பதை இரண்டு கருத்தில் பயன்படுத்துகிறோம். ஒன்று, முழுவாழ்க்கை முறையையும் குறிப்பது. அதாவது பொதுவான கருத்துக்கள். மற்றது, கலைகளையும் அறிதலையும் அதாவது, கண்டுபிடித்தலையும் ஆக்கபூர்வமான முயற்சியையும் குறிப்பது.

இன்றைய ஆய்வின்படி பண்பாடு என்பது பத்துவிஷயங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது என்று சொல்லப்படுகிறது. அவையாவன மொழி, வாய்மொழி மூலமல்லாத முறையில் கருத்துத் தெரிவித்தல் (Non - verbal communication), இட எல்லை நேரம் பற்றிய கருத்து (Space and time), சமயம், நம்பிக்கைகள் (Religion-belief system), சிந்திக்கும்முறை (pattern of thinking), சுயகருத்துரு (Self-image), பெறுமதிகள் (Set of values), விதிமுறைகள் (Set of rules) பொருள் பற்றிய கருத்துக்கள் (material culture), அழகியல் நுண்கலைகள் (Aesthetics).

சுருக்கமாகச் சொல்வதானால் பண்பாடு என்பது ஓர் இனத்தில் அல்லது ஒரு குறிப்பிட்ட சமூகத்தில் பிறந்தவர்களின் வாழ்க்கை முறை. ஒரு பண்பாடு, ஒருதடவை உருவாக்கப்பட்டு விட்டால் அதற்கென ஒரு உயிர்த்துடிப்பு ஏற்பட்டு விடுகிறது. பின்னர் அது அந்த சமூகத்தில் அல்லது இனத்தில் பிறப்பவர்கள் அனைவரையும் தனது செல்வாக்குக்கு உட்படுத்துகிறது. அது காலப்போக்கில் மாற்றங்களுக்கு உட்பட்டாலும் அடிப்படையில் தனக்கென உள்ள தனித்துவத்தைப் பேணி வருகிறது. ஒவ்வொரு சந்ததியின

ரும் தாம் பேணி வந்த பண்பாட்டின் கூறுகளை அடுத்த சந்ததிக்குக் கையளிக்க, பண்பாடு தொடர்ச்சியாக வாழ்கிறது.

பண்பாடு என்பது அதற்குள் வாழும் அனைவரது மனங்களையும் பண்படுத்தி அவர்களைச் சகிப்புத் தன்மை உள்ளவராக்குகிறது. ஒவ்வொருவரது மனப்போக்கு, பெறுமதிகள், இலட்சியங்கள், நம்பிக்கைகள் ஆகியன அவர்கள் சார்ந்த பண்பாட்டினால் பெரிதும் செல்வாக்குக்குட்படுகின்றன. அதேபோல ஒருவர் வேறு பண்பாட்டிற்கு உட்பட்ட ஒரு நாட்டில் நீண்ட காலம் வாழ நேர்ந்தால் அப்பண்பாடு அவரைப் பாதிக்கிறது. பெரும்பாலும் அடித்தளத்தில் அவரது சொந்தப் பண்பாட்டினால் உருவாக்கப்பட்ட மனப்போக்கில் மாற்றம் ஏற்படுத்தாதுவிடினும், புதிய பண்பாடு மேற்றளத்தில் பல்வேறு மாற்றங்களை அவரில் ஏற்படுத்துகிறது.

இலங்கைத் தமிழர்களாகிய நாம், எமது பண்பாடு என்னும் போது எதனைக் கருதுகிறோம்? எமக்கெனத் தனியான பண்பாடு உள்ளதா அல்லது எமது பண்பாட்டை இந்தியத் தமிழ்ப் பண்பாட்டின் ஒரு கூறாகக் கொள்ளலாமா? இந்நூற்றாண்டின் முப்பது நாற்பதுகளில் தமிழ்நாட்டிலிருந்து வெளிவந்த சஞ்சிகைகள் யாழ்ப்பாணத்து வாழ்க்கை முறையில் செல்வாக்கை ஏற்படுத்தின என்பதை மறுப்பதற்கில்லை. ஆயினும், யாழ்ப்பாணத்தில் ஏற்கெனவே இருந்த பண்பாட்டுக்கூறுகளுடன் இப்புதிய அம்சங்களையும் இணைத்து அவர்கள் தமக்கென ஒரு தனித்துவமான பண்பாட்டை உருவாக்கிக் கொண்டார்கள். பின்னர், அந்த யாழ்ப்பாணப் பண்பாடானது மேற்குலகிலிருந்து வந்த செல்வாக்கையும் தனக்கேற்ற வகையில் மாற்றியமைத்து உள்வாங்கிக்கொண்டது. இவ்வாறு பல தாக்கங்களுக்குட்பட்டு வளர்ந்ததே இன்று எமதென்று நாம் கூறும் பண்பாடு. இன்று இலங்கைத் தமிழர், உலகெங்கும் பரந்து வாழ்கின்றனர். இதனால் மேற்தளத்திலேனும் அவர்கள் தாம் வாழும் நாட்டின் பண்பாட்டினால் பாதிப்புறுகின்றனர். இவ்வாறு பல்வேறு பண்பாட்டுத் தாக்கங்களுக்கு உட்பட்ட தமிழர்கள் அனைவரும் யாழ்ப்பாணத்தில் மீண்டும் ஒன்று கூடி வாழும் நிலை உருவாகும் போது, தமிழ்ப்பண்பாட்டில் எவ்வாறான மாற்றங்கள் ஏற்படும் என்பது சுவாரஸ்யமான ஆய்வுக்கு வழிவகுக்கும்.

பிற நாடுகளில் பிறந்து அங்கு வாழ்ந்துவரும் எமது சந்ததியினர் அந்தந்த நாட்டு மொழியையும் பண்பாட்டின் நல்ல அம்சங்கள் பலவற்றையும் எடுத்துக்கொள்ளும் அதே நேரத்தில் தாம் தமிழர் தான் என்று உறுதியாக நம்பி வாழ நாம் தமிழ்ப்பண்பாட்டின் எந்தெந்த அம்சங்களைக் கொடுக்கப் போகிறோம் என்று நாம் தீர்மானிக்க வேண்டியுள்ளது.

நியூசிலாந்தில் வாழும் ஆங்கிலேயர் தவிர்ந்த ஏனைய இனத்தவரில் அங்கு பிறந்து வளர்ந்தோர் தத்தமது பண்பாட்டின் சில அம்சங்களைப் புரிந்து கொள்ளும் வகையில் 'My Culture' என்ற தலைப்பில் ஒரு வினாக்கொத்து தயாரித்துள்ளனர். ஒவ்வொரு விஷயங்களின் கீழும் தரப்பட்ட கேள்விகளுக்கு விடை கூறுவதன் மூலம் ஒருவர் தனது பண்பாட்டின் முக்கிய சில அம்சங்களை அறிந்து கொள்ளலாம் எனக் கருதியே அதனை உருவாக்கி

யுள்ளனர். எங்கள் பண்பாட்டைப் போலவே சில பண்பாடுகளில் எந்த முடிவாயினும் குடும்பம் சார்ந்தே அதனை எடுக்கிறார்கள். ஒருவர் தன்னைத் தனியாகப் பிரித்துப் பார்க்காது குடும்பத்தின் அங்கமாகவே பார்ப்பதும் பணத்தைக் குடும்பத்தின் பணமாகக் கருதுவதும் எமது பண்பாட்டில் உள்ளது என்பது எமக்குத் தெரியும். நேரத்துக்கு ஒருவர் கொடுக்கும் முக்கியத்துவம் பற்றிய கருத்தும் பண்பாட்டுக்குப் பண்பாடு வேறுபடும். உதாரணமாக ஒரு கூட்டம் 5 மணிக்குத் தொடங்குவதாகத் தீர்மானித்தால் அந்த நேரத்துக்கு ஆரம்பிப்பது எமக்கு முக்கியமா? வேலை என்பது எமக்கு எவ்வளவு முக்கியம் என்பது எம் அனைவருக்கும் தெரியும். கோழி மேய்த்தாலும் கோறனமேந்தில மேய்க்க வேண்டும் என்றும், உத்தியோகம் புருஷ லக்ஷணம் என்றும் கூறுகிறவராயிற்றே நாம். பொதுவாகப் பண்பாட்டில் காணப்படும் முக்கிய விஷயம் ஒருவருடன் ஒருவர் தொடர்புறுதல். நாம் பல விஷயங்களை வெளிப்படையாகக் குடும்பத்தில் பேசுவதில்லை என்பது எமக்குத் தெரியும். அதில் ஒன்று ஒருவரில் ஒருவர் கொண்டுள்ள அன்பு. கணவன் மனைவியோ அல்லது பெற்றோர் பிள்ளைகளோ தத்தமது அன்பை வெளிப்படையாகக் கூறுவதில்லை. மற்றது, சமூகத்தில் முக்கிய அந்தஸ்த்தைப் பொறுத்தவரை நாம் யாருக்கு முக்கியத்துவம் கொடுக்கிறோம்? நாம் வைத்தியருக்கும் நீதிபதிக்கும் கொடுக்கும் முக்கியத்துவம் எமக்குத் தெரியும். அதுபோல, தமிழ்ப் பண்பாட்டில் ஆணுக்கா பெண்ணுக்கா முக்கிய இடம்? இதற்கான விடை அனைவருக்கும் தெரியும். சொத்து பற்றிய தமிழரது கருத்து எம் அனைவருக்கும் தெரியும். ஒரு BMW car, நான் கறைகளில் ஒரு வீடு, அது நிறைய மின்சார சாதனங்கள், நேரத்து நேரம் அணிவதற்கு ஆடம்பரமான ஆடைகள், தங்க, வைர நகைகள் என்பன எம்மவரின் அந்தஸ்தைப் பறைசாற்றும் சாதனங்கள் என்பது நான் சொல்லாமலே தெரியும்.

இது போன்ற பல விஷயங்கள் இந்த வினாக்கொத்தில் அடங்கியுள்ளன. இந்த வினாக்களுக்கு விடையளிப்பதால் ஒருவர் தனது பண்பாடு பற்றிப் பூரணமாக அறிந்து கொள்ளமுடியாது. அடிப்படையில் உள்ள சில விஷயங்களை விளங்கிக்கொள்ள உதவும். அந்த வினாக்கொத்தின் தமிழாக்கத்தை இங்கு தருகிறேன்.

1. முதலாவது வினா. நான் என்பது தனிப்பட்டவரைக் குறிக்கிறதா அல்லது ஒரு குழுவின் அங்கத்தவரைக் குறிக்கிறதா? Myself - Individualistic or Group Orien ted? அதாவது நான் என்பதைத் தனி ஒருவராகப் பார்ப்பதா அல்லது குடும்பத்தின் ஒரு அங்கத்தவராகப் பார்ப்பதா? இந்த விஷயத்தின் கீழ் தரப்பட்டுள்ளவை பின்வருமாறு:

நான் எவ்வாறு என்னை நோக்குகிறேன்? நான் சார்ந்துள்ள எனது குடும்பத்தைவிட, நான் என்ற தனித்தன்மை எனக்கு முக்கியமா?

அரசியல், சமயம், வாழ்வு பற்றி எனக்குத் தனியான கருத்துக்கள் உள்ளதா? அல்லது எனது குடும்பத்தின் கருத்தை இந்த விஷயங்களில் நான் ஏற்றுக் கொள்கிறேனா?

யாருடைய விருப்பங்களை நான் முக்கியமாகக் கருதுகிறேன். என்னுடையதையா? அல்லது என்னுடைய குடும்பத்துடையதா?

எனது குடும்பத்தைக் கவனிப்பதற்காக நான் எனது வாழ்க்கை முறையை விட்டுக் கொடுப்பேனா?

எனது தனித்துவம் எனக்கு முக்கியமா? அல்லது நான் எனது குடும்பத்துடன் வாழ்வதில் மகிழ்ச்சியடைவேனா?

*2.* பாதுகாப்பு — பணமா குடும்பமா? Security - Money or Family? அதாவது எனக்குப் பணம் பாதுகாப்பளிப்பதாக நான் கருதுகிறேனா அல்லது எனது குடும்பம் என்னைப் பாதுகாக்கும் என்று கருதுகிறேனா? இதன் கீழ் வரும் கேள்விகள் வருமாறு —

பணம் வைத்திருப்பது என்பதை முக்கியமாகக் கருதுகிறேனா?

ஏன் பணம் எனக்குத் தேவை என்று நினைக்கிறேன்? அது எனக்குப் பாதுகாப்பு தரும் என்று நினைக்கிறேனா? அல்லது அது எனது அந்தஸ்தை உயர்த்தும் என்று கருதுகிறேனா? அல்லது அது எனது வெற்றியின் அளவுகோல் என்று கருதுகிறேனா?

பணம் தனிப்பட்ட முறையில் சொந்தம் கொண்டாடப்பட வேண்டுமா? நான் எனது பணத்தை எனக்கு மட்டும் தனியாக உரியது என்று நினைப்பேனா அல்லது அது எனது குடும்பத்துக்குரிய பணம் என்று கருதுவேனா? எனக்குத் தனியாக வங்கிக் கணக்கு இருக்கவேண்டும் என்று எண்ணுவேனா?

*3.* நேரமும் ஒழுங்கமைதியும். Time and being organised. அதாவது ஒரு காரியத்தைச் செய்யும்போது சரியான நேரத்துக்குச் செய்ய வேண்டுமா என்ற நேரத்தைப் பற்றிய கருத்தும் ஒழுங்கமைதியுடன் அதாவது organised ஆக இருப்பதும். இதன் கீழ்வரும் கேள்விகள் வருமாறு —

நேரம் என்பது எனக்கு முக்கியமானதா? எனது வாழ்க்கை மணிக்கூடு காட்டும் நேரத்திற்கு அமைவாக ஒழுங்கமைக்கப்பட்டுள்ளதா? நான் ஓர் இடத்திற்குச் சொல்லும் போது சரியான நேரத்திற்கு அங்கிருக்க வேண்டுமென்று கருதுவேனா?

மற்றவர்கள், அதாவது நண்பர்கள், employers, குடும்பம், சகாக்கள் ஆகியோர் குறித்த நேரத்திற்கு வரவேண்டும் என்று எதிர்பார்ப்பேனா அல்லது பிந்தினாலும் பரவாயில்லை என்று கருதுவேனா?

ஒருவர் வேலைக்குக் குறித்த நேரத்திற்கு வரவேண்டும் என்று நினைப்பேனா அல்லது அதுபற்றி எனக்கு அக்கறையில்லையா?

எனது ஒவ்வொரு நாளும் ஒழுங்கமைவுடனும் ஒழுங்காகவும் இருக்க வேண்டுமென்று விரும்புவேனா? அதாவது ticket வாங்குவதற்கும் பஸ் நிறுத்தத்திலும் மக்கள் Queueவில் நின்று ஒழுங்காகச் செல்லவேண்டும் என்று எதிர்பார்ப்பேனா? மற்றது எதிர்காலத்திற்காகப் பணம் சேர்க்க வேண்டும் என்ற கருத்து டையேனா அல்லது உழைக்கும் பொழுதே செலவழிக்க வேண்டும் என்ற விருப்பம் உடையேனா?

*4.* குடும்பம்: அதாவது குடும்பம் என்று எது கருதப்படுகிறது என்பதும் அதனுடன் உள்ள உறவும் இங்கு, கேள்விகளாகக் கேட்கப் படுகிறது.

குடும்பம் என்ற சொல்லைக் கேட்டதும் நான் உடனே தாய், தகப்பன், பிள்ளைகளை மட்டும் உள்ள குடும்பத்தை நினைப்பேனா அல்லது எனது பெற்றோர், சகோதரிகள், சகோதரர்கள், பெற்றோரின் பெற்றோர், சகோதரிகள், சகோதரர்கள், பெற்றோரின்

பெற்றோர், மாமன் மாமிமார், மச்சாள் மச்சான், ஒன்றுவிட்ட சகோதரர்கள் ஆகியோரை எனது குடும்பமாக நினைப்பேனா?

எனது உடனோ அல்லது மாமா மாமியுடனோ போய் வாழ்வது என்பது எனக்கு எவ்வளவுக்கு இலகுவாயிருக்கும்?

எனக்கு வேலையோ அல்லது என்னிடம் பணமோ இல்லாவிடின் எனது தாயின் அல்லது தந்தையின் சகோதரர்கள் என்னை விருப்பத்துடன் கவனித்து எனது தேவைக்குப் பணம் தருவார்களா?

*5. தொடர்புறும் வழிகள்:* Ways of communicating. சில பண்பாடுகளில் அனைத்தையும் முகத்துக்கு நேரே பேசித் தீர்ப்பார்கள். வேறு சிலவற்றில் குடும்பத்தவர் ஒருவருக்கு ஒருவர் பல சங்கடமான விஷயங்களைப் பேசுவதில்லை. சில பண்பாடுகளில் பாடல், நடனம் போன்றவற்றின் மூலம்தான் விஷயங்களை ஒருவருக்கொருவர் தெரியப்படுத்துவார்கள். இதன் கீழ் கேட்கப்பட்டுள்ள கேள்விகள்:

கதைப்பதன் மூலம் மற்றவருடன் தொடர்புறுவது எனக்கு சௌகரியமானதா? அல்லது வேறு வழிகளில் உடல் மொழி (body language) மூலம் அல்லது பாடல்கள் மூலம் தொடர்புகொள்வது சுலபமா?

*6. முடிவுகளை எடுத்தல்: தனிப்பட்ட முறையிலா இல்லையா?* Making decisions invidualistic or not? அதாவது ஒருவர் முடிவுகளை எடுக்கும்போது எவ்வாறு எடுக்கிறார் என்பதும் அதை வெளிப்படுத்தும் முறையும். இதன் கீழ் உள்ள வினாக்கள்—

எனது சொந்தக் கருத்துக்களை வழங்குவதற்கு நான் எனக்காகப் பேசுவேனா? அல்லது எனக்காக மற்றவர்கள் பேசுவதை அனுமதிப்பதில் நான் மகிழ்வேனா?

கூட்டங்கள் கட்டுப்படுத்தப்பட்ட முறையில் அமைதியாக ஒழுங்காகக் குறித்த நேரத்தில் நடக்கவேண்டும் என்று எண்ணுவேனா அல்லது இவை குறித்து எனக்கு எதுவித அக்கறையுமில்லையா?

கூட்டத்தில் இடம்பெறும் கருத்தை எதிர்த்தோ சார்பாகவோ பேசுவேனா?

*7. எனது சமூகத்தில் யார் முக்கியமானவர்?* Who is important in my community? அதாவது ஒரு சமூகத்தில் உள்ளவர்கள் யாரை முக்கியமாகக் கருதுகிறார்கள் என்பதன் மூலம் அவர்களது பண்பாட்டின் ஒரு அம்சத்தை விளங்கிக் கொள்ளலாம். இது பற்றிய வினாக்கள் வருமாறு—

யாரை எனது சமூகத்தில் முக்கியமானவராகக் கருதுவேன்?

நீதிபதி, அரசியல்வாதி, வைத்தியர்

மிகப் பெரிய செல்வந்தர்

ஆண் அல்லது பெண்?

வறிய மனிதன்

வயது முதிர்ந்தவர்

எனது சொந்தப் பிள்ளைகள்

*8. உடமைகள்:* Possessions அதாவது சொத்து பற்றிய கருத்து. இதுபற்றி வினாக்கள் வருமாறு

வீடு, car, boat, ஆடைகள், விளையாட்டுசாதனங்கள், பணம் போன்றவை எனக்கு முக்கியமானவையா? அல்லது இவையன்றி நான் மகிழ்ச்சியாக வாழ்வேனா?

இந்தப் பொருட்களை நான் கொண்டிருந்தால் அவை எனது

சொந்தப்பொருளாகக் கருதுவேனா? அல்லது நீண்ட காலத்துக்கு மற்றவர்களுடன் இவற்றைப் பங்கு போட விரும்புவேனா? அல்லது அவர்களுக்குச் சொந்தமாக வழங்க விரும்புவேனா?

*9. நிலம்: அதனைச் சொந்தம் கொள்ளுதலும் பயன்படுத்துதலும்.* Land-ownership and use.

நிலமும் கட்டடங்களும் தனிப்பட்ட முறையில் எனக்குச் சொந்தமாக இருக்கவேண்டுமென்று விரும்புவேனா? அல்லது மற்றவர்களுடன் இணைந்து இவற்றை வைத்திருக்க விரும்புவேனா?

எனக்குச் சொந்தமான நிலங்கள் கட்டிடங்கள் பயன்படுத்தப்பட வேண்டும், திருத்தப்பட வேண்டும் என்று நினைப்பேனா? அல்லது அவை தொடப்படாது, அப்படியே இருக்கவேண்டும் என்று நினைப்பேனா?

Sentimental காரணங்களுக்காக நிலத்தை வைத்திருக்க வேண்டும் என்று நினைப்பேனா?

*10. வேலை. அதில் தரப்பட்ட வினாக்கள் வருமாறு—*

நான் பாதுகாப்புக்கும் வருவாய்க்கும் வேலையில்தான் தங்கியிருக்கிறேனா? அல்லது எனது குடும்பத்துடன் இருக்கும்வரை வேலையின்றி மகிழ்ச்சியாக இருப்பேனா? எனக்கு வேலை இல்லையானால் எனது குடும்பத்தவர் என்னை வைத்திருப்பார்களா?

வேலைத்தளத்தில் யாரை அதிக அதிகாரம் கொண்டவராகக் கருதுவேன்? Boss - ஐயா அல்லது அங்குள்ள வயது முதிர்ந்தவரையா?

வேலையில் அனைவரும் சமமாகக் கடுமையாக உழைக்க வேண்டும் என்று கருதுவேனா? அல்லது வயது முதிர்ந்தவர் அதிகம் வேலை செய்யத் தேவையில்லை என்று நினைப்பேனா?

இவையே பண்பாட்டின் அடிப்படை அம்சங்களை அறிய உதவும் வினாக்கள். இங்கு பிறந்து வளரும் தமிழ்ப் பிள்ளைகள் இந்த வினாக்களுக்கு விடையளிப்பதன் மூலம் தமது பண்பாட்டின் சில அம்சங்களை விளங்கிக் கொள்ளலாம்.

உலகின் ஒவ்வொரு பகுதியில் உள்ளோரும் வந்து வாழும் அவுஸ்திரேலியா பல்லினச் சமூகத்தைக் கொண்டது. இதனால் இங்கு வாழும் தமிழ்ப் பிள்ளைகளின் நடத்தையில், பழக்க வழக்கங்களில் பல்வேறு மாற்றங்கள் ஏற்படுவது தவிர்க்க முடியாத ஒன்று. அதுவும் இனக்கலப்புகள் ஏற்பட ஏற்பட இந்த மாற்றங்கள் அதிகரித்த அளவில் ஏற்படும். ஆயினும், நாம் தமிழர் என்று கூறும் போது எமக்குரிய பண்பாட்டின் அடிப்படையான பெறுமதிகள் என்ன? அவை மாறுவதற்கு நாம் அனுமதிக்கலாமா? போன்ற கேள்விகள் இங்கு எழுகின்றன. மொழியை உள்ளடக்கிய எமது பண்பாடே தமிழர் என்ற எமது அடையாளத்தை உருவாக்குகிறது. நாம் பண்பாட்டின் அடிப் படையை இழக்கும்போது எமது அடையாளத்தை இழக்கிறோம். இவ்வாறு அடையாளத்தை இழந்தால் நாம் யார் என்ற கேள்விக்கு நாம் விடை தெரியாது தவிக்க நேரிடும். எனவே எனது சொந்தப் பண்பாடு என்பது எனது வாழ்வில் எத்தகைய இடத்தை வகிக்கிறது? அதை இழப்பதால் நான் எதையெதை இழக்கப் போகிறேன்? என்ற கேள்விகளுக்கான விடைகளை அவரவரே தேடிக் கொள்வது அவரவர் எதிர்காலத்திற்கும், ஆத்மாவுக்கும் நன்மை செய்யும்.

●



# தீபாவளி

சௌந்தரி சிவானந்தன்

தீபாவளிக்கென்று தீபங்கள் ஏற்றியது
தெரியாமல் தொலைஞ்சு போயாச்சு
தேனூறும் ஆசையுடன் தெம்மாங்கு பாடியதும்
தெவிட்டாத சர்க்கரை ஆயாச்சு
அகத்தில் பூத்துநின்ற அழியாத ஆசைகளை
அலையோடு போகாமல் அடக்கியே வைச்சாச்சு
ஆறாத ஏக்கத்தில் ஆத்திரத்தின் உச்சத்தில்
அம்பலமாய்த் தெரிகின்ற அநியாயக் காட்சிகளில்
ஆர்ப்பாட்டம் மறந்தே போயாச்சு

பள்ளிக் குழந்தைகளின் பால்வடியும் பூமுகமோ
உள்ளத் துடிப்பாலே வேங்கையின் முகம் போலாச்சு
மெத்தையிலே உறங்கிய சித்திரப் பெண்மணியோ
பத்தையிலே பாம்புடன் உறங்கிடும் பரிதாப நிலையாச்சு
மாளிகையில் வாழ்ந்த மச்சக்காரர் எல்லாம்
மண்குடிசையில் வாழும் தரித்திர நிலையாச்சு
சிரிப்புடன் வாழ்ந்த ஈழத்தாய் மக்களின்று
வாழும் வாழ்க்கையின் அவஸ்தையும் பார்த்தாச்சு


அன்று பொன்னுக்கு ஆசைப்பட்ட
கண்ணான என் தங்கை இன்று
மண்ணுக்காய் உயிர் துறந்தாள்
சொன்ன சொல் கேளாமல்
துள்ளித் திரிந்த என் சின்னத் தம்பியின்று
சன்னங்கள் துளைத்திடவே களத்திலே மாய்ந்துவிட்டான்

கள்ளுக் கொட்டிலிலே செல்லத் தமிழினில்
வெட்டிப் பேச்சுப் பேசிவந்த என் அப்பா
வேங்கையின் அரண் காக்க
வரிந்துகட்டிப் போனவர்தான் வராமலே போய்விட்டார்
கோயிலென்றும் குளமென்றும் ஓயாமல் திரியும் அம்மா
கூடையிலே சாப்பாடு கொண்டு சென்று குடுக்கையிலே
குறிவைத்த செல்லுக்குக் குருதியோடு இரையானாள்



தோழியின் வீட்டையும் தோட்டத்துக் கிணத்தையும்
சுத்தி வந்து வெட்டியாகப் பொழுதைக் கழிக்கும் அக்கா
செம்மணிக்குள் புதைத்துவிட்ட தோழியை நினைத்தவுடன்
அம்மணியின் தோளிலே ஆயுதம் தூங்கியது
சாரம்கட்டிச் சந்தியிலே சவரம் செய்து குந்தும் அண்ணன்
சந்தைக்குச் சாமான் வாங்க வந்த நண்பன்
அந்தியிலே பிணமான அவலச்செய்தி கேட்டு
நொந்துபோய் பந்தியிலே சேர்ந்துவிட்டான்

பிரிவின் துயரும் வேதனையின் பிடியும்
காலங்கள் கடந்தாலும் நினைவோடு சுழல்கின்றது
இது தொடருமா முடியுமா என்ற வேதனையில்
ஈழத்து மனிதர்கள் விளங்காமல் முழிக்கின்றார்
மனித உரிமை பேசுபவர் மௌனம் சாதிக்கின்றார்
பேச்சுவார்த்தையின் வேகம் பேச்சில் தெரியவில்லை
தமிழ்த்தாயின் முகத்தில் இல்லை நிம்மதி
தமிழ்மக்கள் உதட்டில் இல்லை புன்னகை
தீபங்கள் ஏற்றினால் துன்பங்கள் தீருமா
ஏற்றுவோம் தீபத்தை
எதிர்காலம் சொல்லட்டும் எமக்கும் தீபாவளி
●



## நட்பு

அறிவுமதி

எனது காதலியை
உனக்கு நான்
அறிமுகம் செய்து
வைத்தபோது
நீ
விழுங்கிய
எச்சிலில்
இருந்தது
நமக்கான நட்பு

புரிந்து கொள்ளப்படாத
நாட்களின்
வெறுமையான
நாட்குறிப்பில்
தாமாகவே வந்து
அமர்ந்திருக்கிறது
எனக்குப்
பிடித்தமான
உன் புன்னகை

# Gnanam Art Creations

**Printing of Visiting Cards, Letterheads, Brochures, Booklets etc..**
**Graphic Designs, Banners, Posters, Portraits & all type of Paintings..**
**Kolams, Stage Back Drops & Stage Settings for**
**Arangetrams & Cultural Functions..**













அரங்கேற்றங்கள்,
கலைநிகழ்ச்சிகளுக்கான
மேடை அமைப்புகள்,
பனர்கள்...
புத்தக அட்டைப்படங்கள்.
சகல விதமான ஓவியங்கள்,
உங்கள் அன்புக்குரியவர்களின்
படங்கள், கோலங்கள்
மற்றும் சகல விதமான விளம்பர
வேலைகளுக்கும்...

**Phone: (02) 9920 0508 / 0409 826 521**
**Fax: (02) 9920 3510**
**E-Mail: gnanamarts@optusnet.com.au**

நியாயமான கட்டணம்..
சிறந்த தரம்..

உங்கள் அனைத்து ஓவிய வேலைகளுக்கும்,
பிரிண்டிங் தேவைகளுக்கும்

# ஞானம் ஆர்ட் கிரியேசன்ஸ்

ஓவியத்துறையில் பலவருடகால அனுபவம்


Engaging Tamils with Exciting Entertainment from all around the world
Daily Local & International News
Carnatic Music Programes
Ladies Programmes
Local Productions
Children's Shows
Star Interviews
Live Telecast
Movies
Playout Facilities
Post Production & Studio Facilities
Sigaram
சிகரம்
MOVIE
CHANNEL
Only $29
per month
Phone: + 1300 303 174
International: +61 2 9748 4367
www.sigaram.tv
PREMIER TAMIL TELEVISION CHANNEL OF
AUSTRALIA AND NEW ZEALAND